

# யாழ்ப்பாண நினைவுகள் 3

வேதநாயகம் தபேந்திரன்

சிவகாமி பதிப்பகம்

# யாழ்ப்பாண நினைவுகள் 3

தினக்குரல் வார வெளியீடு, தினகரன் வார மஞ்சரி,
வீரகேசரியின் வடபிராந்திய பதிப்பு
யாழோசை ஆகியவற்றில்
பிரசுரமாகிய ஆக்கங்களின் தொகுப்பு.

**வேதநாயகம் தபேந்திரன்**
B.Com (Jaf), PGD.Population Development Studies (Jaf)
M.A in Development Studies (Jaf)

**சிவகாமி பதிப்பகம்**
'தேன் தமிழ்'
கைதடி வடக்கு, கைதடி,
யாழ்ப்பாணம்.

**யாழ்ப்பாண நினைவுகள்**

வேதநாயகம் தபேந்திரன்

பதிப்புரிமை © வேதநாயகம் தபேந்திரன்

சிவகாமி பதிப்பகத்தால் *140/1* மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
தேவி *Printers* இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

**சிவகாமி பதிப்பகம்**
தேன்தமிழ் கைதடி வடக்கு, கைதடி, யாழ்ப்பாணம்
*021 205 7432, 0771167667*

**தேவி *Printers***
*021 300 3030*
*www.deviprinters.net*

முதற்பதிப்பு ஏப்ரல் *2016*

*ISBN No 978 - 955 - 41392 - 4 - 4*


பக்கங்கள் *200*

விலை இலங்கை ரூபா *390*


*€ 5*

# எழுத்துலகில் என் பெரு நன்றிக்குரியவர்கள்


எழுத்தாணி பிடிக்கவைத்த என் தந்தை
அமரர் வேலுப்பிள்ளை வேதநாயகம் அவர்கள்



என் எழுத்துக்களை பாராட்டி ஊக்குவித்த
உதயன் நாளிதழ் பிரதம ஆசிரியர்
மதிப்புயர் ம.வ.கானமயில்நாதன் அவர்கள்



யாழ்ப்பாண நினைவுகள் எனும் ஆவணத்திற்கு தொடர்
களம் தந்த தினக்குரல் வார வெளியீட்டின் முதன்மை
ஆசிரியர் மதிப்புயர் பாரதி இராஜநாயகம் அவர்கள்





# பதிவுகளாகிய பெறுமதி மிகு அரிய வரலாற்றுத் தகவல்கள்

உலகத்தில் மக்கள் வாழ்விடங்கள் பலவாக இருந்தாலும் அநேகமான சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணம் தனித்துவமானதாகவும் சாதனைகள் புரிந்த மாவட்டமாகவும் இருந்து வந்துள்ளது.

பெரிதாகச் சொல்லக்கூடிய இயற்கை வளங்கள் பெருமளவில் இல்லாவிட்டாலும் மனித வளங்களாலும், அவற்றை சாதகமானதாக உச்ச அளவுக்கு பயன் படுத்துவதாலும் உலகமே யாழ்ப்பாணத்தைப் பார்த்து வியப்படைகிறது என்பது உண்மை.

1960 களுக்கு முந்திய யாழ்ப்பாணம் வேறு- 60 களிலிருந்து 77 வரை இன்னொரு வகையான யாழ்ப்பாணம்-அது போல 77 முதல் 83 வரை வித்தியாசமான யாழ்ப்பாணம்- 83 இல் ஆரம்பித்து 2009 வரை பல்வேறு இடர்பாடுகளுக்கு நேரடியாக முகம் கொடுத்து, விரும்பத்தகாத விளைவுகளுக்கு விலையாக தேடிய செல்வங்களை மட்டுமல்ல... அரிதான உயிர்களையும் கொடுத்த நிகழ்வுகள் பல.

ஏதேதோ காரணங்களுக்காக பல தகவல்கள் பதிவுகளாகவில்லை அல்லது முழுமையாகப் பதிவுகளாக்கப்பட வில்லை. கால ஓட்டத்தில் தகவல்கள் மறக்கப்படலாம் அல்லது திரிபுபடுத்தப்படலாம். பெரியதோர் நிலப் பரப்பின் நெடுங்கால வரலாற்றுத் தகவல்களை தேடுதல், வகைப்படுத்துதல், தொகுத்தல், நம்பத்தக்கதாக பதிவுகளாக்கல் என்பவை நிறுவன ரீதியாகச் செயற்பட்டால் தான் சில வேளை குறிப்பிடக்கூடிய அளவுக்கு சாத்தியமாகலாம்.

தனிமனித முயற்சியாக அதுவும் அரசாங்க உத்தியோகத் தரான திருமிகு வேதநாயகம் தபேந்திரனின் தேடலும் ஆவணப் படுத்தலும் பாராட்டத்தக்கதாக உள்ளன கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தரான தபேந்திரனின் பெரு முயற்சியால் ஏற்கெனவே 'பூத்திடும் பனந்தோப்பு" யாழ்ப் பாணத்து நினைவுகள் பாகம் 1 யாழ்ப்பாணத்து நினைவுகள் பாகம் 2 என நூல்கள் வெளியாகி வாசகர்களின் பேராதரவைப் பெற்றுள்ளன.

பெறுமதிமிகக அரிய வரலாற்றுத் தகவல்கள் என்பதால் இந்நூல்களுக்கான அறிமுக நிகழ்வுகள் பல இடங்களில் நடை பெற்றுள்ளன. இந்நூல்களுக்கான தேவையை புலம் சிதறி வாழ்பவர்களும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எங்கள் மக்களின் வாழ்வின்; நோக்கும் போக்கும் மற்றும் கள அனுபவங்கள்-தகவல்களின் தொகுப்பாக-"யாழ்ப்பாணத்து நினைவுகள் மூன்றாவது பாகம்", வெளியாகின்றது என்னும் செய்தி காலத்தின் தேவையாகவும் அனுபங்களைச் சுமந்த மக்களுக்கு ஆறுதலைத் தருவதாவும் அமைகிறது.

ஒரு புறம் போட்டிப் பரீட்சைகளுக்கு தோற்றுவோருக்கான, கல்லூரி மாணவர்களுக்கான பொது அறிவு நூல்களைத் தந்த தபேந்திரன் மறுபுறம் சமூக சேவை உத்தியோகப்பணிகளோடு வாழ்வியல் அனுபவங்களை அரிய வரலாற்றுத் தகவல்களாக் கிக் கொண்டிருப்பதால் தபேந்திரனை வாழ்த்திப் பாராட்டு கின்றேன்.

**உடுவை எஸ்.தில்லைநடராசா**

ஓய்வு நிலை அரசஅதிபர், கல்வி அமைச்சு மேலதிகச் செயலாளர்.

# நினைவுகள் மூன்றில்

யாழ்ப்பாண நினைவுகள் பாகம் - 3 இல் உங்களைச் சந்திக்க திருவருள் பாலித்த இறைவனுக்கு முதற்கண் எனது நன்றிகள்.

2014 ஜூலை 27 இல் பாகம் 1, 2015 ஜூலை 26 இல் பாகம் 2 தற்போது 2016 ஏப்பிரல் 03 இல் பாகம் 3 என நூல்கள் வேகமாக வெளிவர ஆதரவு தந்த வாசகர்களுக்கும் நன்றிகள் பல.

2012, 2013 ஆம் ஆண்டுகளில் தினக்குரல் வார வெளியீட்டிலும் தினகரன் வார மஞ்சரியிலும், வீரகேசரியின் வட பிராந்திய பதிப்பான யாழோசையிலும் வெளியான ஆக்கங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளது.

இரண்டு வருடங்கள் பத்தி எழுத்துக்களாக எழுதிய போது வாசகர்கள் தந்த பேராதரவும், நூல்களாக வெளிவந்தபோது யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு என அறிமுக விழாக்களை நடத்தித் தந்த அன்பர்கள் தந்த ஆதரவும் இந்நூலின் வெற்றியை உறுதி செய்தது.

எனது ஆக்கங்களை வெளியிட்டு ஊக்குவித்த உதயன், வீரகேசரி, தினக்குரல் வார வெளியீடு, தினகரன் வாரமஞ்சரி, யாழோசை ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் என்றும் என் பெரு நன்றிக்குரியவர்கள்.

எனக்கு மகிழ்வான வீட்டுச் சூழலை அமைத்து என்றும் என் எழுத்துப் பணிக்கு உறுதுணை புரிந்துவரும் அன்பு மனையாள் சற்குணேஸ்வரி, அன்பு மகன்கள் இலக்கியன், இந்துயன் ஆகியோருக்கும் என் நன்றிகள்.

இந்த நூலை தமது சொந்த நூல்போல நேசித்து மிகமிக அழகுடனும் தொடர்ச்சியாகவும் பதிப்பித்துத் தரும் யாழ்ப்பாணம் தேவி பிரிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் நன்றிகள். ஊடக அனுசரணை என்பதே பாகம் 1,2 நூல்களின் பெரு வெற்றிக்கு காரணமெனலாம். நூல் வெளியீட்டு விழாக்கள், அறிமுக விழாக்கள் நடத்தியபோதெல்லாம் செய்திகளை வெளியிட்ட பத்திரிகைகள், செய்தி இணையத் தளங்கள் வானொலிகள், தொலைக்காட்சி நிலையங்கள் யாவைக்கும் நன்றிகள்.

இந்த நூல்களை இலங்கையிலும், உலக நாடுகளிலும் விற்பனை செய்துவரும் புத்தகசாலைகளுக்கும் மனமார்ந்த நன்றிகள். நூல் தொடர்பான கருத்துக்களை நேரிலும் தொலைபேசி மூலமும் கூறி ஊக்குவித்து வரும் வாசகர்க ளுக்கும் நன்றிகள்.

நாட்டின் ஏனைய பிரதேச தமிழ் பேசும் மக்களும் இது போல தமது வாழ்வியலை எழுத்து மூல ஆவணமாக்க முன்வர வேண்டும் என்பது எனது பேரவா ஆகும்.

யாழ்ப்பாண நினைவுகளை புதிதாக சுமந்து காலம் கனியும் போது பாகம் 4 இல் மீண்டும் சந்திப்போம்.



**வேதநாயகம் தபேந்திரன்**

தேன் தமிழ் கைதடி வடக்கு, கைதடி.

# பொருளடக்கம்


1. யாழ்தேவியின் நினைவுகள் 12

2. காணிவேல் கண்காட்சிக் காலங்கள் 22

3. அருகிப் போன வேட்டையாடுதல் 31

4. அருகி வரும் பாரம்பரிய உணவு வகைகள் 44

5. பங்கர் (கால நினைவுகள்) 64

6. சோதனைச் சாவடி காலங்கள் 77

7. கடல் வலயத் தடையும் மீனவர் வாழ்க்கை முறையும் 90

8. ரியூசன் கால நினைவு மீட்டல் 107

9. போர்க்காலமும் மருத்துவமும் 121

10. நல்லெண்ணையும் கைத்தொழிலின் கால மாற்றங்களும் 136

11. அருகிப்போகும் சம்பிரதாயங்கள் 149

12. பூங்காவனத் திருவிழா 161


13. யாழ்ப்பாணத்தில் கொம்யூனிக்கேசன் யுகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும் 173

14. வடபகுதி புகையிரதச் சேவைகள் 182

15. எம்மவர் வாழ்விலும் நடைபெற்ற மணமகன் இல்லாத திருமணங்கள் 189

16. சமூக மாற்றத்தை ஏற்படுத்திய யாழ்ப்பாணப் பெண்களும் சைக்கிளும் 197

17. கால வெள்ளத்தில் கரைந்துபோன மாலைநேரச் சந்தைகள் 203




“பட்டங்கள் வழங்கும் பல்கலைக்கழகம் பற்றி நீங்கள் அறிவீர்கள். பத்திரிகைத் துறையும் ஒரு பல்கலைக்கழகம் தான். இத் துறையில் அரசியல், பொருளாதாரம், சமுதாய அமைப்பு, விவசாயம், கைத்தொழில் போன்ற விடயங்களையும் உலக மக்களின் வாழ்வும் வளமும் பற்றிய விபரங்களையும் நீங்கள் கற்றுக்கொள்ள முடியும். இவ்விடயங்களில் நீங்கள் பெறும் அனுபவமும் முதிர்ச்சியும் உங்களை முழு மனிதனாக்கும்.”

**எஸ்.ரி.சிவநாயகம்,**

நன்றி - வீரகேசரி அமுதவிழா (80 ஆம் ஆண்டு)

சிறப்பு மலர் 06.08.2010




# யாழ்தேவியின் நினைவுகள்

"யாழ் தேவி

நீ யார் தேவி

நீ யாருக்காக ஓடுகிறாய்

நீ ஓடுவதும் நிற்பதுவும் யாருக்காக. ...."

1980 களின் நடுப்பகுதியில் தமிழ் தேசியப் பத்திரிகையொன்றில் வாசித்து நினைவில் நிற்கும் புதுக் கவிதை வரிகள் அவை. யாழ்ப்பாண மக்களின் வாழ்வுடன் இரண்டறக் கலந்தவற்றில் யாழ்தேவிப் புகையிரதமும் ஒன்று. 1980 களில் யுத்தத்தின் சத்தம் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்த நாட்களில் அதன் எதிரொலி யாழ்தேவி மீதும் பட்டது.

அதனால், அக்காலத்தில் யாழ்தேவி சில நேரங்களில் கிளிநொச்சியுடனோ அல்லது வவுனியாவுடனோ, சில சமயம் அநுராதபுரத்துடனோ நின்றுவிடும். இயல்பு நிலை மீளத் திரும்ப ஆரம்பித்ததும் யாழ்தேவியும் காங்கேசன்துறை வர ஆரம்பித்துவிடும். அதனைக் குறியீடாகக் காட்டியதே மேலே உள்ள கவிதை வரிகள்.

வடக்கின் நடுமையமாகிய கிளிநொச்சிக்கு யாழ்தேவி உட்பட ரயில் சேவைகள் வர ஆரம்பித்து விட்டன. யாழ்தேவியின் வருகையையும் மீள் நினைவிற்கு உட்படுத்தப் பொருத்தமான தருணம் இது.

பிரித்தானிய ஆட்சியாளரால் 1864 ஆம் ஆண்டு இலங்கையில் ரயில் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆனால்,1902 ஆம்ஆண்டில் தான் யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பொருட்களையும் கடிதங்களையும் இவற்றுடன் சேர்த்து ஆட்களையும் காவிச் செல்ல ரயில்கள் பயன்பட்டன. அக்கால ரயில்கள் நிலக்கரியை எரித்துப் பெறப்பட்ட வெப்பத்தின் மூலம் நீராவியைக் கொண்டு இயக்கப்பட்டன. நீராவி எரியும் போது கரும் புகைகள் திரளாகக் கிளம்பும். இதனால், இந்த ரயிலைக் கரிக்கோச்சி எனப் பொதுமக்கள் அழைத்தார்கள்.

கன்னங்கரேலென கறுவல் ஆட்கள் போகும் போது கரிக்கோச்சி போகுது என அழைக்கும் மரபு இதிலிருந்தே வந்தது. கரிக்கோச்சிகளில் ரயில்ப் பெட்டிகள் மிகக் குறைவாகவே இருந்தன. ஏனெனில், நீராவி இயந்திரம் உந்தித் தள்ளக் கூடிய அளவுக்கேபெட்டிகள் பூட்டப்பட்டிருக்கும். நீராவியினால்

தள்ளப்படும் ரயில்களும் ஆமைவேகத்தில் தான் பயணிக்கும். இதனால்,நீண்ட தூரத்திற்குப் பயணிப்போருக்கு மிகவும் சலிப் புத் தட்டியது. வெண்ணிற ஆடைகளை விரும்பி அணியும் அக் காலத்தில் கரிக்கோச்சியின் நிலக்கரி புகைத் துகள்கள் படும் போது ஆடை அசிங்கமாகி விடும். கரிக்கோச்சி யுகத்திற்கு விஞ் ஞானம் விடை கொடுத்தது.

அதன் பயனாக 1956 ஆம் ஆண்டில் எரிபொருளால் இயங்கும் எக்ஸ்பிரஸ் ரயில் யாழ்தேவி என்ற பெயரில் வடக்கு நோக்கி காங்கேசன்துறைக்கு வந்தது. காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக் கோட்டை நோக்கித் திரும்பும் போது உத்தரதேவி என புகையிரத திணைக்களத்தால் பெயரிடப்பட்டது.

ஆனாலும், வடபகுதி மக்கள் வரும் போதும்,போகும் போதும் இந்த ரயிலை யாழ்தேவி எனத்தான் அழைத்தார்கள். ரயிலை பெண்ணாகத்தான் பார்த்தார்கள். யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலின் உயர்வுகளில் யாழ்தேவியின் பங்களிப்பும் மறக்க முடியாத பாகமாயுள்ளது. யாழ்தேவி ஓட ஆரம்பித்ததும் நாளாந்தம் பல்லாயிரக் கணக்கில் தென்பகுதிக்குப் போவதும் வருவதுமாக மக்கள் இருந்தார்கள்.

இதை விட மெயில் ரயில் எனப்பட்ட தபால் ரயில்.நகர் சேர் கடுகதி ரயில் எனப்பட்ட இன்ர சிற்றி ரயில் என்பனவும் கொழும்புக்கும் - காங்கேசன்துறைக்குமாக ஓடின. அதைவிட சரக்கு ரயில்களும் (Goods train) ஓடின. கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்திலிருந்து காலை 6 மணிக்கு வடக்கின் காங்கேசன்துறை நோக்கி யாழ்தேவி பயணத்தை ஆரம் பிப்பாள்.

அதேவேளை, காலை 5 மணி 50 நிமிடத்திற்கு காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிய பயணத்தை உத்தரதேவி ஆரம்பிப்பாள். இரு தேவிகளும் அநுராதபுரத்தில் காலை 10 மணிக்கும் 10.15 இற்குமிடையில் சந்திப்பார்கள். தொன்ணூறு வீதமான சாத்தியம் இவ்விரு தேவிகளுக்கும் அநுராதபுரச் சந்திப்பாகத்தான் அமையும். சராசரியாக 8 மணிநேரப் பயணத்தின் பின்பாக காங்கேசன்துறையை யாழ்தேவி சென்றடையும்.

அதேபோல் கொழும்புக் கோட்டைக்கு உத்தரதேவியும் சென்றடையும். காங்கேசன்துறையைச் சென்றடைந்த யாழ்தேவி உடனேயே என்ஜினை முன்பக்கமாக மாற்றி மீண்டும் பிற்பகல் இரண்டு மணிக்கு கொழும்பு நோக்கிப் பயணத்தை உத்தர தேவியாக ஆரம்பிக்கும். அதேபோல கொழும்புக் கோட்டையைச் சென்றடைந்த உத்தரதேவி தனது மீள் பயணத்தை பிற்பகல் 2 மணிக்கு யாழ்தேவியாக ஆரம்பிப்பாள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பல இலட்சம் மக்கள் நெருக்கமாகக் குடியிருந்ததும், அவர்கள் உத்தியோகம் வியாபாரம் உட்பட பல தேவைகளை நாட்டின் நாலாதிசைகளிலும் கொண்டிருந்ததுவும் ரயில் சேவைகள் அடிக்கடி நடைபெற வாய்ப்பாயிருந்தது. இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்கு அதிக வருமானம் ஈட்டித் தருவதாக வடபகுதிப் புகையிரத சேவைகள் இருந்தன. இதனால் அதிக சேவைகள் நடத்தப்பட்டன. மெயில் ரெயின் (Mail Train) எனப்பட்ட தபால் புகையிரதம் ஒவ்வொரு நாளும் மாலை 6.10 மணிக்குப் புறப்பட்டு காலை 6 மணிக்குக் கொழும்பைச் சென்றடைந்தது.

அதேபோல இரவு 7 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படும்

மெயில் ரெயின் காலை 6 மணிக்கு காங்கேசன்துறையை வந்தடைந்தது. தபால் தரம் பிரிக்கும் சேவை இந்த ரயிலில் இரவு முழுவதும் படுசுறுசுறுப்பாக நடைபெறும்.

இரு திசைகளிலிருந்து புறப்பட்ட மெயில் ரெயின்கள் நள்ளி ரவு 12 மணியளவில் அநுராதபுரத்தில் சந்திக்கும். தரம் பிரிக்கப் பட்ட தபால் பைகள் ஒரு ரெயினில் இருந்து மற்றைய ரெயினுக்கு மாற்றப்படும். இந்த மெயில் ரெயின்கள் காங்கேசன்துறை கொழும்பு மார்க்கத்தில் உள்ள அனைத்துப் புகையிரத நிலை யங்களிலும் நின்று தபால்களைச் சேகரித்தே வரும். தரம் பிரிக்கப்பட்ட தபால்கள் அநுராதபுரத்தில் வைத்து மாற்றப்பட்டு உரிய புகையிரத நிலையங்களில் இறக்கப்பட்டு தபாலகங்கள் ஊடாக விரைவாக விநியோகிக்கப்பட்டு விடும்.

நகர்சேர் கடுகதிப் புகையிரதம் இன்ர சிற்றி ரெயின் (Intercity Train) எனும் பெயரில் இரவு 8.30 மணிக்கு காங்கேசன்துறையிலி ருந்து புறப்படும். இது யாழ்ப்பாணம், அநுராதபுரம், பொல் காவெல ஆகிய நிலையங்களில் மட்டும் தரித்து நின்று நள்ளி ரவு 2.30 மணிக்கு கொழும்பைச் சென்றடையும்.

யாழ்தேவி, மெயில் ரெயின்கள் ஓடிய போது பஸ்ஸில் காங்கேசன்துறைக்குச் சென்று ரெயிலில் சீற் பிடித்து வந்து உறவுகளுக்கு கொடுக்கும் பழக்கம் இருந்தது. ரெயினில் சீற் பிடிக்க அவசரப்பட்டு ஏறி தண்டவாளத்தில் சிக்கி விபத்துகளால் உயிரிழப்பையும் அங்கவீனங்களையும் சந்தித்தவர்களும் இருந்தார்கள்.

வெள்ளிக்கிழமை இரவு கொழும்பிலிருந்து புறப்படும்

மெயில் ரயிலில் சனக் கூட்டம் நிரம்பி வழியும். வாரத்தின் இறுதி நாளாகையால் உத்தியோகத்தர் கூட்டம் தமது வீடுகளுக்கு வருவதே இதற்குப் பிரதான காரணமாகும். அதேபோல ஞாயிறு இரவு 6.10 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் மெயில் ரெயினிலும் சனவெள்ளம் முட்டிவழியும். இரவு முழு வதும் நின்று கொண்டே கால் கடுக்க கொழும்புக்கு போவோரும் இருந்தார்கள்.

உத்தரதேவி காலை 5.50 மணிக்குப் புறப்படும் போது அதில் ஏறிக் கொழும்புக்குச் சென்று நண்பகல் 2 மணியளவில் கொழும்பை அடைந்து தமது அலுவல்கள் முடிந்தால் இரவு 7 மணிக்கு மெயில் ரெயினில் ஏறி விடிகாலை யாழ்ப்பாணத்தை அடைவோரும் இருந்தார்கள். இவ்விதம் ரெயின் சேவைகள் மக்களுக்குத் தாராளமாகக் கைகொடுத்ததால் யாழ் - கொழும் புக்கான பஸ்ஸிற்கு டிமான்ட் குறைவாயிருந்தது.

பொது மக்கள் மினிபஸ்களில் குழுவாகப் பயணம் செய்யவே விரும்பினார்கள். ரெயினில் காற்றோட்டம் இருந்ததும் விபத்து கள் குறைவாக இருந்ததுவும் நிறையப் பொதிகளைக் கொண்டு செல்லக் கூடியதுமாக இருந்ததுவும் இதில் பயணிக்க மக்கள் விரும்பியமைக்கான பிரதான காரணிகளாக இருந்தன. யாழ்தேவியில் பயணமாகிய போது அறிமுகமாகி காதல் கொண்டு திருமணம் புரிந்தவர்களுமிருந்தனர். அரச உத்தி யோகத்தர்கள், ஓய்வூதியர்கள் பல்லாயிரக் கணக்கில் வசித்த யாழ்ப்பாணத்தில் வொரண்ட் (Worrant) எனப்பட்ட புகையிரத ஆணைச்சீட்டுகளைப் பெறுவதாலும் ரெயின் சேவை பிரசித் தமாயிருந்தது.

அரச உத்தியோகத்தர்கள் பாடசாலை விடுமுறைக் காலங்களில் ரெயின் மூலமாகத் தமது பிள்ளைகளைச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வதும் சாதாரணமான ஒன்றாயிருந்தது. காலை 5.50 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் ரெயின் அரச உத்தியோகத்தர் புகையிரத பருவகாலச் சீட்டின் (Train Season Ticket) மூலமாகத் தமது கடமை நிலையங்களுக்கு பயணித்தார்கள்.

யாழ். குடாநாட்டிலிருந்து வவுனியா வரையிலான பகுதிகளில் அரச அலுவலகங்களைப் பார்ப்போமாயின் ரெயில்வே ஸ்ரேசனை அண்டியதாக அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். யாழ்தேவி போகாவிட்டால் அரச அலுவலகங்கள் இயங்க முடியாது என்றொரு காலமும் இருந்தது. கொழும்பிலிருந்து புறப்படும் மெயில் ரெயினிலும் யாழ்தேவியிலும் பயணிகள் நிறைந்து வருவார்கள். கொடிகாமம் புகையிரத நிலையம் வந்ததும் சடுதியாகப் பயணிகள் குறைவதைக் காணலாம்.

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் பெருமளவானோர் நாட்டின் நாலா பகுதிகளிலும் உத்தியோகம் பார்த்தார்கள். அவர்கள் கொடிகாமத்தில் இறங்கியவுடன் ரெயினும் வற்றிவிடும். ரெயின் யாழ்ப்பாணத்தைச் சென்றடையும் நேரத்தில் அவர்கள் தட்டிவான் (Chavalat lorry) மூலமாக வடமராட்சியன் தமது கிராமங்களைச் சென்றடைந்து விடுவார்கள். கொடிகாமம், நெல்லியடி, பருத்தித்துறை தட்டிவான் அந்நாட்களில் பிரபலமாயிருந்தது.

ரெயினில் காற்றோட்டத்தை அனுபவித்து வந்தவர்களுக்கு தட்டிவானின் காற்றோட்டத்துடன் கூடிய பயணம் இதமாயி

ருக்கும். யாழ்தேவி மதியம் 2 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்குப் புறப்படும் போது கிளிநொச்சியில் கடமை புரிவோர் ஒன்றரை மணி நேரக் குறுகிய நேர லீவைப் பெற்று விட்டு கொழும்பு நோக்கி பயணித்தார்கள். அது போல ஏனைய மாவட்டங்களில் பணி புரிந்தோர் தமதுஅலுவலக வேலை நேரத்தை நிவர்த்தி செய்து கொண்டு ரெயினைப் பிடித்தார்கள்.

கொடிய உள்நாட்டுப் போரின் வடுக்கள் எமது யாழ்தேவியிலும் பதிந்தன.

1984 இல் கோண்டாவில் புகையிரத நிலையத்தில் நின்ற யாழ்தேவி எரியூட்டப்பட்டாள். 1985 ஜனவரி 19 ஆம் திகதியன்று காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்ட யாழ்தேவி கிளிநொச்சி முறிகண்டிப் பிரதேசத்தில் பெரும் குண்டு வெடிப்புக்குள் அகப்பட்டுச் சிதறியது. போரின் உக்கிரம் காரணமாக அவ்வப்போது யாழ்.தேவியின் சேவைகள் தடைப்பட்டன.

1987 அக்டோபர் 10 ஆம் நாளில் இந்தியப் படையினருடன் ( IP KF) விடுதலைப் புலிகள் போர் புரிய ஆரம்பித்த போது தண்டவாளங்கள், சிலிப்பர் கட்டைகள் அகற்றப்பட்டு அவை போரின் காப்பரண்களாயின.

இந்தியப் படைகளின் கட்டுப்பாட்டில் வடபகுதி முழுவதும் வந்ததும் போரின் தீவிரம் குறையத் தொடங்கியது. 1988 ஜனவரியில் இந்தியப் படைகளாலும், இலங்கை புகையிரத திணைக்களத்தாலும் மிகத் துரிதமாகப் புகையிரதப் பாதைகள் செப்பனிடப்பட்டு புகையிரதங்கள் யாவும் வரத் தொடங்கின.

1990 ஜூன் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று காங்கேசன் துறை ஹாபர்யூவி ஹோட்டல் முன்பாக அரச படைகளுடன் விடுதலைப் புலிகள் ஆயுத மோதலை ஆரம்பித்தர்கள். அந்த நாளில் வடபகுதிக்கான புகையிரத சேவை யாவும் நின்று போயின.

1990 ஜூன் மாதம் ஆரம்பித்த யுத்தத்தினால் தரைவழிப் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்ட போது யாழ்தேவி உட்பட அனைத்து ரெயின் சேவைகளும் வவுனியாவுக்கு வடக்காக வருவது தடைப்பட்டது. 23 வருடங்களாகிறது. இதனால் புகையிர தத்தைக் காணாத தலைமுறையொன்று உருவாகி விட்டது. உலகில் வேறு எந்த நாடுகளிலும் இது போன்ற நிலை இருக் கிறதோ தெரியவில்லை.


1990 காலப் பகுதி நாட்களில் காங்கேசன்துறை புகையிரத நிலையத்தில் தரித்து நின்ற ரெயின் ஒன்று பின்பு கப்பல் மூலமாக பகுதி பகுதியாக கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட் டது. யாழ்ப்பாணம் முதல் வவுனியா வரையிலான புகையிரதப் பாதையின் மிகப் பெரும் பிரதேசத்தில் தண்டவாளங்களும் சிலிப்பர் கட்டைகளும் விடுதலைப் புலிகளால் அகற்றப்பட்டு அவை காப்பரண்களாயின.

போரின் நிறைவு புகையிரதப் பாதைகளை மீளமைக்கும் நிலையை மீண்டும் ஏற்படுத்தியுள்ளது. யாழ்தேவி உட்பட அனைத்து ரெயின் சேவைகளும் கிளிநொச்சி வரை வந்து விட்டது. யாழ்ப்பாணம் வந்து காங்கேசன்துறை போகும் கால மும் நெருங்கிவிட்டது.

சென்றல் சென்ஜோன்ஸ் கிரிக்கெட் விளையாட்டுக்கும், நல்லூர் திருவிழாவுக்கும் திரள் திரளாக மக்கள் கொழும்பி லிருந்து வரும் காலம் மீண்டும் வரப் போகிறது.யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலுடன் மறக்க முடியாத பாகத்தைக் கொண்ட யாழ் தேவியும் பதிவிற்கும் ஆவணத்திற்குமுரியது.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு**

**2013 ஒக்ரோபர் 06,13**




# காணிவேல் கண்காட்சிக் காலங்கள்

யாழ்ப்பாண மக்களின் அமைதியான பொழுதுகளில் பதி விற்குரிய ஒன்றாக காணிவேல் கண்காட்சி காலங்கள் உள்ளன. உள மகிழ்வைக் கொடுத்து அக் காலத்து நினைவுகளை இரை மீட்டிக் காலப் பதிவுப் பெட்டகத்தில் சேமித்துக் கொள்ள இன் றைய பத்தி மலர்கின்றது.

இதற்குத் தேவையான தகவல்களை நேரடிக் கலந்துரை யாடல் மூலம் எனக்கு தந்துதவிய யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூ ரியின் ஓய்வுநிலை மூத்த ஆசிரியர்களான திரு. ராஜசிங்கம், திரு.ஒகஸ்ரின் ஆகியோருக்கு பல கோடி நன்றிகள்.

காணிவேல் (Carnivel) என்பது களியாட்டம் என்ற கருத்தைத் தருகிறது. கண்காட்சி என்பது ஆங்கிலத்தில் (Exhibition) எனப் படுகிறது. யுத்தத்தின் சத்தங்கள் எதுவும் கேட்காத காலப் பகுதி

களில் மக்களுக்கு உளமகிழ்வை அளிக்க எத்தனையோ நிகழ்வுகள் கிரமமாக நடந்தன.

அவற்றில் ஒன்றான காணிவேல் எனப்பட்ட களியாட்ட விழா தனியாகவும் சில சமயம் கண்காட்சியுடன் இணைந்ததாகவும் நடந்தன. நிதி சேகரிக்க பொது மக்கள் விரும்பி பணம் கொடுத்து தாமும் மகிழ்ந்து பொது நன்மைக் காரியமொன்றும் நடைபெற இவை உதவின.

யாழ்ப்பாணத்தினை அடையாளப்படுத்தும் சின்னமாக யாழ். பொது நூலகம் உள்ளது. உலகப் பிரசித்தி பெற்ற இக் கட்டிடத்தின் உருவாக்கத்திற்காகவும் காணிவேல் 3 முறை யாழ். வினோதக் காணிவேல் என்ற பெயரில் நடைபெற்றதாக இன்றும் வாழும் மூத்தோர்கள் நினைவு கூருகின்றனர்.

யாழ். நகரச் சுற்றாடலில் வாழ்ந்த சமூகப் பெரியார்கள் இந்த யாழ். வினோதக் காணிவேல் நிகழ்வை ஏற்பாடு செய்தார்கள். 1950, 1954, 1957 ஆம் ஆண்டுகளில் இந்தக் காணிவேல் நடைபெற்றதாகக் கூறுகின்றனர். காணிவேலில் மகிழ்வூட்டும் நிகழ்வுகள் பல நடைபெற்றன. அதில் அனைவரையும் கவர்ந்ததாக றெஸ்லீங் எனப்படும் மல்யுத்தம் இருந்தது.

இந்தியாவிலிருந்து வருகை தந்த தாராசிங், கிங்கொங், ஹர்பன்சிங் போன்றோர் பிரபல்யமிக்கவர்களாக இருந்தார்கள்.

அதிலும் தாரசிங்கின் மல்யுத்தத் திறமை இன்றளவும் பெரியோர்களால் நினைவு கூரப்பட்டது. அக் காலத்தில் பிறந்த குழந்தைகள் கையைக் காலை அடித்துக்கொள்ளும்போது

“தாராசிங் அடிக்கிறான், தாராசிங் அடிக்கிறான்” எனச் செல்ல மாக அழைத்தார்கள். ஆண் குழந்தைகளைத் தாரா, தாராசிங் என வீட்டில் செல்லமாக அழைத்ததும் நிகழ்ந்தது. யாழ். முற்ற வெளியில் நிகழ்ந்த இந்த யாழ். வினோதக் காணிவேலைப் பார்க்க யாழ்.குடாநாட்டின் நாலா பாகங்களிலிருந்தும் வடமாகா ணம் மட்டுமல்ல பிற பிரதேசங்களிலிருந்தும் ஏராளமானோர் வந்திருந்தார்கள்.

யாழ்.மாநகரமே விழாக் கோலம் பூண்டிருந்தது. காணிவேல் மைதானத்துக்குள் நுழையக் கட்டணம் கொடுக்க வேண்டும். அக்காலத்தில் பத்துசதம் பெரிய காசாக இருந்தது. காணிவேல் வளாகத்துள் உள்ள பிற விளையாட்டுக்களில் பங்கேற்கவும் தனியாகக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. அவையும் 5 சதம், 10 சதம் என்ற அடிப்படையில் தான் கட்டணங்களாக இருந்தன.

இசை நிகழ்ச்சிகள், ராட்டினத்தில் சுற்றுதல், தாராவின் கழுத்தில் வளையம் எறிதல் போன்ற நிகழ்வுகள் யாழ். வினோ தக் காணிவேலில் இடம்பெற்றன.

யாழ்ப்பாணக் காணிவேல் வரலாற்றில் காத்திரமான நினைவுத்தடங்களைப்பதித்தாகசென்.பற்றிக்ஸ்கல்லூரியைக் குறிப்பிடலாம்.

1848 ஆம் ஆண்டில் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் கைத் தொழில் கண்காட்சியும் காணிவேல் (Industrial Exhibition and carniv-el) குறிப்பிடத்தக்க ஆரம்பமாக இருந்தது.

இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் பாடசாலை நிர்வாகத்துடன் இணைந்து இந் நிகழ்வை ஏற்பாடு செய்து கொண்டனர்.

காணிவேலில் அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்கும் நடைமுறை ஒன்றும் இருந்தது. அந்நாளில் 50 சதம் பெறுமதியான அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்கப்பட்டது. சில இலட்சம் மக்கள் இந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டை வாங்கினார்கள்.

முதலில் பரிசாக பிரித்தானிய தயாரிப்பான றைலி (Riley) கார் வழங்கப்பட்டது. இக்கார் அக் காலத்தில் பதின்மூவாயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியுடையதாக இருந்தது. இதனைவிட வேறு பல பெறுமதியான பொருட்களும் பரிசாக வழங்கப்பட்டன.

அன்றைய இக் காணிவேலில் கைத்தொழில் இயந்திரங்கள் பல காட்சிப்படுத்தப்பட்டன. கெஸ்ற் றெற்னெர் (Gestetner) எனும் றோணியோ இயந்திரமும் அதன் செயற்பாடும் காட்சிப்படுத்தப்பட்டது, கண்காட்சியில் பார்வையிடுபவர்களின் பெயர்களைக் கேட்டு ஸ்ரென்சிலில் (Stencil) எழுதி உடன் றோணியோ இயந்திரத்தைச் சுழற்றி அச்சடித்த பேப்பரில் வரும் பெயர் தாங்கிய துண்டைக் கிழித்துக் கொடுத்தார்கள்.

பொது மக்கள் மிக்க ஆர்வத்துடன் இதனைப் பார்வையிட்டார்கள். இது போன்ற கைத் தொழில் உபகரணங் கள் பல பார்வையாளரைக் கவர்ந்தன. காணிவேல் வளாகத்தில் பார்வையாளரைக் கவரக்கூடிய இன்னும் பல வேடிக்கை வினோத நிகழ்வுகள் நடைபெற்றன.

யாழ்ப்பாண மக்களின் மனத்திரையில் இன்றளவும் நினைவில் நிற்பதாக யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி வளாகத்தில் 1977 ஆம் ஆண்டில் நடைபெற்ற காணிவேலும் கண்காட்சியும் தான் உள்ளது. சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 125 ஆண்டு நிறைவையொட்டியதாக இந் நிகழ்வு நடைபெற்றது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் கல்லூரி நிர்வாகமும் இணைந்து ஏற்பாடு செய்த இக்காணிவேல் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இருபத்தைந்து தினங்கள் நடைபெற்று செப்ரெம்பர் மாதத்தில் மேலும் இரு நாட்கள் நீடிக்கப்பட்டு நிறைவு பெற்றது.

இறுதி நாளில் எதிர்பாராத விதமாக வன்முறைகள் சில இடம்பெற்று நிகழ்வு முடிந்தமை கவலைக்குரியது. அந்த வன்முறை நிகழ்வின் பரிணாமங்கள் எவ்விதம் அமைந்தன எனக் குறித்து அரசியல் ஆய்வாளர்கள் பலவித கருத்துக்களை முன்வைக்கின்றார்கள்.

நாம் அதனை விடுத்து இக்காணிவேலின் தரிசனத்திற்கு வருவோம். கல்லூரி, அபிவிருத்திக்கு நிதி சேகரிக்கும் நோக்குடன் காணிவேலும் கண்காட்சியும் ஒழுங்கமைக்கப்பட்டது. பழைய மாணவர் சங்கச் செயலாளராக இருந்த A.V.A.J.விஜயரட்ணம் அவருடன் இணைந்து மருத்துவ கலாநிதி J.P.C.பிலிப்ஸ், P.C. அன்ரனி, பொறியியலாளர் தியாகராஜா உள்ளிட்ட 21 பேர் கொண்ட குழுவினர் கல்லூரி நிர்வாகத்துடன் இணைந்து இக் காணிவேலின் உருவாக்கத்துக்கும், வெற்றிக்குமாக உழைத்தார்கள்.

காணிவேல் வளாகத்துக்குள் நுழைவதற்காக அனுமதிக் கட்டணமாக 25 சதம் அறவிடப்பட்டது.

அன்றைய கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த பொருட்களில் மிகமுக்கியமானதாக தொலைக்காட்சி பெட்டியும் வீடியோ கெசட்டும் இருந்தது.

1970 முதல் 1977 வரையான ஆண்டுகளில் சிறீமா அரசாங்கத் தால் இலத்திரனியல் பொருட்களுக்கான இறக்குமதி தடை விதிக்கப்பட்ட காரணத்தால் தொலைக் காட்சிப் பெட்டிகள் இலங்கைக்குள் வரவில்லை.

1977 ஜூலை மாதம் அரசாங்கத்தை பொறுப்பேற்று பிரதமராகப் பதவி வகித்த ஜே.ஆர். ஜெயவர்த்தனா தாராள பொருளாதாரக் கொள்கைளை கடைப்பிடித்தார். அதன் விளைவாக வந்த இலத்திரனியல் உபகரணமாக தொலைக் காட்சிப்பெட்டி இருந்தது. இதனை 1977 ஓகஸ்ட் மாதம் வடபகுதி மக்கள் பார்த்தது சென்.பற்றிக் கல்லூரியில் தான்.

இதனைநூதனம்பார்க்கவெனமக்கள்அலைமோதினார்கள். தியேட்டரில் அகலத் திரையில் மட்டுமே நிகழ்வுகளைப் பார்த்துப் பழகிய மக்களுக்கு இந்தத் தொலைக்காட்சி பின்னாளில் தம்மை எவ்விதம் ஆக்கிரமிக்கப் போகிறதென அன்று புரிய வில்லை.

இது போன்று பல புதிய இயந்திர உபகரணங்கள் காணிவே லில் வைக்கப்பட்டு மக்களைக் கவர்ந்தன. மாலை 5 மணிக்கு ஆரம்பிக்கும் காணிவேல் நள்ளிரவு 12 மணிக்கு முடிவடைந்தது.

பாடசாலை நேரம் அந்நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரையும் இருந்தது. பாடசாலைக் கல்விக்கு இடையூறு இன்றியதாக இந்த நேர ஏற்பாடு இருந்தது.

காணிவேல் வளாகத்தில் மாயா ஜாலக் காட்சிகளும் (மஜிக்'ஷோ) இடம் பெற்றது. இளம் பெண் ஒருவரின் கழுத்து வெட்டப்பட்டு உடல் வேறாக்கப்பட்டு தலைப் பகுதி இரத்தம் சொட்டச் சொட்ட இருந்ததை, சிறுவனாக இருந்த நான் அலறியடித்து பார்த்தது என் நினைவில் நிழலாடுகிறது.

பாதாளக் கிணற்றில் மோட்டார் சைக்கிள் ஓடியதை மக்கள் வியந்து பார்த்தார்கள். மெடிக்கோராவுண்ட் எனப்பட்ட சுற்றிச் சுழலும் சக்கரத்திலும் ஏறினார்கள். ஜயன்ற் வீல் (Jiant Wheel) எனப்பட்ட மேல் கீழாகச் சுற்றும் ராட்டினமும் இருந்தது. இசைக் குழுக்களின் இசை நிகழ்வுகளும் நடைபெற்றன. தாராவின் கழுத்தில் வளையங்களை எறிந்து பரிசு பெறும் போட்டிகளும் இருந்தன.

இது போல் சிறுவர்களை, இளையோரை மகிழ்விக்கும் நிகழ்வுகள் பல நிகழ்ந்தன.

பொது மக்கள் உணவருந்த. சிற்றுண்டி உண்ண, சிறுவர்கள் விளையாட்டுப் பொருட்கள் வாங்கவெனக் கடைத்தொகுதிகள் பலவும் உள்ளே அமைக்கப்பட்டிருந்தன.

காணிவேல், கண்காட்சி, கடைகளென சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானமும், வளாகமும் மூன்றாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அந்நாளில் இந்தக் காணிவேலைப் பார்க்கவென யாழ்.


குடாநாடு மட்டுமின்றி வடமாகாணம் முழுவதும் பிற மாகாணங் களிலிருந்தும் பொது மக்கள் ஒன்று கூடினார்கள். பாடசாலை கள் தமது மாணவர்கள் பார்த்துக் களிக்கவென முற்கூட்டியே நேரத்தைப் பதிவு செய்து வாகனங்களில் மாணவர்களை அழைத்து வந்தார்கள். மாணவர்கள் மகிழ்வு பொங்கப் பார்த்து ரசித்தார்கள். பெற்றோருடன் தனியாக வந்து இரண்டாம் முறை யாகவும் பார்த்து ரசித்த மாணவர்களும் இருந்தார்கள். பொது மக்கள் பல்லாயிரக் கணக்கில் அலைமோத சென்பற்றிக்ஸ் கல்லூரி வளாகமும் அதனை அண்டிய சூழலும் ஏறத்தாழ ஒரு மாதம் திருவிழாப் போலவெ காட்சியளித்தது.

இக்காணிவேலில் கம்பிளிங் (Gamdling) எனப்பட்ட ஒரு வகைச் சூதாட்டமும் சிறு பங்கு வகித்தது. சென்பற்றிக்ஸ் கல்லூரி காணிவேலுக்கு அண்மித்த காலப் பகுதியில் வடமராட்சி நெல்லியடிப் பிரதேசத்தில் காணிவேல் நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. இங்கு கம்பிளிங் எனப்பட்ட சூதாட்டத்தை முதன்மைப்படுத்தியதால் பொது மக்கள் மிகப் பலமாக எதிர்த் தார்கள். இதனால், நெல்லியடி காணிவேல் ஒரு வாரத்துடன் மூடுவிழாக் கண்டது.இது போல நிதி சேகரிக்கும் நோக்கத் துடன் யாழ்.குடாநாட்டின் பல பிரதேசங்களிலும் காணிவேல் நிகழ்ச்சி நடத்தப்பட்டன. அவையாவும் கண்டறியப்பட்டு ஆவணப்படுத்த வேண்டியது நிகழ்கால சந்ததியின் வரலாற் றுக் கடமையாகும்.

அமைதியாக வாழ்ந்த அன்றைய காலச் சமூகத்தினர் இந்தக் காணிவேல் நிகழ்வுகளுக்கு உற்சாகமாகச் சென்றார்கள். மிகுந்த ஆரவாரத்துடன் பாரத்தார்கள். யுத்தத்தின் வரவு இந்தக்

காணிவேல் யுகத்தையும் ஊர்கூடித் தேரிழுத்த மக்களின் உற்சாக காலங்களையும் மீளா உறக்கத்தில் ஆழ்த்தி விட்டது. இலத்திரனியல் தொடர்பு சாதனங்களின் தாராள வருகை இது போன்ற நிகழ்வுகளில் மக்களுக்கு நாட்டத்தைக் கொடுக்குமா என்பது கேள்விக்குறிதான். எமது வாழ்வியல் காலத்தின் தட மாக காணிவேல், கண்காட்சி காலங்களையும் நினைவில் கொள்வோம்.

**நன்றி - தினக்குரல் வார வெளியீடு 2013 மே 19.26.**



# அருகிப் போன வேட்டையாடுதல்

வேட்டையாடுதல் எனும் செயல் இல்லாத நாடுகளே இல்லை யெனலாம். இலங்கையிலும் வேட்டையாடிய இனக் குழுமம் ஒன்று சிங்களவர் மத்தியில் இன்றும் உயிர்துடிப்புடன் இருக் கின்றனர்.

அவர்களிடம் வேட்டையாடுதல் என்ற செயற்பாடு காடும் காடு சார்ந்த பிரதேசங்களிலும் தொடருகின்றது. யாழ்ப் பாணத் தில் காடுகள் எனக் கூறுமளவுக்கு பெருமளவு நிலப் பரப்புகள் முற்காலத்தில் அறியப்படவில்லை. ஆனால் வேட்டை யாடுதல் என்ற செயற்பாடு ஆதிகாலந்தொட்டே இருந்து வருகின்றது.

இன்றும் மிகச்சிறு அளவிலானோர் வேட்டையாடும் தொழி லைச் செய்து வருகின்றனர். இது முழு நேரமாக ஒருவரி டமும் இல்லை. ஆனால் முன்னைய காலத்தில் வேட்டையாடுதல் என்

பது 3 வகைப்பட்டதாக இருந்தது. முழுநேர வேட்டையாடுதல் தொழிலைச் செய்தோர் ஒரு வகையாக இருந்தார்கள். வேறு ஏதாவது தொழிலில் ஈடுபட்டுக் கொண்டு இறைச்சித் தேவைக் காக பகுதி நேரமாக வேட்டையாடும் தொழிலைச் செய்தவர் களும் இருந்தார்கள். பொழுதுபோக்காக வேட்டையாடியோரும் ஒரு வகையாக இருந்தார்கள்.

வேட்டையாடுதல் எனும் தொழில் காடுகளற்ற யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு எத்தனை தூரம் பொருந்துமெனக் கூறமுடியாது. வேட்டையாடுதல். இங்கு நாயைப் பயன்படுத்தி முயல், உடும்பு, கௌதாரி ஆகியவற்றைப் பிடிக்கும் முறையில் நிகழ்ந்தது. இடியன் துவக்கு, கட்டுத்துவக்கு என்பனவற்றை பயன்படுத்தி மான், மரை, பன்றி போன்றவற்றை வேட்டையாடுதல் நிகழ்ந் தது. உடும்பு தடம் அல்லது கண்ணியை வைத்து முயல், உடும்பு பிடிப்பதும் ஒரு முறையாக நிகழ்ந்தது.

முயல் வரும் பாதையைப் பார்த்து வைத்து கல்லால் திடீரென எறிந்து பிடிப்பது ஒரு முறையாகவும் நிகழ்ந்தது. கெற்றப் போலால் அணிலைக் கல்லால் தாக்கி விழுத்துவதும் ஒரு முறையாக இருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரவலாக எல்லாக் கிராமங்களிலுமே வேட்டையாடுபவர்கள் இருந்தார் கள்.

வல்லிபுரக்கோவிலடி , கப்பூது, சிறுப்பிட்டி, வசாவிளான், குட்டியப்புலம், புத்தூர் மேற்கு வேம்பிராய், அரியாலை, கைதடி , வரணி எனப் பேர்போன வேட்டைக்காரர் இருந்த கிராமங்களின் பட்டியல் நீளமானது. அன்றைய நாளில் இவ்வாறு மிருகங்களை வேட்டையாடி உணவுத் தேவைக்காக எடுப்பது குற்றமாகக்

கருதப்படவில்லை. அதனால் வேட்டையாடுதல் என்பது பலரின் பகுதிநேரத் தொழிலாக இருந்தது. இன்றைய நாளிலோ இவ் வாறு நடைபெறுவதை அறிந்தால் பொலிஸார் தண்டனைக் குரிய குற்றமாக்கி விடுவார்கள். அபராதமும் கட்டவேண்டும். காலமாற்றம் வேட்டையாடுதல் என்ற தொழிலையும் சுருங்கச் செய்துவிட்டது.

வேட்டையாடுதலில் மோப்ப நாய்களைப் பயன்படுத்தி முயல் களைப் பிடிப்பது பிரபலமானது. வீட்டில் வளர்க்கும் ஆண் நாய்களில் உயரமான நீளமான உடம்பு, அகன்ற செவிகளுள்ள நாயை வேட்டை நாயாகத் தெரிவு செய்து வளர்ப்பார்கள். பெரிய வேட்டை நாய்களை அழைத்துச் செல்லும் போது பழக்குகின்ற குட்டி நாய்களையும் அழைத்துச் செல்வார்கள். பெரிய வேட்டை நாய் இரையை தேடிச் சென்று பாயும் போது பழகுகின்ற குட்டி நாய்களையும் ஓட விடுவார்கள். குட்டி நாயும் இரையைத் துரத் தும், கௌவும் முறையைப் பழகிக் கொள்ளும்.

ஆண்கள் கூட்டமாக வேட்டை நாய்களுடன் புறப்படுவார்கள். பற்றைக் காடுகளுள்ள பிரதேசங்களாகப் பார்த்துப் போவார் கள். பற்றைக் காடுகளை ரவுண்ட அப் பண்ணி முயல்களை வளைத்து நாய்களை ஏவிவிட்டு பிடிப்பது ஒருவகையானதாகும். இன்னுமொரு முறையில் ஒரு பகுதி ஆட்கள் பற்றைக்காட்டை சூழநின்று ஒரு பக்கத்தால் முயலைக் கலைப்பார்கள்.

ஓடும் முயல்களைப் பிடிக்க நாய்களுடன் கட் அவுட் குறூப் பாக இன்னுமொரு பகுதியினர் காத்து நிற்பார்கள். முயல்கள் ஓடும் திசையைப் பார்த்து நின்று நாய்களை ஏவி விடுவார்கள். நாய்கள் முயல்களின் முதுகுப் பகுதியில் கௌவிப் பிடித்து

வந்து தமது எஜமானர்களிடம் ஒப்படைக்கும்.

முயல்கள் கவ்வப்பட்ட வேகத்திலேயே இறந்து விடுவது வழக்கம். பற்றைக்குள் இருந்து பல முயல்கள் தப்பி ஓடினாலும் நாய்களால் எல்லா முயல்களையும் பிடிக்க முடிவதில்லை.சில முயல்கள் மட்டுமே நாய்களால் பிடிக்கப்படும். சில சமயம் பற்றைக்குள்ளிருக்கும் ஒரு முயலை நாலு பக்கத்தாலும் நாய்கள் கௌவிப் பிடிக்க முயலின் உடம்பு சிதைந்து நாய்க்கு உணவாகி விடும்.

“முயல் பிடிக்கிற நாயை மூஞ்சையயில் தெரியும்” என்பது யாழ்ப்பாணத்தில் பிரபலமான பழமொழிகளில் ஒன்று. நாய்கள் கௌவி வந்து கொடுத்த முயல்களை உடனேயே காதைப் பிடித்த படியே கொன்று விடுவார்கள். வேட்டைகாரர்களால் இவ்வாறு பிடிக்கபட்ட முயல்கள் ஓரிடத்தில் வைத்து உரித்து இறைச்சியாக்குவார்கள்.

பனை ஓலையை வெட்டி குடலை செய்வார்கள் . குடலை என்பது கள்ளுப் பிளா இரண்டை ஒன்றாக சேர்த்து இணைத்தது போல் இருக்கும் அதனுள் முயல் இறைச்சியைச் சேர்த்து கட்டி இரத்தம் ஒழுக ,ஒழுக வீட்டிற்கு கொண்டு வருவார்கள். கிடைக்கும் முயல்களை தாம் சென்ற குழுவின் எண்ணிக்கைக்கு ஏற்ப பங்கிட்டுக் கொள்வார்கள் . குடலை எனக் குறிப்பிட்ட பனை ஓலையால் இழைக்கபட்ட உபகரணத்தில் தான் ஆட்டிறைச்சி நீண்ட காலமாக எடுத்து செல்லப்பட்டது.

அண்மை காலமாகத் தான் குடலை முறையைக் காணமுடிவதில்லை. சொப்பிங்பைகள் பரவலாக, குடலை செய்யும் முறை

காணாமல் போய்விட்டது. முயல் வேட்டைக்குப் பழக்கும் நாய் களின் பெயர்களில் வீமன், றொக்கி, ரெயிலர், ஜிம்மி போன் றவை பிரபலமாக இருந்தன. பெயரைக் கூப்பிட்டவுடனேயே உரிய நாய்கள் ஓடிவந்து எஜமானனின் காலடியில் விசுவாசமாக பணிந்து நிற்கும்.

முயல் வேட்டை போலவே உடும்பு வேட்டையும் நடக்கும். முயல்கள் வேகமாகப் பாய்ந்தோடும். ஆனால் உடும்புகள் அவ் வாறில்லை சராசரி வேகத்தில் நிலத்தில் ஊர்ந்தோடி புற்றுக் குள் புகுந்துவிடும்.

இரவில் நல்ல மழை பெய்தால் விடிகாலை முயல், உடும்பு வேட்டைக்குப் புறப்பட்டு விடுவார்கள். மழைக்குப் பற்றைக்குள் இருக்கும் முயல்கள் காலையில் சூரிய வெளிச்சத்தைக் கண்டவு டன் வெளியே வந்துவிடும் . அப்போது காத்திருக்கும் வேட்டைக் காரர்கள் நாய்களை ஏவிவிட்டு முயல்களைப் பிடிப்பார்கள். அது போல்தான் புற்றுக்குள்ளிருக்கும் உடும்பு சூரிய வெளிச்சத்தை கண்டவுடன் வெளியே வரும்.

காத்திருந்த வேட்டை நாய்கள் உடும்பைக் கௌவிப்பிடித்து விடும் . உடும்பு சிலசமயம் நாய்களைக் கண்டவுடன் வேகமாகப் புற்றுக்குள் ஓடிவிடும் வேட்டை நாய்கள் புற்றின் வாசலில் காவ லிருக்கும் வேட்டைக்காரன் புற்றை மண் வெட்டியால் வெட்டி உடும்பைப் பிடிப்பார்கள்.

பிடிக்கப்பட்ட உடும்பை மிகக் கூரான கத்தியின் மூலம் தோலை உரித்து இறைச்சி ஆக்குவார்கள். உடும்பு இறைச்சியை யும் பனை ஓலையால் செய்யப்பட்ட குடலைக்குள் போட்டு

வீட்டிற்கு கொண்டு செல்வார்கள் முயலைப் பிடித்த ஒருவர் கொன்ற பின் நிலத்தில் இரண்டு முறை தட்டிவிட்டுத்தான் தூக் குவார். இது ஒரு நாணம் என வேட்டைக்காரர்கள் காலாகாலமாக நம்புகின்றனர்.

சாதாரணமாக ஒரு முயல் இரண்டு, இரண்டரைக் கிலோ நிறை நிற்கும் காட்டு முயல்கள் யாவும் ஒரே வகையினதாக இருக்கும் . ஆனால் ஊர் முயல்கள் நரையன், புள்ளி மறையன், சீமை என வகைப்படுத்தபட்டதாக இருக்கும் . வீட்டில் முயல்கள் கால்நடை வளர்ப்பாக வளர்க்கபட்ட ஒரு காலமும் இருந்தது.

பலகையால் அடிக்கபட்டு கம்பி வலை போடப்பட்டதாக முயல் கூடுகள் வீடுகளில் இருக்கும் . நிலத்தினுள் முயல் வளர்ப்பது சிக்கலானது. முயல்கள் நிலத்தினுள் புற்றெடுத்து மண்ணி னுள் நீளத்திற்குபோய்விடும் . அதனால் பலகையால் செய்யப் பட்ட கொட்டிலுக்குள் முயல் வளர்க்கவே விரும்புவார்கள் .முயல் கள் ஒரு மாதத்திற்கு ஒரு முறை குட்டிகள் ஈன்று கொள்ளும் . மரப்பலகைக் கொட்டிலுக்குள் வைக்கபட்ட பானைக்குள் முயல் குட்டிகளை ஈன்று கொள்ளும் . தாய் முயல் தனது மயிர்களைப் பிடுங்கி பானைக்குள் மெத்தையாக அடுக்கி தனது முயல்குட்டி களை அதில் படுக்க வைக்கும் . பற்றைக் காடுகளுக்குள் முயல் கள் படுத்து இருக்கும் இடங்களை பளை என்பார்கள்.

இக் காரணத்தை வைத்துதான் யாழ்ப்பாண குடா நாட்டில் தெல்லிப்பளை, அல்லிப்பளை, பளை, புலோப்பளை, விடத்தல் பளை போன்ற ஊர்கள் உருவாகி இருக்கலாம்.

முயல் பிடிப்பதற்கு வடமராட்சி கிழக்கின் மணற்காடு

போன்ற கிராமங்கள் வாய்ப்பானதென வேட்டைக்கு பேர் போன சிலர் கூறுகின்றனர். ஊர்புறம் உள்ள பற்றைக் காடுகள் சிறந்த தென்று சிலர் கூறுகின்றனர். முயல்களை தடம் வைத்துப் பிடிப் பது இன்னொரு வகை. கண்ணி வைத்துப் பிடிப்பதெனவும் இத னைக் கூறுகின்றனர். ஊர்ப்புறம் முயல்கள் புழங்கும் இடத்தை அவற்றின் காலடித் தடத்தை வைத்துக் கண்டு பிடிப்பார்கள்.

அனுபவம் வாய்ந்த வேட்டைக்காரர்களாலேயே இவ்விதம் கண்டுபிடிக்கமுடியம். முயல் சென்று வரும் பாதையில் இரண்டு தடிகளை நடுவார்கள் அவற்றுக் கிடையில் கட்டுக் கம்பிகளாலா கிய 4 அல்லது5 தடங்களை (கண்ணிகளை) உருவாக்கி வைப் பார்கள்.

மாலை 4 அல்லது 5 மணிக்குத் தான் இவ்விதம் தடத்தைப் போடுவார்கள்.

இரவுப் பொழுது தனக்குப் பாதுகாப்பானதெனப் புறப்படும் முயல்கள் இத் தடத்தில் சிலவேளை சிக்குப்பட்டுப் பிடிபட்டுக் கொள்ளும். தடம் வைத்தவர் அதிகாலை நிலத்தில் வெளிச்சம் வர முன்பே சென்று தடங்களைப் பார்ப்பார். சிலவேளை முயல் கள் பிடிபட்டு விழி பிதுங்கி மிரண்டு கொண்டிருக்கும்.

சிலவேளை நாய்கள் அல்லது நரிகள் இரவோடு இரவாக தடத்தில் பிடிபட்ட முயல்களைத் தமது உணவாக்கியிருக்கும் . சிலவேளை நாய், நரி சாப்பிட்டு தப்பிப் பிழைத்த முயல்கள் இருக்கும் . உயிரோடு பிடித்த முயல்களை வழமை போலக் காதைப் பிடித்துக் கொன்று இறைச்சியாக்கிக் கொள்வார்கள். சிலவேளை 50 தடங்கள் வரை போட்டு ஒன்றிரண்டு முயல்கள்

பிடிபடும் நிகழ்வும் நடக்கும் நாய்களின் மூலம் முயல் பிடிக்கும் போது முயலின் காலடிகளை வைத்துப் பிடிக்கும் ஆற்றல் வாய்ந்த நாய்களை சுவட்டு நாய் என்பார்கள்.

முயல்கள் பற்றைக்குள்ளிருந்த வெளியே ஓடும் போது நாய் கள் இடையே நின்று மறிப்பது தரங்கல் என அழைக்கப் படுகின் றது.

முயல், உடும்பு ஆகியவற்றை வேட்டையாடிப் பிடிப்பது எல் லாக் காலமும் நிகழும்.

ஆனால் மான், மரை, பன்றி போன்றவற்றை வேட்டையாடு வது பெரும்பாலும் கார்த்திகை , மார்கழி மாதங்களில் தான் நிகழும். இயக்கச்சி, கிளிநொச்சி போன்ற பிரதேசங்களுக்கே வேட்டைக்குச் செல்வார்கள். மான்கள் கூட்டமாக காட்டில் நிற் கும் போது வேட்டையாடுபவர்கள் கலைப்பார்கள்.

வெளி கொண்ட இடங்களுக்குப் போனால் வேட்டையாடி விடுவார்கள் எனப் பயந்து மான்கள் நீரோடைக்குள் புகுந்து விடும்.

நீரோடைகளுக்குள் புகுந்த மான்களுடன் நாய்களும் போட் டிக்கு நீந்தும். நாய்களுக்குப் பின்னால் வேட்டைக் காரர்களும் தண்ணீருக்குள் நீந்துவார்கள். நீந்திப்போய் மான்களை வளைத்துப் பிடிப்பார்கள். சிலவேளை மான்கள் நீரோடைக் குள்ளிருந்து வெட்டைக்குள் ஓடும். அப்போது மொத்தக் காட்டுத் தடிகளுடன் காத்திருக்கும் வேட்டைக்காரர்கள் உச்சந்தலையில் தாக்கி மானைக் கொன்று விடுவார்கள். நீரோடைக்குள்

மானைப் பிடிக்கும் போது யார் முதலில் பிடித்தார்களோ அவருக்கே அந்த மானின் ஈரல்கள் இறைச்சி பங்கு போடும் போது வழங்கப்படும்.

இது ஓர் எழுதப்படாத உடன்படிகையாக இருந்தது. பன்றி பொதுவாக இறுக்கமான பற்றைக்குள் படுக்கும். ஆனால் மான் கள் பயந்த சுபாவம் கொண்டவை. அதனால் மான்கள் இலை, குழைகள் கொண்ட காட்டுப் பிரதேசத்திலேயே குடியிருக்கும். தேங்காய்களை எடுத்து உரித்துத் தேங்காயை உடைத்துச் சாப் பிடும் பன்றிகள் கொழுப்புச் சுவையாக இருக்கும்.

பாலைப்பழச் சீசன் காலத்தில் பாலைப்பழங்கள் நிறையச் சாப்பிடும் பன்றிகளும் கொழுப்ப வைத்திருக்கும். அந்தப் பன் றிகளின் இறைச்சிகளும் வித்தியாசமான சுவை கொண்டதா யிருக்கும்.

முயல், உடும்பு, மான், மரை, பன்றி, உக்கிளான். ( மான் போல உருவம் கொண்டது) ஆகியவற்றை துரத்திப் பிடிக்கும் போது கல், முள் குத்துவது, முட்புதர்கள் காலின் , உடலின் தோலைக் கிழிப்பது சர்வசாதாரணமாயிருக்கும். நாய்களை ஏவி விட்டு உடும்புகளைப் பிடிக்கும் போது உடும்பை உரித்து ஈரலுக்குப் பக்கத்திலுள்ள பித்தை எடுப்பார்கள். வேட்டை நாய்களின் மூக் குக்கு கிட்ட பித்தைக் கொண்டு போய் அதனை நசித்து மூக்கு டன் தடவி விடுவார்கள்.

அதன் பிறகு உடும்பு எங்காவது நின்றால் வேட்டை நாய்கள் தேடிப் பிடித்துக் கௌவி விடும்.

மான், மரை, உக்கிளான் வேட்டைக்கு துவக்கு (துப்பாக்கி) பாவித்தரர்கள் துவக்கு லைசன்ஸ் (அனுமதிப் பத்திரம்) எடுப் பதற்கு டி.ஆர்.ஓ. கந்தோருக்கு (இன்றைய பிரதேச செயலகத் துக்கு ) செல்வார்கள்.

வருடா வருடம் துவக்கு லைசன்ஸ் புதுப்பிக்க வேண்டும். காட்டு யானைகள் உள்ள வன்னிப் பிரதேசங்களில் வயல் செய் யும் விவசாயிகளுக்கு துவக்கு லைசன்ஸ் கொடுப்பார்கள்.

வாகனம் ஓடுவதற்கு சாரதி அனுமதிப் பத்திரம் எடுக்கும் போது உரியவரின் புகைப்படத்தையும் ஒட்டுவார்கள். ஆனால் துவக்கு லைசன்ஸுக்கு உரிமையாளரின் புகைப் படம் ஒட்டும் வழக்கம் இல்லை. இதனால் லைசன்ஸ் துவக்கு வைத்திருப்பவர் ஒருவரின் துவக்கை நம்பிக்கையான இன்னொருவர் எடுத்துச் சென்று வேட்டையாட முடிந்தது. தேசிய அடையாள அட்டைகளின் புழக்கம் தேவைப்படாத அக்காலத்தில் லைசன்ஸ் உள்ள துவக்கை இன்னொருவர் எடுத்துச் சென்று அப்பெயரில் உள்ள வர் தான் தானென கூறுவது சாத்தியமாக இருந்தது.

தமிழீழ விடுதலை இயக்கங்கள் உருவாகி துப்பாக்கி ஏந்திப் போராட ஆரம்பித்த காலத்தில் அரசாங்கம் துவக்குகளை மீளப் பெற்று லைசன்ஸையும் நிறுத்திக் கொண்டது.

துவக்கு மூலம் வேட்டையாடும் காலத்தில் இரவில் டோச் லைட் வெளிச்சத்தின் மூலமாக மிருங்கள் சென்ற தடங்களை இனங்காண்பார்கள். கட்டுத்துவக்கு, இடியன் துவக்கு என இரு வகைப்பட்டதாக துவக்குகள் இருந்தன.

துவக்கு ரிகர் எனப்படும் வில்லுவில் நூலைக் கட்டிப் பாவிப் பதை கட்டுத்துவக்கு என்றார்கள். மிருகத்தின் காலடித் தளத்தை அடிப்படையாக வைத்து கட்டுத் துவக்கை செற் பண்ணுவார்கள்.

துவக்கை ஓரிடத்தில் மரத்துடன் இறுகக் கட்டி, ரிகர் எனப்பட்ட வில்லுவில் நூலைக் கட்டி மிருகத்தின் கால் பாதை உள்ள மண்ணின் மேலாக அரையடி உயரத்தில் விடுவார்கள். மிருகங் கள் பொதுவாகவே சென்றபாதையில் தான் திரும்பி வருவது வழக்கமானதாகும். இதனால் கட்டுத் துவக்கின் நூலை மிருகம் வரும் பாதை பார்த்து வைப்பார்கள்.

துவக்கின் வில்லுவில் (ரிகர்) கட்டிய நூலில் கால்பட துவக் கில் இருந்து புறப்படும் குண்டு மிருகம் வந்த திசையிலேயே வந்து மிருகத்தை கொன்றுவிடும்.

மிருகத்துக்கு வைத்த கட்டுத் துவக்கின் நூலில் மனிதன் கால் வைத்தாலும் மனிதனைக் கொன்றுவிடும். அண்ணன் தம்பியாக கட்டுத்துவக்குடன் வேட்டைக்குப் போய் பாதைமாறி கால் வைத்து சகோதரரில் ஒருவர் பலியாகிய அல்லது கால் களை இழந்த கவலை தரும் சம்பவங்கள் ஆங்காங்கே நிகழ்ந் துள்ளன.

இதனால் தான் கட்டுத் துவக்கைப் பாவிப்பது சட்ட விரோதம் என அரசாங்கம் அறிவித்தது. ஆனாலும் இரகசியமாக கட்டுத் துவக்கை பாவிப்போர் இருந்தார்கள்.

இடியன் துவக்கு என்பது நெருப்புக் குச்சு மருந்துகள் எடுத்து துப்பாக்கி சன்னத்தின் வெற்றுக் கூட்டுக்குள் அடைத்து கெற்பு

செய்து வெடிக்க வைக்கும் ஓர் முறையாகும்.

நெருப்புக் குச்சி மருத்துகளை எடுத்து ஈயப் பேப்பர் கொண்டை சரிக்கட்டி துவக்கினுள் போட்டு வில்லுவால் அமர்த்தி வெடி வைப்பார்கள். இடியன் துவக்கில் ஒரு சன்னத்தை உருவாக்கிச் சுட்டால் அடுத்த சன்னம் உருவாக்க அதிக நேரம் எடுக்கும்.

துவக்கைப் பாவிக்கும் போது ஒரு முறை வெடி வைத்தால் மிருகங்கள் கலைந்து தூரத்துக்கு ஓடி விடும். அவ்வாறு ஓடும் சில மிருகங்கள் துவக்கை வைத்திருக்கும் வேட்டைக் காரனை தாக்கிக் கொன்றுவிடக் கூடிய ஆபத்துகூட உள்ளது. இதனால் மிருகங்களை மிகத் துல்லியமாகக் குறி வைத்து சுட்டுக்கொல்ல வேண்டும். கூட வரும் சக வேட்டைக் காரர்களை பார்த்து மிகவும் அவதானமாகச் சுட வேண்டும்.

அரசாங்கம் வேட்டையாடும் நோக்கத்துடன் துவக்கை அனுமதிக்கவில்லை. ஆனாலும் சட்டத்தின் ஆட்சி மிகவும் இறுக்கமாக தேவைப்படாத அக்காலத்தில் பரவலாகவே துவக்குப் பாவனையும் இருந்தது.

பன்றிகளை வேட்டையாடுவோர் மின்சாரக் கேபிளில் தடம் செய்துபன்றிகளைபிடிக்கும்முறையையும்கடைப்பிடித்தார்கள். பிடித்த பன்றியை கொன்றுவிட்டு கால்களை இறுக்கக் கட்டி காட்டு மரம் ஒன்றில் தலைகீழாக தொங்க விடுவார்கள். பின்பு பன்றிக்குக் கீழே நெருப்பை மூட்டி பன்றியின் உரோமங்கள் எரிந்து போகும் வண்ணம் நெருப்பை மூட்டுவார்கள். நெருப்பு அணைந்து பன்றியின் உடல் சூடும் குறைந்த பின்பு பன்றியை

உரித்து இறைச்சியாக்கிக் கொள்வார்கள். வேட்டைக்கு போன வர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தமக்குள் பங்குபோட்டு கொள்வார்கள்.

கெற்றப்போலால் அணில், குருவி, புறாக்களை வேட்டை யாடும் முறையும் இருந்தது. யாழ்ப்பாணத்தில் முச்சந்தி, நாற் சந்தி, ஐந்து சந்தி என்பது போல கெற்றப்போல் சந்தி என அழைக்கப்படும் பேச்சு வழக்கும் இதில் இருந்து வந்ததோ தெரியவில்லை.


ஆனால் இன்றைய இளைய தலைமுறைக்கு கெற்றப்போல் சந்தி என்றால் என்னவென தெரியுமோ தெரியாது.

மனித வாழ்வில் கால மாற்றம் நிறையவே விடயங்களை மாற்றி விட்டது. எனது வீட்டுக்கு அருகாமையில் முயல் வேட் டைக்கு நாய்களுடன் வந்த மனிதர்களின் வேட்டையாடு தலைக் கண்டதால் என் சிந்தனையை அது கிளறியதால் இன் றைய பத்தி மலர்ந்துள்ளது.

இது போன்ற பழக்க வழக்கங்கள் அருகி விட்டாலும் மறைந்து விட்டாலும் கூட அவை யாழ்ப்பாண நினைவுகள் என் னும் காலப் பெட்டகத்தில் தவறாமல் வரவு வைக்கப்பட வேண்டி யவை தான்.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு**

**2013 நவெம்பர் 24, டிசெம்பர் 01**




# அருகி வரும் பாரம்பரிய உணவு வகைகள்

உலகில் உள்ள இனங்கள், பிரதேச மக்கள் யாவரும் தமக்கென தனியான உணவுப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளார்கள். பிரதேசச் சூழல், வளங்களின் கிடைப்பனவு, மதம் சார்ந்த நம்பிக்கைகள், பாரம்பரிய உணவு வகைகளை தீர்மானிக்கின்றன.

பசி உள்ள மனிதன் பசியைப் போக்கவென தேடிய உணவு வகைகளும் காலமாற்றத்தால் பெரிதும் மாறுபட்டுக் கொண்டுள்ளன.

எமது நாடும் பல்லின மொழி, மத, பண்பாடு உள்ள ஒரு நாடாகும். அதனால் இனத்துக்கினம் பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபட்ட உணவு பழக்க வழக்கங்களை காணமுடிகிறது. இயற்கையுடன் இசைந்து வாழ்ந்து உருவாக்கிய உணவுப்

பழக்க வழக்கங்கள் பல வழக்கொழிந்து போகின்றன அல்லது அருகிப்போகின்றன, மாறுபட்டுக் கொள்கின்றன.

எமது முன்னோர்கள் சமைத்தும், பச்சையாகவும் உண்ட உணவுகள் உடல் ஆரோக்கியத்தைக் கொடுத்தன. நோய் தீர்க்கும் மருந்தாகவும் அமைந்தன. சிறந்த உடல் பயிற்சி உள்ள வாழ்க்கை முறை, மன அழுத்தம் இல்லாத சமூகச் சூழல் காரணமாக நோயின்றி நீண்டகாலம் உயிர் வாழ்ந்தார்கள். நாகரீக மோகமும் அவசர வாழ்க்கைக் கோலங்களும் உணவு முறைகளில் நிறையவே மாற்றங்களை கொண்டுவந்து விட்டன. இதனால் ஆரோக்கிய குறைவு ஏற்பட்டு மனிதர்களுக்கு புதுப்புது நோய்களும் ஏற்படுகின்றன.

உணவே மருந்தாக அமைந்த உன்னத காலத்தின் பதிவுகளை இரைமீட்டி ஆவணப்படுத்தப்பட வேண்டியதும் காலத்தின் கடமையாக உள்ளது. யாழ்ப்பாண குடாநாட்டில் பாரம்பரிய உணவு வகைகளை ஆவணப்படுத்தும் நோக்கில் இன்றைய பத்தி மலர்கின்றது.

முழுமையாக 100 வீதம் ஆவணப்படுத்த முடியாது விட்டாலும் கூட இது ஓர் வழிகாட்டும் ஆவணமாக அமையும்.

இங்குள்ள உணவுப் பழக்க வழக்கங்களை இரு பிரதான கூறுகளாக வகுக்கலாம். ஒன்று விவசாயம் சார்ந்த பிரதேச உணவு பழக்க வழக்கங்கள். மற்றையது கடல் சார் பிரதேச உணவு பழக்க வழக்கங்கள்.

முதலில் விவசாயம் சார்ந்த பிரதேச உணவுப் பழக்க

வழக்கத்தைப் பார்ப்போம். கிராமங்களில் கிடைக்கக் கூடிய மூலிகை வகைகளைக் கொண்டு செய்யப்படும் உணவு வகைகளில் மாதிரிக்குச் சிலவற்றைப் பார்ப்போம்.

விடத்தல் இலையைப் பயன்படுத்தி விடத்தல் களி செய்யப்படுகிறது.

விடத்தல் இலைகளை ஆய்ந்து நன்கு கழிவியபின் அதனை ஊறவைத்து பச்சை அரிசியுடன் கலந்து இடிப்பார்கள். அந்த அரிசி மாவை அரித்தபின் தேங்காய் துருவி பிழிந்த முதல் பாலுடன் கலந்து அளவாக சர்க்கரை, சீரகத்துடன் கலந்து தாச்சியில் விடத்தல் களி கிண்டுவார்கள். இக் களியைச் சாப்பிட்டால் நாரிப்பிடிப்பு வருத்தம் நிரந்தரமாகவே அகன்றுவிடும். ஆங்கில மருந்துகளைப் போட்டு நாரிப்பிடிப்பு நோய்க்கு வைத்தியம் பார்ப்பவர்கள் இதனை ஒரு முறை செய்து பாருங்கள்.

மொசுமொசுக்கை ரொட்டி இருமல் நோயை போக்கவல்லது. மொசுமொசுக்கை இலைகளை எடுத்து அதனை நன்கு கழுவிய பின் தூள்தூளாக அரிந்து அரிசி மாவுடன் நன்கு பிசைந்து அளவாக உப்புச் சேர்க்க வேண்டும். பின்பு ரொட்டியாக தட்டி எடுத்து தோசைக் கல்லில் வைத்து சுட்டுச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும். சில நாட்கள் இவ்வாறு சாப்பிட்டு வர இருமல் தொல்லை ஓடியே போய்விடும். சுவை கூட்ட வெங்காயம், பச்சை மிளகாய் போன்றவற்றையும் சேர்ப்பார்கள். இவற்றை நல்லெண்ணையில் பொரித்து ஒரு கிழமை வரை வைத்திருந்து ரொட்டியைச் சாப்பிட்டார்கள்.

உழுத்தம்மா கூழ் காய்ச்சி குடிக்கும் போது நெஞ்சுத் தடிமன் அகன்றது. உழுத்தம்மா, கற்கண்டு, சின்னச் சீரகம், மஞ்சள், மிளகு, உப்பு ஆகியவற்றைச் சேர்த்து உழுத்தம்மா கூழ் மண் பானையில் காய்ச்சினார்கள். இக் கூழை ஊதுமா கூழ் என அழைக்கும் வழக்கமும் இருந்தது. நிறை உணவாகிய இக் கூழ் தடிமன் நோயை விரைவாக குணப்படுத்தியதுடன் உடல் ஆரோக்கியத்தையும் தந்தது.

விடத்தல் இலையை எள்ளிலும் சிறிய இலை என்பார்கள். இலையின் வடிவம் அப்படி. விடத்தல் இலைகளை அரிசி மாவுடன் கலந்து தேங்காய்ப்பூ சேர்த்து விடத்தல் பிட்டு அவித்தார்கள். இதுவும் நாரிப்பிடிப்பு நோயை விரைவாகப் போக்கியது.

பொருத்துவான் இலைகளை சேகரித்து தூய்மையாக்கி அரிசி மாவுடன் கலந்து தேங்காய்ப்பூ சேர்த்து பிட்டு அவித்து சாப்பிட்டார்கள். இப்பிட்டு பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் அதிகமாக இரத்தம் போய் உடல் பலவீனம் ஏற்பட்டிருந்தால் அதனைப் போக்கி பலத்தைக் கொடுத்தது.

சிறுகுறிஞ்சா இலைகளையும் அரிசி மாவுடன் சேர்த்து பிட்டு அவித்து சுடச்சுட இறக்கி நல்லெண்ணையைச் சேர்த்து சாப்பிட்டார்கள். இதுவும் உடல் பலத்தை கொடுத்தது. நாரிப் பிடிப்பு நோயையும் போக்கியது.

தோட்டங்களில் நிலத்தில் பரவும் பயிரி என்னும் ஒரு வகைத் தாவரத்தை எடுத்து மண் போகக் கழுவார்கள். பின்பு அதனை தூள் துளாக அரிந்து வெங்காயம், பச்சை மிளகாய் சேர்த்து

கோதுமை மாவுடன் கலந்து நீத்துப்பெட்டியில் பிட்டு அவிப்பார் கள், சிலர் இதனுடன் பயிற்றங்காய், கத்தரிக்காய், வாழைக்காய் போன்றவற்றையும் கலந்து பிட்டு அவிப்பார்கள்.

நெத்தலி மீன் அல்லது சிறிய மீன்களை அடுத்து முள்ளைப் போக்கிய பின் சதையை எடுத்து கீரை, மாவுடன் கலந்து பிட்டு அவித்துச் சாப்பிட்ட பழக்கம் இன்றும் அரிதாகத் தொடர்கின்றது.

பச்சை ஒடியல் மாவைப் பிசைந்து அதனுடன் அவித்த மீன், இறால் என்பவற்றின் சதையை எடுத்து மரக்கறி வகை சில சேர்த்து பிட்டு அவிக்கும் வழக்கமும் இருந்தது.

ஒடியல் மாவை பிசைந்து அதனுடன் கத்தரிக்காய், வாழைக் காய், பயிற்றங்காய் என்பன சேர்த்து மரக்கறி ஒடியல் பிட்டு அவிக்கும் வழக்கமும் முன்னாளில் இருந்தது.

மரவள்ளிக் கிழங்கை அவித்தபின் அதனை அம்மியில் வைத்து செத்தல் மிளகாய், வெங்காயம், தேங்காய்பூ, உப்பு என் பன சேர்த்து அரைப்பார்கள். அரைத்து பசையாக வந்த பின்பு உருண்டைகளாக்கிச் சாப்பிடுவார்கள்.

முழு உழுந்து தூய்மையாக்கி வறுத்த பின்பு அவிப்பார்கள். அதனை உரலில் வைத்து அதனுடன் தேங்காய்ப்பூ, சர்க்கரை என்பன சேர்த்து துவைப்பார்கள். பின்பு இவற்றை உருண்டை யாக்கி சாப்பிட்டார்கள். இதே செய்முறையில் பயறு, கடலை என்பனவும் துவைத்துச் சாப்பிடும் முறைமையன்று மிகப் பெருமளவில் இருந்தது.

உறைப்பு உணவு விருப்பம் உள்ளவர்கள் சர்க்கரைக்குப் பதிலாக செத்தல் மிளகாய், வெங்காயம் என்பன சேர்த்தார்கள். சாம்பாறு வைக்கும் மரபு முன்னாளில் எம்மவர் வீடுகளில் பரவலாக இருந்தது. சாம்பாறு சிறந்த சமவிகித உணவாக இருந்தது. பூசணி, கத்தரி, பருப்பு, பயிற்றங்காய் போன்றவை சேர்த்து தேங்காய் பாலுடன் தூள் கலந்து செய்யப்படும் சாம் பாறு விருப்பத்துக்குரியதாக இருந்தது. கிராமப் புறங்களில் இன்றும் இம்முறைமை ஓரளவு புழக்கத்தில் உள்ளது.

யாழ்ப்பாணத்தின் தனித்துவத்தைக் கூறும் ஆடிக் கூழ் காய்ச்சும் வழக்கம் இன்றளவும் தொடர்கிறது. ஆக முந்தைய நாட்களில் ஆடிப் பிறப்புக்கு பாடசாலை விடுமுறை விடும் வழக் கம் கூட இருந்தது.

"ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை, ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே, கூடிப் பனங்கட்டி கூழும் குடிக்கலாம் ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே" என்னும் நாட்டார் பாடல் முன்னாளில் மிகப் பிரபலமாக இருந்தது.

இக் கூழ் காய்ச்சும் முறை பிரதேசத்துக்குப் பிரதேசம் காலத் துக்கு காலம் மாறுபட்டு இருந்தது. பச்சை அரிசியை ஊற வைத்து மா இடித்த பின் கருப்பணி சேர்த்து மண் பானையில் கூழ் காய்ச்சும் வழக்கம் இருந்தது. இந்தக் கூழின் சுவை தனித்துவமானது.

பின்னாளில் கருப்பணி காய்ச்சும் முறைமை குறைந்து பனங்கட்டியை கூழுக்கு சேர்த்தார்கள். இப்போது கோதுமை சேர்க்காத, சீனி சேர்க்காத தூய பனங்கட்டியைப் பெறுவது

முயல் கொம்பாகி விட்டது.

தற்போது பனை அபிவிருத்திச் சபையின் விற்பனை நிலையமான கற்பகம் ஆடிக் கூழ், ஒடியல் மாவினால் தயாரிக் கப்பட்ட மரக்கறிக் கூழ், மச்சக் கூழ் என்பனவற்றை விற்பனை செய்து வருவது வரவேற்கத்தக்கது.

மண் பானையில் மட்டும் தான் சோறு சமைக்கும் வழக்கம் ஆக முந்திய நாட்களில் இருந்தது. இரவில் மண் பானையில் மிஞ்சிய சோற்றுடன் தண்ணீர் கலந்து விடுவார்கள். விடியக் காலையில் வாய் கொப்பளித்த பின்பு இந்தப் பழஞ்சோற்று தண்ணீரை அருந்துவரர்கள். காலையில் தேநீர் குடிக்காமல் பழந்தண்ணீரை மட்டும் அருந்தும் பழக்கத்தைக் கொண்டிருந் தார்கள். இதனால் மலச் சிக்கல் ஏற்படாமல் உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்பட்டது.

வீட்டில், பொது இடங்களில் நிகழும் மங்கல நிகழ்வுகளுக்கு பாரம்பரியமான பலகார வகைகளை மட்டும் செய்தார்கள். சீனிப்பணியாரம், பயித்தம்பணியாரம், அரியதரம், பனங்காய் பணியாரம் என பலகார வகைகளின் பட்டியல் நீளமானது. அத்துடன் பலகார உரல் என ஒரு வகை உரலும் அதனுள் இட்டு பலகாரம் பிழியக் கூடிய பல்வேறு அச்சுக்களையும் வைத்திருந் தார்கள். தற்போதும் இந்த நடைமுறை ஓரளவுக்கு பின்பற்றப்படு கின்றது. அச்சுப் பலகாரங்களில் அச்சுகளின் வடிவங்களுக்கு ஏற்பமாறுபடும் வகைளில் பலகாரம் செய்யப்பட்டன.

பருத்தித்துறை வடை மிகப் பிரபலமாக அன்றும் இன்றும் இருக்கிறது. இவ்வடையின் ஆரம்பத் தோற்றம் குறித்து

கூறுவோர் கள்ளுத் தவறணைகளில் உறைப்புச் சுவைக்காக தயாரிக்கப்பட்ட தட்டை வடையாகவே இது அறிமுகமானதாம். அப்போது கள்ளு வடை, தவறணை வடை என்ற பெயர்களில் இது அழைக்கப்பட்டது. பின்னாளில் இந்த வடை வியாபாரம் நோக்கம் கருதி கடைகளில் விற்கப்படும் வடையாகிய போது மரியாதை கருதி பருத்தித்துறை வடை என பெயரிடப்பட்டது.

பருத்தித்துறைக் கிராமத்தில் செய்யப்படும் வெள்ளை அப்பம், எள்ளுப்பாகு, பொரிமா உருண்டை, சீனிக்கச்சான் தட்டு போன்ற வகைகள் மிகவும் தனித்துவமானவை. இவற்றின் தோற்றமும், பாவனையின் பரவலாக்கமும் தனியாக ஆராயப் படவும், ஆவணப்படுத்தப்பட வேண்டியதுமாகும். இன்றளவும் இவற்றின் உற்பத்திகள் தொடர்வது குறிப்பிடத்தக்கது. பருத் தித்துறை நகரப் பிரதேசத்தில் இவற்றை செய்து விற்பனை செய்து வருவாயீட்டி வாழும் குடும்பங்கள் பல உள்ளன.

பனை சார் விளை பொருட்களில் ஆராயப்பட வேண்டியவை பல உள்ளன. பனை தறிக்கப்படும்போது பனை மரத்தின் குருத்து உணவாக உட்கொண்ட மரபொன்றிருந்தது.

பனங் குருத்துக்களில் ஆணிக்குருத்து, மட்டைக் குருத்து, சார்வுக்குருத்து என மூன்று வகைப்பட்டதாக இருக்கிறது. பனை வட்டுடன் வருவது ஆணிக் குருத்து ஆகும். பனை வட்டில் பிஞ்சு மட்டைகளுடன் வருவது மட்டைக்குருத்து ஆகும். சார்வுடன் வரும் பிஞ்சு குருத்துகள் சார்வுக்குருத்து எனப்படும். வயிற்றில் பூச்சித்தாக்கமுள்ள குழந்தைகளுக்கு சார்வுக்குருத்துக் கொடுப் பார்கள்.

குருத்து தேவைக்கெனப் பனைகளைத் தறித்த சம்பவங்கள் பல நிகழ்ந்துமுள்ளன. வீடு கட்டும் தேவைக்கு பனை தறிக்கப் படும் போது பனங் குருத்துக்கு கடுமையான டிமான்ட் இருக்கும்.

தேனீர் குடிக்கும் போது சீனி பாவிப்பதற்குப் பதிலாக கருப் பணிச் சாறு கலந்து இரண்டு மூன்று முறை மூக்குப் பேணியால் குடித்தார்கள். இது உடல் ஆரோக்கியத்தை கொடுத்தது.

தீட்டுப்பச்சை அரிசியில் கஞ்சி காய்சும்போது கருப்பணி கலந்து காய்ச்சும் கருப்பணிக் கஞ்சி தனிச்சுவையானது. கல்லாக்காரம் தயாரிக்கும் நிகழ்வு முன்னைய காலத்தில் கிராமங்களில் மிகவும் பிரபலமாயிருந்தது. பதநீர் எனப்பட்ட கருப்பணியைத் தாச்சியில் நன்கு கொதித்து தடித்து வரக் காய்ச்சுவார்கள். அது ஆறும் நிலையில் வாய் அகன்ற மண் பானையில் ஊற்றுவார்கள். பின்பு பானையில் கையை விட்டு நூலைச் சுற்றி சுற்றி விடுவார்கள். இதனால் கருப்பணிப் பாணி நன்கு விளைந்து இறுகி வரும். இதனையே கல்லக்காரம் என் பார்கள்.

மலச்சிக்கல் உள்ளவர்கள் இந்தக் கல்லாக்காரத்தை உண்டு வர மலச்சிக்கல் தானாகவே நீங்கும். இன்றும் ஆயுர்வேத வைத்தியர்கள் குழந்தைப் பிள்ளைகளின் கச்சல் மருந்துகளைக் கல்லாக்காரத்தில் தான் கலந்துகொடுக்கின்றார்கள். இன்று கல்லாக்காரம் மருந்துக் கடைப் பொருளாகி விட்டது.

பனங்கொட்டைகளைக் கொண்டு அமைக்கப்பட்ட பனம் பாத்திகளைக் கிண்டுவதற்கு ஊர் கூடி நிற்பார்கள். பனங்

கிழங்குகளைக் கிண்டி மலை போல் குவித்த பின் முதற் தெரிவான கிழங்குகளை எடுத்து அவிப்பார்கள். அவித்து ஆறிய கிழங்குகளை குந்து, களைந்து துப்பரவாக்கிய பின்பு சிறு துண்டுகளாக முறிப்பார்கள். இவற்றுடன் பச்சை மிளகாய், வெந்தயம், மிளகு, உள்ளி (பூடு) என்பவற்றைச் சேர்த்து உரலில் இட்டு இடிப்பார்கள். உரலில் இடித்து துவைத்த பின்பு பனங்கிழங்கு பச்சைப்பிடிப்பாக இருக்கும். இவற்றைச் சிறு சிறு உருண்டையாக்கி உண்பார்கள்.

பனங்கிழங்கை அவிக்காமல் நெருப்பில் போட்டுச் சுட்டு அது நன்கு அவிந்த பின் துப்பரவாக்கிய பின்பு உரலில் இட்டு மேற்சொன்ன பொருட்களைச் சேர்த்து துவைக்கும் வழக்கமும் இருந்தது. பனங்கிழங்கு கிண்டிய வேலையில் கலந்துகொண்ட யாவருக்கும் இச்சிற்றுண்டியைக் கொடுப்பார்கள்.

பனங்கிழங்கு கிண்டும் போது முதல் கிண்டிய பனங் கிழங்கை ஐந்து அல்லது பத்தாக வைத்து கட்டியபின் நாலு மூலைக்கும் வைத்த பின்பு பனம்பாத்தியைக் கிண்டும் மரபும் இருந்தது. பனம்பாத்தியின் தென்மேற்கு மூலையாகத்தான் அதிகாலையில் பனம் பாத்தியைக் கிண்ட ஆரம்பிப்பார்கள். கிண்டிக் குவித்த பனங்கிழங்குக் குவியலுடன் கருக்கு மட்டை ஒன்றையும் வைப்பார்கள்.பனங்கிழங்கு கிண்டி முடித்த பின்பு மாலை 4 மணியளவில் மச்சப் படையல் படைக்கும் முறை இருந்தது.

மண்பானையில் மொட்டைக் கறுப்பன் அரிசியைச் சோறாக் குவார்கள். மண்சட்டிகளில் விருப்பத்திற்குரிய மீன்வகைகளைச் சமைப்பார்கள். இவற்றைத் தலைவாழை இலை ஒன்றை

வைத்து அதன் மேல் சோறுகறிகளைப் பரவிப்படைப்பார்கள். படைத்த பின்பு கிழங்கு கிண்டிய வேலையில் பங்கெடுத்த குடும்பங்களுக்கு படையல் சாப்பாட்டைப் பங்கிட்டுக் கொடுப் பார்கள். சோறுகறிகளைச் சேர்த்துக் குழைத்து உருண்டைக ளாக்கியும் பங்கிட்டுச் சாப்பிடுவார்கள். கிண்டிய பனங் கிழங்கை நெருப்பில் சுட்டு அதனைப் பனம் பாத்தியின் நாலு மூலைக்கும் வைத்த மரபும் சில பிரதேசங்களில் இருந்தது.

பனங்கிழங்கை அவிக்காமல் பச்சையாகக் கிழித்துக் காயப் போட்டு நன்கு காய்ந்த பின்பு எடுக்கும் முறைமையை ஒடியல் போடுதல் என்பார்கள். பனங்கிழங்கை நன்கு அவித்து பின்பு ஆறியவுடன் தோல் நீக்கி இரண்டாகப் பிளந்து ஈர்க்கில் கோர்த்து அல்லது கோர்க்காமல் காயவைத்து எடுப்பதைப் புளுக்கொடியல் போடுதல் என்பார்கள்.

பச்சை ஒடியல் காய்ந்த பின்பு உரலில் இடித்து மாவாக்கி வைத்திருப்பது ஒடியல் மா சேகரித்தலாகும். இந்த ஒடியல் மா பலவித உணவுத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. அது போல புளுக்கொடியல் போட்ட பின்பு அவற்றையும் உரலில் இட்டு இடித்து மாவாக்கி வைத்திருப்பார்கள். இந்த மாவைக் கையிருப்பில் வைத்து தேங்காய்ப் பூ, சீனி போட்டு சிறிதளவு வெந்நீர் சேர்த்துக் குழைத்து உருண்டைகளாக்கி சாப்பிடுவார் கள். அவித்த பனங்கிழங்கை வட்டமாக வெட்டிப் போட்டு சீனிப் பாணி அல்லது கருப்பணிப்பாணி சேர்த்துச் சாப்பிடும் வழக்க மும் இருந்தது.

கோதுமை மா புழக்கத்தில் இல்லாத காலத்தில் பிட்டு அவிக்க ஒடியல்மா தான் பயன்பட்டது. ஒடியல்மா கையிருப்பில்

இல்லாவிட்டால் பனங்கிழங்கை அவிக்காமல் அவற்றை மிக மிக மெல்லியதாகச் சீவுவார்கள். வெய்யிலில் காயவைப்பார் கள். ஒரு பகல் முழுவதும் வெய்யிலில் காய்ந்து நன்கு உலர்ந்த பின் உரலில் இட்டு மாவாக்கி பின்பு பிட்டு அவிப்பார்கள். மிகவும் வறுமையான குடும்பத்தினர் இந்த முறையைக் கையாண்டார்கள்.

பனம்பாத்தி கிண்டும் காலங்களில் பூரான் மிகவும் விருப் பத்திற்குரிய உணவாக இருந்தது. முளை மொட்டுப் பூரான் மிகவும் சுவையானதாக இருக்கும். முளைத்த பனங் கொட்டை ஒன்று முளை கருகி இடையில் நின்றால் அத்தகைய பூரான் களை வெட்டினால் தேங்காய்ச் செட்டுப் போல கட்டியான சுவை யான பூரான் கிடைக்கும்.

கிழங்கு நன்கு விளைந்த பின்பு வந்த பூரான் தண்ணீர் பூரானாக இருக்கும். இது சுவை குறைந்தது.

1991 ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாண குடாநாட்டு தீவுப் பிரதே சங்கள் வலம்புரி இராணுவ நடவக்கை மூலம் முற்றுமுழுதாக இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் சென்றது. அங்குள்ள மக் கள் இயல்பு நிலை வந்து சகல உணவுப் பொருட்களும் கிடைக் கும் வரை பனை விளை பொருட்களை உண்டு உயிர் வாழ்ந் தார்கள்.

பனங்காய் எனப்படும் பனம் பழத்தை சுட்டு உணவாக்கிய முறையும் இருந்தது. பனங்காயை நன்கு காய்ந்த இலை, குலை களை பாவித்து நெருப்பில் வைத்து சுட்டு இரண்டு அல்லது மூன்று நாள் புளிக்க வைப்பார்கள். பின்பு இப் பனம்பழத்தை

எடுத்து பிசைவார்கள். பிசைவதற்கு சிறிதளவு தண்ணீர் சேர்ப் பார்கள். பழப் புளியும் சேர்த்து பிசைந்தபின் வரும் களியை உணவாக உண்பார்கள். இவ்வாறு உண்ணும் போது வயிற்றில் சமிபாட்டுக் கோளாறு இருக்காது. வயிற்றுள் உள்ள பூச்சிகள் யாவும் இறந்துவிடும். இதனால் அக்காலத்தில் வேமொக்ஸ் (Vermox) போன்ற பூச்சுக் குளிசைகளும் தேவைப்படவில்லை.

பனங்காய் களியை எடுத்து தாய்ச்சியில் வைத்து சீனி சேர்த்துக் காய்ச்சி களியாக்குவார்கள். அதனுடன் சேர்த்து கோதுமை மாவை பிசைவார்கள். பின்பு அவற்றை சிறுசிறு உருண்டைகளாக்கி கொதிக்கும் தேங்காய் எண்ணெணையில் போட்டு பனங்காய் பணியாரம் சுடுவார்கள். இந்தப் பனங்காய் பணியாரங்கள் கோயில் திருவிழாக்களில் விற்கப்பட்ட பிர பலமான சிற்றுண்டியாக இருந்தது.

தற்போதும் பனங்காய் பணியாரம் செய்யும் முறை இருக் கின்றது தான். ஆனால் முன்னைய காலங்களில் இருந்தளவுக்கு வெகுசனச் செல்வாக்கு இல்லை. பனங்காயைப் பிசைந்து களியாக்கி அதனை பாய் ஒன்றின் மீது பரவி வெயிலில் காய வைத்து பனாட்டு ஆக்கிய முறைமை வீட்டுக்கு வீடு பெரு வழக் காக இருந்தது. பனாட்டை சிறுசிறு துண்டுகளாக்கி வெட்டிய பின் கருப்பணி பாணிக்குள் மிளகு, சீரகம், பயறு, அரிசி என்பன சேர்த்து பாணிப் பனாட்டு ஆக்குவார்கள். மண் பானை ஒன்றினுள் உருவாக்கப்பட்ட பாணி பனாட்டை அகப்பையால் எடுத்து தேவைப்படும் போது சாப்பிடுவார்கள். தனித்துவமான சுவை கொண்ட இப்பனாட்டு பல நாள்கள் பழுதடையாமல் இருக்கும். பனாட்டை யாழ்ப்பாணக் கண்டோஸ் (சொக்லேட்)

எனவும் புளுக்கொடியலை யாழ்ப்பாண பிஸ்கெட் எனவும் பிறமாவட்ட மக்கள் அழைக்கும் வழக்கமும் உள்ளது.

ஒடியல் மாவை சோறு சமைத்து கஞ்சி வடித்தபின்பு சோற்றுக்குள் தூவி உண்ணும் வழக்கமும் சில பிரதேசங்களில் இருந்தது. ஒடியல் மாவைக் குழைத்து அளவாக தேங்காய்ப்பூ சேர்த்து நீத்துப்பெட்டியில் வைத்து பிட்டு அவித்துச் சாப்பிடு வார்கள். ஒடியல் மாவுடன் நெத்தலி மாவை சேர்த்து நெத்தலிப் பிட்டாக சாப்பிடும் வழக்கமும் இருக்கின்றது.

தேறை என்னும் ஒரு வகை மீனை சேர்த்து பிட்டு அவிப் பார்கள். மங்கு மீனும் சேர்த்தார்கள். பிரதேசங்களுக்குப் பிரதே சம் மீன்களைச் சேர்த்து பிட்டு அவிப்பது மாறுபட்டு இருக்கிறது.

ஒடியல் மாவைக் குழைத்து கத்தரி, பயிற்றை போன்ற மரக்கறிகளைச் சேர்த்து பிட்டு அவிக்கும் பாரம்பரிய முறையும் இருக்கிறது. ஒடியல் மாவுடன் வெங்காயம், பச்சை மிளகாய், கத்தரி ஆகியவற்றுடன் வலை வீசிப் பிடிக்கும் மடவை மீன் சேர்த்து பிட்டு அவிக்கும் முறையும் சில கிராமங்களில் இருக் கிறது.

ஒடியல் மாவை பயன்படுத்தி மண்பானையில் கூழ் காய்ச்சும் வழக்கம் அன்றும் இன்றும் பிரபலமானது.

யாழ்ப்பாண மண்ணின் அடையாள உணவுகளில் கூழ் மிகப் பிரபலமானது. வெளிமாவட்டங்கள், புலம்பெயர் நாடுகளில் இருந்து வருபவர்கள் எல்லாம் கூழின் வாசனையை நுகராமல் போவதில்லை. கூழ் சிறந்த சம விகித உணவாகும். மண்

பானை ஒன்றை எடுத்து ஒடியல் மாவை தண்ணீர் சேர்த்து காய்ச்சுவார்கள். ஒடியல் மா சேர்த்த அளவுக்கு செத்தல் மிளகாய், மிளகு, பூடு (உள்ளி) ஆகியவற்றை அம்மியில் அரைத்து கூழுக்கு சேர்ப்பார்கள்.

நண்டு, இறால், கலவாய் மீன், பெருமீன் என்பவற்றின் தலைகளை இடுவார்கள். பலாக்கொட்டை, பயிற்றங்கொட்டை, கொஞ்சம் அரிசியும் இடுவார்கள். பழப்புளியும் கரைத்து விடு வார்கள். பலாக்கொட்டை கடிபடக்கடிபட கூழ் குடிக்கும் போது தனிச் சுவையாக இருக்கும். அதனால் பலாப்பழம் கிடைக்கும் சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி மாதங்களில் தான் பெருமளவில் கூழ் காய்ச்சுவதற்கு தேர்ந்தெடுப்பார்கள்.

கூழுக்கு மீன் சேர்ப்பது பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபட்டு இருக்கிறது. சில பிரதேசங்களில் நன்கு செதில் செதுக்கிய பெரிய விளை மீன் ஒன்றை பனை ஈக்கிலில் கட்டி கூழ் காய்ச்சும் போது பானையினுள் வைத்திருப்பார்கள். விளை மீன் நன்கு அவிந்து வந்தபின்பாக மீன் தசைகள் பானையினுள் கூழுடன் சேர்ந்த பின்பு மீன் முள்ளை பக்குவமாக எடுப்பார்கள். மண் பானையில் காய்ச்சிய கூழை மண் சட்டியில் இடுவார்கள். பனையோலையில் வெட்டி உருவாக்கிய பிளாவில் கூழ் குடிக்க பயன்படுத்துவார்கள். சிரட்டையில் கூழ் விட்டு குடிக்கும் வழக்கமும் இருக்கிறது.

மீன் கூழுக்கு சுவை சேர்ப்பதற்காக இடும் பொருட்கள் பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபடுகிறது.

சுறாவறை, திருக்கைவறை என்பவை மிகப் பிரபலமான

உணவாக அன்று இருந்தது. இன்றும் ஓரளவு இருக்கிறது. சுறா வில் குரக்கன் சுறா, பால் சுறா என பிரதான இரு வகைகள் இருந்தாலும் பால் சுறா தான் வறை செய்வதற்கு பெருமளவு விரும்பி பயன்படுத்தப்படுகிறது. திருக்கை மீனில் அளவான ஒன்றை எடுத்து அவித்த பின்பு வறை செய்வார்கள். அறக்குழா மீனை எடுத்த உரித்து பிய்த்து எடுத்தபின் வறை செய்வார்கள்.

பேத்தை மீன் என்னும் ஒரு வகை மீனிலும் வறை செய்வார் கள்.

முன்பக்கம் மீனின் தலையாகவும் பின்பக்கம் பாம்பின் வாலாகவும் தோற்றம் காட்டும் விலாங்கு மீனில் கறி சமைத்து நாரிப்பிடிப்பு நோய் உள்ளவர்கள் சாப்பிடுவார்கள்.

குழந்தை பெற்ற பெண்கள் பால் சுரப்பதற்காக பால் சுறா மீனை விரும்பி உண்பார்கள். பால் சுரக்கக் கூடிய மீனை தெரிவதில் கவனம் செலுத்துவார்கள்.

குழந்தை பேறடைந்த தாயும் வயிற்றுப் புண் போக்க சுறா மீன் சிறந்த ஒரு உணவாக அன்றும் இன்றும் விரும்பப் படுகிறது. இந்தத் தாய்மார்களுக்கு பத்தியக் கறி சமைப்பதற் கும் மீன்கள் விரும்பி உபயோகப்படுத்தப்படுகிறது.

கறி வைக்கப்பயன்படும் மீன்கள் பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபடும். நெத்தலி மீன் கல்சியச் சத்துக்கள் நிறைந்ததாக காணப்படுகின்றது. சிறுபராயப் பிள்ளைகளுக்கு நெத்தலி மீன் உள்ள உணவுகளை அதிகமாகக் கொடுப்பதில் நாட்டம் செலுத்துவார்கள். இதில் நெத்தலி மீன் சொதி பிரபலமானது.

இறாலில் சிறிய வகையான கூனி இறாலில் செய்யப்படும் சம்பல் மிகவும் விரும்பி உண்ணப்படுகிறது.

திரியாப் பாரைக் கருவாடு, கட்டாப் பாரைக் கருவாடு என்பன அன்றும் இன்றும் மதிப்புமிக்க ஒரு உணவாக உள்ளது. இக் கரு வாடுகளின் சுவை ஒரு தனிச்சுவை தான். குறிப்பாக வட மராட்சியில் பருத்தித்துறை பிரதேசத்தின் கருவாடுகள் உற் பத்தியாக்கும் முறையில் உள்ள நுட்பங்கள் காரணமாக தனிச் சுவை உடையதாக அன்றும் இன்றும் பிரபலமாக உள்ளது.

புலம்பெயர் நாடுகளில் உள்ள எம்மவர்களுக்கு விமானம் மூலமாக இக் கருவாடுகள் தொடர்ச்சியாகவே சென்று கொண்டி ருக்கிறது.

குழந்தை பேறடைந்த தாய்மார்களுக்கு பத்தியக் கறி வைப்பதற்கு இக்கருவாடுகள் அன்றும் இன்றும் பெரிதும் விரும்பப்படுகின்றன.

யாழ்.நகரத்தை அண்டிய குருநகர், பாசையூர் போன்ற பிரதேசங்களில் கடலாமை சாப்பிடும் வழக்கம் முன்னாளில் பிரபலமாக இருந்தது. கடலாமைகளை உணவாகக் கொள்வது அரசாங்கத்தின் சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டதால் தற் போது ஆமை இறைச்சி விற்கப்படுவதில்லை. ஆயினும் இரகசி யமாக ஆமையடித்து இறைச்சியாக்கி உண்பது ஆங்காங்கே நிகழத்தான் செய்கிறது.

ஆமை இறைச்சி உணவாகக் கொள்ளப்படும் காலங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் மீன் சந்தையில் ஆமை இறைச்சி

வியாபாரம் மிகப் பரபரப்பாக நடக்கும். பெரிய கடல் ஆமை ஒன்றை வெட்டி துண்டுகளாக்கி பங்காக பிரிப்பார்கள். ஆமை ஓட்டினுள் இரத்தம் சேகரித்து பக்கத்தில் வைத்திருப்பார்கள். ஆமை இறைச்சியை விற்கும்போது அந்த இரத்தத்தை இறைச் சியின் மேல் தடவி விற்பார்கள்.

இந்த இறைச்சியை வாங்குவதற்காக அதிகாலை வேளை யுடனேயே காத்திருப்பார்கள். குருநகர் பிரதேசத்தில் உள்ள பெருபாலான மக்களின் வீடுகள் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆமை இறைச்சி தான் உணவாக இருக்கும்.கடலில் பிடித்து வந்த சிறிய, நடுத்தர வகை ஆமைகளை கடற்கரையில் கூடு போல கட்டி வளர்த்து பின்பு உணவாக்குவார்கள். ஆமை இறைச்சி உண்பவர்களின் தேகத் தோல் தடித்து வரும். அத னால் இவர்கள் நோய்வாய்ப்படும் போது ஊசி மருந்து ஏற்றுவ தற்கு மிகவும் சிரமப்படுவார்கள்.

இந்த இறைச்சி வெடுக்குமிக்க உணவாகவும் இருக்கிறது. அதனால் இறைச்சி சாப்பிட்டவர்களிடமிருந்து ஒருவித துர்நாற் றம் வீசுவதாகவும் ஏனையோர் குறைப்படுகின்றார்கள்.

கடற்ரையோரம் வாழும் மக்களின் உணவு பழக்கத்தில் இது போன்ற பாரம்பாரிய உணவுகள் பிரதேசத்துக்கு பிரதேசம் மாறுபட்ட வகையில் ஏராளம் உள்ளன. அவை முழுவதும் ஆராய்ந்து பட்டியலிடப்பட்டு ஆவணப்படுத்தப்படல் வேண்டும்.

யாழ்ப்பாண மக்களின் உணவு கோலங்களின் பாரம்பரியங் களில் நிறையவே மாற்றம் வந்து விட்டன. தென்பகுதி சிங்கள மக்கள், தமது உணவுப் பாரம்பரியங்கள் குறித்து தீவிர

பற்றுதலைக் கொண்டுள்ளார்கள். தமது மதம் சார்ந்த நிகழ்வுகள், பண்டிகைகளில் இவற்றை தீவிரமாகக் கடைப்பிடித்து வருகின்றனர்.

தமது ஹோட்டல்கள், உணவு விடுதிகளில் பாரம்பரிய உணவுகளுக்கு என தனியான பகுதி ஒன்றை வைத்துள்ளார்கள்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வரும்போது இவர்களின் பாரம்பரிய உணவை விரும்பி உண்பதில் நாட்டம் செலுத்துவதை காண முடிகின்றது. ஆனால் எம்மவர் பிரதேசங்களில் இத்தகைய நிலையைக் காணமுடியாது.

பனாட்டு, புளுக்கொடியல், பருத்தித்துறை வடை, எள்ளுப் பாகு போன்ற சிலவற்றைத்தான் காணமுடிகிறது. இவற்றை எம்மவர் தமது உணவு விடுதிகளில் தனியாக வைத்து இவைதான் எமது பாரம்பரியங்கள் எனக் காட்டுவதில் ஏனோ நாட்டம் கொள்வது மிகவும் குறைவு.

எமது பிரதேசத்துக்கு என தனித்துவமாக உள்ள உடல் ஆரோக்கியத்தைத் தரக்கூடிய நோய் தீர்க்கும் இயல்புள்ள உணவு வகைகளை பேணுவதில் நாட்டம் குறைவாகவே உள்ளோம்.

பழமைகள் பாரம்பரியம் கைவிடுவதில் உள்ள நாட்டம் கவலைக்குரியது.

மேலைத்தேய நாட்டவார்கள் தமது பாரம்பரிய உணவுகளை சர்வதேச ரீதியில் பிரபலப்படுத்தியது போல நாமும் எமது

பாரம்பரிய உணவுகளை புலம்பெயர் மக்கள் ஊடாக பிரபலப் படுத்த முயலவேண்டும். KFC, Mcdonalds போல எமது பாரம்பரிய உணவுகளை சர்வதேச மயப்படுத்துவதற்கான உணவு கம்பனி களை உலகெங்கும் சிதறிவாழும் புலம்பெயர் தமிழர்கள் உரு வாக்க முயல வேண்டும்.

எமது மூதாதையர் வழிவந்த போசணை பெறுமதி கூடிய உணவுகள் செய்யும் முறைகளை ஆவணப்படுத்துவதும் சமூகத் தில் பரவலடையச் செய்வதும் காலத்தின் கட்டாய தேவையாகும். இது தொடர்பான தேடலும் ஆவணப்படுத்தப்படலும் தமிழ் பேசும் பிரதேசம் எங்கும் வாழும் மக்களால் செய்யப்படல் வேண்டும் என்ற கோரிக்கையுடன் இன்றைய பத்தி நிறைவுக்கு வருகின்றது.

**நன்றி - தினக்குரல் வார வெளியீடு**

**2013 ஏப்பிரல் 21, 28, மே 05**



# பங்கர் (கால நினைவுகள்)

முப்பது வருட போர் முற்றுப் பெற்றுவிட்டது. போர் தந்த விளைவுகள் கற்று தந்த கசப்பான நினைவுகள் எமக்கு வர லாற்று பாடங்கள் .

போர்க்காலம் கற்று தந்த சொற்களில் ஒன்று தான் பங்கர் (Bunkar) இச் சொல்லைப் பதுங்கு குழி எனத் தமிழில் அழைக்கின் றனர். 1970 களின் இறுதிப் பகுதியில் கைத்துப்பாக்கி சூட்டுடன் ஆரம்பித்த தமிழீழ விடுதலைப் போராட்டம் 1980 களின் முற் பகுதியில் துப்பாக்கிச் சூடு, கைக்குண்டுத் தாக்குதல் என மாறி யது. 1983 யூலை 23 ஆம் நாளன்று யாழ் திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியடியில் கண்ணி வெடித் தாக்குதலாக உருமாறி யது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால் மிக வெற்றிக ரமாக மேற்கொள்ளப்பட்ட இந்தக் கண்ணி வெடித் தாக்குதல், துப்பாக்கி சூட்டுத் தாக்குதல் காரணமாக 13 இராணுவத்தினர்

இறந்தார்கள்.

இராணுவ வீரர்களின் இறுதிக்கிரியைகள் கொழும்பு கனத்தை மயானத்தில் ஜுலை 25 இல் நடைபெற்ற போது தமிழர்களுக்கு எதிராக வன்முறைகள் நாடெங்கும் கட்டவிழ்த்து விடப்பட்டது. விடுதலைப் போராட்ட இயக்கங்களும் வீறு கொண்டு எழுந்தன வளர்ந்தன. இதனால் நிலப்பரப்புகளை போராட்ட இயக்கங்கள் தம்வசப்படுத்த முனைந்தன . அதில் பெருமளவு வெற்றியும் கண்டார்கள்.

முதற் கட்டமாக யாழ் குடாநாட்ட்டின் மிகப் பெரும்பாலான பிர தேசங்கள் பிரதான இயக்கங்களாகிய தமிழீழ விடுதலைப் புலி கள் (LTTE) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (TELO) ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (PlOT) ஈழப்புரட்சி அமைப்பு (EROS) போன்றவற்றால் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டன. இரா ணுவத்தினர், கடற்படையினர் அவர்களது முகாம்களுக்குள் முடக்கப்பட்டு வெளியேற முடியாதவாறு காவல் போடப்பட்டது.

அப்போது இராணுவத்தினர் போராளிகளது நிலைகளை தாக்க ஷெல் தாக்குதல் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் என வடிவத்தை மாற்றிக் கொண்டார்கள் அரசாங்கம் தனிநாடு கோரிப் பேராடிய இயக்கங்களை அழிக்க சொந்த நாட்டு மக்கள் வாழ்விடங்கள் மீதே குண்டு வீச வேண்டிய நிலை வந்தது. இது போன்ற நிகழ்வுகள் உள் நாட்டுப் போர் நடைபெற்ற நாடுகளில் எல்லாம் சர்வ சாதாரணமாக நிகழ்ந்துள்ளது.

போராட்ட இயக்கங்கள் மக்களுக்கு பங்கர் என ஆங்கிலத்தில் அழைக்கப் பட்ட பதுங்குகுழி எனும் பாதுகாப்பு வடிவத்தை

அறிமுகம் செய்து வைத்தார்கள்.

யாழ்நகரப் பகுதியில் அமைந்திருந்த ஒல்லாந்த கால கோட் டையில் படை முகாம் அமைத்திருந்த இராணுவத்தினர் ஷெல் வீச்சு ஆரம்பிப்பதற்காக ஆட்டிலெறிப் பீரங்கியிலிருந்து ஷெல் குத் தும் ஓசை கேட்டவுடன் அபாயச் சங்கொலி எழுப்பப்படும். மிக பலமான சத்தத்தில் இது கேட்கும் . சத்தம் கேட்டவுடன் பொது மக்களை பாதுகாப்பதற்கென மண்மூட்டைகள் அடுக்கி அமைக் கப்பட்ட பதுங்குமிடங்களுக்கு மக்கள் ஓடிவிடுவார்கள். குறிப் பாக யாழ் நவீன சந்தையின் நிலத்தளத்துடன் பாதுகாப்பான நிலைகள் அமைக்கப்பட்டன. அதை விட ஆங்காங்கே சில கடைத் தொகுதிகளிலும் மண்மூடைகளால் பாதுகாப்பிடங்கள் அமைக்கப்பட்டன.

ஆயினும் வீழ்ந்து வெடிக்கின்ற ஷெல்களில் அகப்பட்டு இறந்து போன, காயப்பட்ட பொதுமக்களும், போராளிகளும் இருந்தனர். படை வீரர்கள் ஏவுகின்ற ஷெல்களிலிருந்து தப் பிக்க பொதுமக்கள் வாழிடங்களில் பதுங்கு குழி என்ற அமைப்பை அறிமுகம் செய்தார்கள்.

1985 ம் ஆண்டின் இறுதியில் அச்சுவேலிப்பிரதேசத்தில் ஹெலிகொப்பர்களில் சென்று திடீரென இறங்கிய இராணுவத் தினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாமை தாக்க முற்பட்டு மோதலில் ஈடுபட்டார்கள். அந்தளவுக்கு இராணுவத்தினர் வெளியேற முடியாத சூழ்நிலை இருந்தது. இந்தக் கட்டத்தில் தான் இராணுவத்தினர் முகாம்களை விட தொலைதூரத்தி லிருந்து பிரதேசங்களில் அமைந்திருந்த போராளிகள் முகாம் களை தாக்கி அழிக்க விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் எனும்

போராட்ட எதிர்ப்பு வடிவத்தை அறிமுகம் செய்தார்கள்.

சீ பிளேன் எனப்பட்ட கடல் விமானம் வானத்தில் உலாவி தரையில் உள்ள போராளிகளின் நிலைமீது வேவு பார்க்கும் நடவக்கைகளிலும் ஈடுபட்டது. இந்த விமானத்தை கோள் மூட்டி எனவும் அழைத்தார்கள்.

விமானக் குண்டு வீச்சால் பொதுமக்கள் உயிர் உடைமை இழப்புக்கள் ஏற்படத் தொடங்கின அப்போது போராளி இயக்கங் கள் பதுங்குழி எனப்பட்ட பங்கர் வகைகளை பொதுமக்களுக்கு அறிமுகம் செய்தார்கள். ஷெல் வீச்சுக்கள் தான் பரவலாக நடைபெற்றன. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLE) எனும் இயக்கம் தாமே சுயமாகத் தயாரித்த பீரங்கிகளையும், அதன் குண்டுகளையும் கொண்டு இராணுவ முகாம்களை தாக்கினார்கள்.

இது இராணுவத்தினருக்குப் பெரும் சவாலாக இருந்தது. இராணுவத்தினரும் கடற்படையினரும் தமது முகாம் பிரதேசத் தில் பாதுகாப்பு முன் அரண்களையும், பதுங்குழி அமைப்பையும் உருவாக்கினார்கள். அது போல போராட்ட இயக்கங்களும் பங்கர்களையும் பாதுகாப்பு அரண்களையும் ஏற்படுத்தினார் கள்.

அதேவேளை, ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தின் பீரங்கிகள் தவறுதலாக வெடிக்கும் சம்பவங்களும் இடையிடையே நிகழ்ந் தது. அவர்களது தோழர்கள் இறந்தும், படுகாயமடையவும் நேரிட்டது. 1986 ஏப்பிரல் மாதம் ரெலோ (TELO)இயக்கத்தின் மீது விடுதலை புலிகள் தாக்குதலை தொடுத்தார்கள்.இயங்க விடா

மல் தடை செய்தார்கள். 1986 டிசம்பரில் ஈ.பி.ஆர். எல்.எவ். இயக்கமும் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தால் இயங்க விடாமல் தடை செய்யப்பட்டது.

அது போலவே புளொட் (PlOT) எனப்பட்ட தமிழீழ மக்கள் விடுதலைக்கழகமும் இயங்க விடாமல் தடை செய்யப்பட்டது. ஈரோஸ் (Eros) எனப்பட்ட ஈழப்புரட்சி அமைப்பு 1990 மார்ச் மாதம் இந்தியா அமைதி காக்கும் படைகள் (IPKF) வெளியேற்றத்தின் பின்னர் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்துடன் சேர்ந்து கொண்டது.

உதிரி உதிரியாக இருந்த சிறிய இயக்கங்கள் எல் லாம் 1986 இன் இறுதிப்பகுதியில் தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தால் இயங்க விடாமல் தடைசெய்யப்பட்டன. இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக போராடும் தனியான ஒரு இயக்கம் என்ற நிலையை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாக்கி கொண்டது.

இந்த நிலையில் 1987 ஆம் ஆண்டு விமான குண்டு வீச்சு ஷெல் தாக்குதல்கள்நிறைந்த ஆண்டாக உருவெடுத்தது. குண்டு வீசிய விமானங்களின் வகைகளும் பெயர்களும் காலத்திற்கு காலம் மாறுபட்டது . 1987 முற்பகுதியில் இத்தாலி தயாரிப்பு விமானங்களான சியாமாசெட்டி விமானங்கள் மிக வேகமாக பறந்து வந்து தாம் தேர்ந்தெடுத்த நிலைகளின் மீது குண்டுகளை வீசிச் சென்றன. பொதுமக்களால் சகடை எனப்பட்ட அவ்ரோ ரக விமானங்களும் குண்டுகளை உருட்டி விட்டு தாக்கின.

குண்டு வீச்சு விமானம், மற்றும் சுப்பர் சொனிக் விமானம் என்பன போர் அரங்கினுள் நுழைந்தன. குண்டுகளை அள்ளி வீசின. 1987 இன் ஆரம்ப நாள்களில் விமான குண்டு வீச்சுக்கள் , ஷெல் தாக்குதல் தீவிரமடைய பங்கர் அமைக்கும் முறைமை தொடர்பாக மிகத் தீவிரமான பரப்புரைகள் முன்னெடுக்கபட்டன.

விடுதலை புலிகளின் வானொலியாகிய புலிகளின் குரல், தொலைக்காட்சி சேவையாகிய நிதர்சனம் ஆகியவற்றில் இவை செயல்முறை விளக்கத்துடன் செய்யபட்டன.அதை விட ஈழநாடு, ஈழமுரசு( இது விடுதலைபுலிகளின் உத்தியோக பூர்வ பத்திரிகை) முரசொலி , உதயன் ஆகிய பத்திரிகைகளில் குண்டு வீச்சில் இருந்து பாதுகாப்பு பெறுவது எப்படி என்ற கட்டுரைகள் வரத்தொடங்கின. செய்முறை விளக்கத்துடன் கூடியதாக விளக்க படங்களுடன் அவை பிரநசுரிக்கபட்டன. விடுதலை புலிகள் இயக்கத்தால் விமான குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு பெறுவது எப்படி?என்ற சிறு கைநூலும் வெளியிடப் பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கபட்டது.

வீடுகள்,பாடசாலைகள்,பொது இடங்கள், வைத்தியசாலை கள், வணிக இடங்களில் பங்கர்கள் அமைக்கபட்டன. யாழ் கோட்டை இராணுவ முகாமிலிருந்து வீசப்பட்ட குண்டுகள் யாழ் போதனா வைத்தியசாலையின் மீது வீழ்ந்து வெடித்தன. நோயாளர், பொதுமக்கள், மருத்துவதுறைசார் அதிகாரிகள் இறந்தும், காயப்பட்டும் போனார்கள். இதனால வைத்தியசாலை யின் மேல் மாடிகளில் இருந்த மருத்துவ விடுதிகள் (வாட்) யாவும் மூடப்பட்டன. பாதுகாப்பு கருதி அவை நிலத்தளத்துடனான பகு திக்கு மாற்றபட்டன.

பங்கர்கள் அமைப்பதில் பலவித வடிவங்கள் பின்பற்றபட்டன. வீடுகளின் வளவுகளில் ட வடிவமான பங்கர்களே பெருமளவு அமைக்கபட்டன. ட வடிவத்தில் நிலத்தில் 4 அல்லது 5 அடி ஆழம் வரை மண்ணை அகழ்ந்தெடுத்தார்கள். பங்கரின் அகலம் 4 முதல் 6 அடிவரை இருந்த்து. ட வடிவில் முன்புறம் இறங்கிச் செல் லக் கூடிய வகையில் படிகளை அமைத்தார்கள் .உள்புறம் ஆள்கள் இருக்க்கூடிய வகையில் அமைத்தார்கள். தென்னை அல்லது பனை மரங்களை தறித்து 5முதல் 8 அடி வரை நீளமான குற்றிகளாக்கி பங்கரின் மேற்புறம் நெருக்கமாக அடுக்கினார் கள். பங்கர் அமைக்க குடும்ப உறுப்பினர்கள் இல்லாத குடும் பங்கள் சம்பளத்திற்கு ஆள் பிடித்து அமைத்தார்கள்.

இதனால் பங்கர் அமைக்கும் தொழிலாளர்கள் , காய்க்காத பனை, தென்னை மரங்களை வெட்டி விற்கும் வியாபாரிகள் என புதியதொரு போர்க்காலத் தொழிலும் உருவாகியது. மணற் பாங் கான இடங்களில் இலகுவாக பங்கர் அமைத்தார்கள். கற்பாறை கள் நிறைந்த இடங்களில் அமைக்க மிகவும் சிரமப் பட்டார்கள். பாடசாலைகள்,பொது இடங்களில் அதிகம் தங்கி நிற்பதால் பெரியளவு பங்கர்களே ,மண்மூடை காப்பரண்களோ தேவைப்பட்டன. பாடசாலைகளில் நூற்றுக்கணக்கான மாண வர்கள் இருந்த போது நிலத்தில் 4 அடி அகலத்திற்கு மிக நீளமாக வெட்டி திறந்த பங்கர்களை அமைத்துக் கொண்டார்கள் . சில நேரத்தில் மரக்குற்றிகளை அடுக்கி மண்மூடைகளை இட்டு பாதுகாப்பை தேடி கல்வியை தொடர்ந்தார்கள் .

வட மாகாணமெங்கும் எல்லா பாடசாலைகளும் இவ்வாறு தான் கல்வியை தொடர்ந்தார்கள் எனக் கூறமுடியாது. தாக்

குதல்கள் அடிக்கடி நிகழும் சில பிரதேசங்களைச் சேர்ந்த பாட சாலைகள் தான் பங்கர்களை அமைத்தார்கள். யாழ் மத்திய கல்லூரி கோட்டைக்கு மிக அருகிலிருந்தது. ஷெல் தாக்குதல் களால் அடிக்கடி பாதிக்கப்பட்ட கல்லூரி இது. ஆனாலும் பெற் றோர்களும் மாணவர்களும் விடாப்பிடியாக நின்று கல்வியைத் தொடர்ந்தார்கள். மத்திய கல்லூரி மைதானத்தை நோக்கியி ருந்த மாடிக்கட்டிட வகுப்பறைகளின் ஒரு பகுதி மண் மூடைகள் கட்டப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்த்து அந்த மண்மூடை அரணாக்க கொண்ட வகுப்பறைகளில் உயர்தர மாணவர்கள் கல்வியைத்தொடர்ந்தார்கள்.ஒருநாள்யாழ்கோட்டையிலிருந்து சுடப்பட்ட துப்பாக்கிக்குண்டு தாக்கி உயர்தரத்தில் உயிரியல் பயின்ற மாணவர் ஒருவர் இறந்து போனார் .

"ப" வடிவம் "ட" வடிவம் "-" நீள வடிவம் எனப் பலவகைகளில் பங்கர்கள் இருந்தன .பங்கரில் பாம்பு குடியிருந்தது கடித்த சம்பவங்களில் ஓரிருவர் இறந்த சம்பவங்களும் நிகழ்ந்தன. 1990 ஆம் ஆண்டு இறுதியில் சாவகச்சேரி சங்கத்தானையில் விமானக்குண்டு வீச்சின் அதிர்வால் பங்கர் இடிந்து மூடப்பட்டு பலர் முச்சுத்திணறி இறந்தார்கள். மழை காலத்தில் வெள்ளம் வந்து பங்கர் இடிந்து வீழ்ந்து குண்டு வீசப்படும் போது பாது காப்பு பெற முடியாது தவித்தவர்களும் இருந்தார்கள். 1987 இன் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தின் ஒரு கிராமத்தில் விமானக் குண்டு வீச்சு வேளையில் பங்கரில் ஒர் பெண் குழந்தையை பிரசவித்தார். இவரது ஆண் குழந்தைக்கு பங்கர்தாஸ் எனப் பெற்றோர் பெயரிட்டார். இது அக் காலப் பத்திரிகைகளில் பர பரப்புச் செய்தியாகப் பேசப்பட்டது. பொதுமக்கள் எல்லா நேர மும் பங்கரில் தான் இருந்தார்கள் என்றதில்லை . குண்டு வீச்சு

நெருக்கடி நேரத்தில் அரைமணி நேரம், ஒரு மணிநேரமென மட்டும்தான் இருந்தார்கள்.

1987 மே 26 இல் வடமராட்சிப் பிரதேசத்தை விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிடியிலிருந்து கைப்பற்ற இராணுவத்தினர் ஒப்பிரேசன் லிபரேசன் என்னும் பெயரிலான இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டார்கள்.

1987 யூலை 29 இல் ரஜீவ்.ஜே.ர் உடன்படிக்கையாக இலங்கை இந்திய அமைதி உடன்படிக்கை வந்தது. அதைத் தொடர்ந்து இந்தியப் படைகள் அமைதி காக்கும் படைகள்(IPKF) என்ற பெயரில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் எங்கும் நிலை கொண்டார்கள். யுத்தத்தின் சத்தங்கள் திடீரென ஓய்ந்தது.அப்பாடா இனி நிம்மதியான வாழ்க்கை தான் நம்பினார்கள். யுத்த மேகங்கள் கருக்கொள்ள வைக்கபட்டது. 1987 ஒக்ரோபர் 10 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து புறப்பட்ட இந்தியப் படையினருக்கு எதிரான முதல் துப்பாக்கிச் சூடு விடுதலைப்புலிகளால் தீர்க்கப்பட்டது.

இந்திய -ஈழ யுத்தம் ஆரம்பித்தது. அப்போது நான் உயர்தரம் படிக்கும் மாணவன் முன்னேறி வரும் இந்தியப்படைகள் சந்தேகத்திற்குரியவர்களை கைது செய்து அந்தமான் தீவுக ளுக்குக் கொண்டு சொல்லப் போகின்றார்கள் என பரவலாக் கதைத் தார்கள். ஆனால்அப்படி ஏதும் நிகழவில்லை. ஈழ மண் ணில் இந்தியச்சிறைகளும் சித்திரவதைக் கூடங்களும் தான் உருவாகின. இந்தியப்படைகளின் மிக உக்கிரமான. தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு பெற பங்கர்களை மீளவும் அமைக்கும் வேலை உருவாகியது. யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து மிகத்

தீவிரமான முன்னெடுப்புடன் இந்தியப்படையினர் புறப்பட் டார்கள்.

1990 ஜனவரி 20 இல் இந்தியப்படையினர் யாழ்ப்பாணத்தை விட்டு முற்றாக அகன்று இந்தியாவிற்கு சென்றார்கள் .விடுத லைப்புலிகள் வடமாகாண நிலப்பரப்புக்களை தம் ஆளுகைக் குள் கொண்டு வந்தார்கள். 1990 யூன் 15 இல் காங்கேசன் துறையில் இலங்கை இராணுவத்தினருடனான மோதலை விடுதலைப்புலிகள் இயக்கம் ஆரம்பித்தார்கள். இந்த மூன்றாம் ஈழப் போர் பங்கர் வாழ்க்கை முறைக்கு மீளவும் எம்மைக் கொண்டு சென்றது.

போருக்கான பரப்புரைகள், ஆட்சேர்ப்புக்கள், பங்கர் அமைப்பதற்க்கான விழிப்புணர்வுகள் எனப் போராட்ட சக்கரம் சுழன்றது. 1994 ஆவணி மாதம் சந்திரிகா பிரதமராகி அரசாங்கம் அமைத்த போது போர் நிறுத்த மொன்றிற்கு அமைத்தார். போர் நிறுத்தம் வந்தது. பேச்சுக்கள் தொடர்ந்தன. பேச்சுக்கள் முறிந் தன.

பயணிகள் விமானமான அவ்ரோ விமானம் குண்டுகளை உருட்டி விடுவதற்கு ஏற்ற வடிவத்தில் தாயாரிக்கபட்டிருந்தது. இவ்விமானம் 1990 ஜுன் மாதத்தின் பின்னரான யுத்த காலப் பகுதியில் மலக்கழிவுகள் உள்ள பீப்பாக்கள் , அசுத்த நீருள்ள பீப்பாக்களை குடிமனைக்குள் போட்டு வீரம் காட்டியது.1995 முற் பகுதியில் முற்பகுதியில் தமிழீழ விடுதலை இயக்கத்தினரால் புன்னாலைக்கட்டுவன் பிரதேசம், நவற்கிரி பிரதேசம் ஆகிய இடங்களில் அடுத்தடுத்த இரு நாட்கள் அவ்ரோ விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே

விமானங்கள் விழுந்து நொருங்கியதாக அரசாங்கம் முதலில் அறிவித்தது பின்னர் விடுலைப் புலிகள் இயக்கத்தால் சுட்டு வீழ்த்தப்பட்டதை ஒப்புக்கொண்டது. இவ் விமானங்களில் இருந்த பல படைவீரர்கள் இறந்து போனார்கள்.இதையடுத்து அவ்ரோ விமான சேவையை அரசாங்கம் வடக்கின் வான்பரப் பில் நிறுத்தியது.

1995 ஏப்பிரல் 19 ஆம் நாளன்று அப்போதைய சந்திரிக்கா அர சாங்கத்துடனான யுத்த நிறுத்தம் விடுதலை புலிகளால் முடி வுக்கு கொண்டுவரப்பட்டது. அக்காலத்தில் ரஷ்ய தயாரிப்பான புக்காரா. திரும்பவும் 1995 ஏப்ரல் 19 இல் திருகோணமலை கடற்படைத் தளத்தில் நின்ற ரணசுறு, சூரயா என்ற கடற்படை கப்பல்கள் மீது புலிகளின் தாக்கதல் மூலமாக 4 ஆம் ஈழப்போர் தொடங்கியது. மீளவும் விமானக் குண்டு வீச்சு, ஷெல்தாக்குதல் கள் தொடர்ந்தன. பங்கர் வாழ்க்கையும் தொடர்ந்தது. 1995 டிசெம் பரில் யாழ்பாணக் குடாநாட்டின் பெரும் பகுதியை அரச படை யினர் கைப்பற்றினார்கள். 1996 மே மாதம் முழு யாழ்ப்பாணக் குடா நாடும் அரச படை வசம் வந்தது. பங்கர் வாழ்க்கை முடிவுக்கு வந்தது.

ஆனால் வன்னிப் பெரு நிலப்பரப்பு எங்கும் விடுதலைப் புலிகள் வசம் என்பதால் அங்கு பங்கர் அமைக்கும் தேவை தொடர்ந்தது. ஆங்காங்கே தேவைப்பட்ட இடங்களில் மட்டும் பங்கர் அமைக்கும் தேவை எழுந்தது. விடுதலைப்புலிகள் தமது உயர் தலைவர்களைக் காப்பாற்ற நிலத்தின் கீழான வீடமைக் கும் பணிகளை உறுதியான கொங்கிறீற் கட்டுமானங்களை மேற்கொண்டார்கள். 2002 மாசி 22 இல் ரணில்- பிரபாகரன் பு0ரிந்துணர்வு உடன்படிக்கை மூலமாக போர் தற்காலிகமாக

நின்றது. 2006 யூலை மாதம் கிழக்கின் திருகோணமலை மண்ணில் மாவிலாறு அணை நீர் திறந்து விடப்படாமல் விடு தலைப் புலிகள் இடைமறித்த போது போர் மீளவும் மூண்டது. இறுதி ஈழப்போர் மாவிலாறில் தொடங்கி 2006 ஓகஸ்ட் இல் வடக்கில் முகமாலையில் வெடித்தது.

கிழக்கு மாகாணத்தை முதலில் முழுமையாக கைப்பற்றிக் கொண்ட அரச படையினர் பின்னர் வடக்கில் கால் பதித்தனர். அப்போது இராணுவம் முன்னேறி வரவர மக்கள் பின்னோக்கித் தப்பி ஓடிக் கொண்டிருந்தார்கள். பங்கர் அமைக்கும் பொருள் களைத் தவறாமல் எடுத்துக் கொண்டே பின்னோக்கி நகர்ந்தார் கள். இறுதியில் மாத்தளன், புதுமாத்தளன், வலைஞர்மடம், பொக்கணை, அம்பலவன் பொக்கணை முள்ளிவாய்க்கால் பிரதேசங்களில் பாதுகாப்புத் தேடினார்கள். குறுகிய நிலப் பரப்பில் மூன்றரை இலட்சம் மக்கள் தங்கினார்கள். திறந்த வெளிக் கூடாரங்களும், பங்கர்களும் தான் வாழ்க்கை.

மனிதப் பேரவலம் அரங்கேறியது. நாள் கணக்காக மணித் தியாலக் கணக்காக பங்கருக்குள் அடைந்து கிடந்தார்கள். பிள் ளைகளை பங்கருக்குள் வைத்து விட்டு வெளியே வந்து சமைத்த போது ஷெல் பட்டு, விமானக் குண்டு வீச்சில் அகப்பட்டு தாய், தகப்பன் இறக்க பிள்ளைகள் அனாதைகளாகினார்கள். தாய் பங்கர் வாசலில் சமைக்க கறி புளி, அரிசி வாங்க வெளியே சென்று குண்டு வீச்சில் அகப்பட்டு தந்தை இறந்து போன சம்பவங்களும் நடந்தது.


பங்கருக்குள் ஷெல் விழுந்து குடும்பமாக இறந்து போக பங்கருடன் சேர்த்து உடல்களை மூடிச் சென்று சோகங்களும்

ஏராளம்.

மணற் பாங்கான அந்தப் பிரதேசத்தில் பங்கருக்குள் கடும் வெக்கையென வெளியே வந்து விளையாடிய சிறார்கள் ஷெல் வீச்சில் அகப்பட்டு உயிரிழந்தும் காயப்பட்டும் போன சம்பவங் களும் ஏராளம். கை கால் இழந்த சம்பவங்களும் ஏராளம். பங்கர் வாழ்க்கையில் மக்கள் பட்ட அவலங்கள் சொல்லப் புறப்பட்டால் அவை மிக மிக நீளமானவை ஈழப் போராட்டத்தின் இறுதி அத்தி யாயம் குடும்பங்கள் ஒவ்வொன்றினதும் பங்கர் வாழ்க்கை பல்லாயிரக் கணக்கான உயிரிழப்பு, உடைமை அழிவு, ஊன முறுதலுடன் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. மண் மூடைகள் அமைக்க உரப்பைகள் இல்லாத போது பெண்களின் சேலைகள் மண்மூடைகளாக்க பயன்பட்டன. அப் பிரதேசத்தின் தென்னை, பனை மரங்கள் மிகப் பெருமளவில் வெட்டிச் சரிக்கப் பட்டன. துண்டுகள் ஆக்கப்பட்டன. பங்கரின் துணையுடன் உயிர் வாழ்தலுக்கு போராட்டம் நடந்தது.

2009 மே 19 நாள் ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்தது. பங்கர் வாழ்கைக் கோலத்தையும் முடிவுக்குக் கொண்டு வந்த்த. அந்தக் துன்பங்கள் மீண்டு வரவே கூடாது. இது போன்ற பங்கர் துன்பங்கள் கிழக்கு மாகாணத்தி லும் இருக்கக் கூடும். வாழ்ந்த வாழ்வின் கசப்பான பங்கர் வாழ்க் கையை என் பட்டறிவுக்கு எட்டிய வகையில் எழுத்துருவாக்கம் செய்துள்ளேன்.

பங்கரை விட்டுவிட்டு வடபுல நினைவுகளையோ யாழ்பாண நினைவுகளையோ பதிவு செய்தால் அது முழுமைபெற்ற ஆவணம் அல்ல.




# சோதனைச் சாவடி காலங்கள்

1988 ஆம் ஆண்டு    பங்குனி மாதம் 28 ஆம் திகதி

நண்பகல் 12.00 மணி    இடம்:- காரைநகர்

நிகழ்வு:- திருமண வைபவம் .

"யாழ்ப்பாணத்திலிருந்து கலியாண வீட்டிற்கு வந்த ஆள்கள் வாங்கோ முதலில் சாப்பிடுங்கோ. இன்னமும் தாலிகட்டு நடக் கேல்லை என்னெண்டு சாப்பிடுறது. ஐயோ உங்களுக்குச் சொன்னால் விளங்காது. இஞ்சத்த நிலைமை தெரியாது. மூண்டு மணி எண்டால் வட்டுக்கோட்டையிலிருக்கிற இந்தியன் ஆமி வந்து சந்தியில் துலாப் போட்டுப் பாதையை மூடிடுவான். அதுக்குப் பிறகு நீங்கள் எல்லாம் இஞ்சை தான் கிடக்கோணும். புது ஆள்கள் நிற்கிறதெண்டு இந்தியன் ஆமி றவுண்ட் அப் பண்ணிப் போடுவான். ஆக்களைப் பிடிச்சுக் கொண்டு போயிடு

வான் அதால சொல்லுறன். கெதியாச் சாப்பிடுங்கோ நாங்கள் முகூர்த்தத்துத் தாலி கட்டுவம் நீங்கள் கெதியா வீட்ட போய்ச் சேருங்கோ இது ஒர் உண்மைச் சம்பவம் தாலி கட்டுப் பார்காம லேயே திருமணச் சாப்பாட்டை சாப்பிட்டு யாழ்ப்பாணம் திரும் பிய நண்பர் ஒருவரின் அனுபவக் கதை.

மூன்று தசாப்த காலப் போரின் அனுபவ வடுக்கள் பல. அவை கசப்பானதாயினும் இனி வரப் போகும் சந்ததிகள் தெரிய வேண்டுமென்பதற்காக இங்கு ஆவணப்படுத்த முற்படு கிறேன்.

போர் என்ற கொடுங்கோலனின் கரங்களில் சோதனைச் சாவடியும் ஒன்று இதன் நினைவுகளை மீட்டிப்பார்ப்போம்.

1983 யூலை மாதத்தின் பின்னர் உள்நாட்டு போர் உக்கிரம டைந்தது. போராட்ட இயக்கங்களின் தாக்குதலில் இருந்து பாது காப்பு பெற இராணுவ முகாம்கள் மிகப் பெருமெடுப்பில் விஸ்த ரிக்கப் படத் தொடங்கின.

கடற்படை, விமானப்படை, ஊர்காவற்படை, பொலிசார் போன்றோரும் முகாம்களை விஸ்தரிக்கத் தொடங்கினார்கள். பிரதேசத்துக்குப் பிரதேசம் அமைக்கப்பட்ட முகாம்களின் முன் பாக வீதியைக் கடந்து செல்லும் வாகனங்கள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன. ஆள்கள் இறங்கி ஏறி நடந்து செல்லப் பணிக்கப்பட்டார்கள். சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்ற வாகனங்கள் உருட்டிச் செல்லவே அனுமதிக்கப்பட்டன. சில இடங்களில் முகாம்களின் முன் வீதி மூடப்பட வேறு மாற்றுப் பாதை ஊடாக சில கிலோ மீற்றர்கள் பயணித்து தமது பயண

நோக்கத்தை நிறைவேற்ற வேண்டி வந்தது.

வடக்கூகிழக்கு மாகாணங்கள் தான் பிரதான போர்க்களம். ஆனால் போர் நடைபெறாத கொழும்பு போன்ற மாநகரங்களிலும் தாக்குதல்கள் நடைபெற்றதால் சோதனை சாவடிகள் போடப்பட்டன. நாட்டின் மூவின மக்களும் இதற்கு கட்டுப்பட்டு நடந்தனர்.

இராணுவ நோக்கம் உள்ள தளங்கள், அதி முக்கிய பிரமுகர்கள் வாழ்ந்த பிரதேசங்கள் போக்குவரத்திற்கு முற்றாகவே தடைப்படுத்தப்பட்டது. போர் முடிந்த பின்பு தான் போர் நடைபெறாத பிரதேசங்களிலும் யாவரும் தடையின் றிப் பயணிக்கும் நிலைமை உருவாகியது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் போர்க் காலத்தில் சோதனைச் சாவடி அமைப்பு முறைமைகளும், சோதனை நடவடிக்கைகளும் காலத்திற்கும் காலம் மாறுபட்டு நிகழ்ந்தது.

ஆள்கள் கைது செய்யப்படுவது, காணாமல் போவது ஆகியவை இந்த சோதனைச் சாவடிகளில் நிகழ்ந்ததாக மனித உரிமைகள் ஆர்வலர்களால், உற்றோரால் குற்றஞ்சாட்டப்படுகி றது. போராட்ட இயக்கங்களின் தாக்குதல்களே இதற்கும் காரணமாகக் காணப்பட்டதாக மறுதரப்பில் தெரிவிக்கப்பட்டது. 1986 டிசெம்பர் மாதத்தின் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே போராட்டம் நடத்தும் கள நிலை உருவாக்கப்பட்டது. ஏனைய இயக்கங்கள் யாவும் போராட முடியாத நிலை விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டது.

வட பகுதியை எடுத்துப் பார்ப்போமாயின் 1986 காலப்

பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்சில் புறப்படும் ஒருவர் ஆனை யிறவுச் சோதனைச் சாவடியில் இறங்கி ஏறிப் பயணத்தை மேற் கொண்டு நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் சென்று வர முடியும். அரச படையினர் வீதிகளை மூடி அல்லது வழி மறித்துச் சோதனைச் சாவடிகளை பெருமளவுக்கு உருவாக் கினார்கள்.

1987 ஒக்ரோபர் 10 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய படையினருக்கும் இடையிலான போர் ஆரம்பமானது. இந்தியப் படையினரால் நிலப் பரப்புக்கள் கைப் பற்றப்பட விடுதலைப் புலிகள் மணலாறு, நித்திக்காய்குளக் காட்டை பிரதான தளமாகக் கொண்டு போராட்டத்தை முன்னெ டுத்தார்கள். விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக இந்தியப் படைகள் ஒப்பிரேசன் பவான், ஒப்பிரேசன் செக்மேற் என பெருமெடுப்பில் நடத்திய இராணுவ நடவடிக்கைகள் தனியாக ஆராயப்பட வேண்டியவை.

போரில் இந்தியப் படையினரின் கை ஓங்கியதைத் தொடர்ந்து ஏக காலத்தில் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் செக் பொயின்ற் என அழைக்கப்பட்ட சோதனைச் சாவடிகளை அமைத்தார்கள்.

1987 ஜுலை மாதத்தின் பின்னர் தென்பகுதியில் ஜே.வி.பி. எனப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியினரால் அரசாங்கத் தைக் கைப்பற்றும் ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது. அதனை தொடர்ந்து பெருமளவிலான இலங்கைப் படையினர் தென் பகுதிக்குச் சென்றுவிட்டனர். அதனால் இந்தியப் படையினரின் செக் பொயின்றுகளே ஆங்காங்கே முளைத்தன. சில இடங்க

ளில் இலங்கை படையினரின் செக் பொயின்றுகள் இருந்த பெரு வீதிகளின் முக்கிய சந்திகள் தோறும் முகாம் அமைத்த இந்தியப் படையினர் அனைத்து பொது வாகனங்கள் , சைக்கிள் களையும் பரிசோதித்த பின்னரே செல்ல அனுமதித்தார்கள்.

ஆள்கள் ஒழுங்கு முறையாக நடந்து செல்ல சில நேரம் தடிகள் கட்டிய வரிசை முறை, அடுக்கப்பட்ட கற்கள் இருந்தது. செக் பொயின்றுகள் உள்ளே தாம் கைது செய்த முகமூடி அணிந்த மனிதர்களை மறைவில் வைத்திருந்தார்கள். அவர் வீதியால் நடந்து செல்லும் ஆளைப் பார்த்து சைகை காட்ட அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இரவு நேரம் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த நேரங்களில் வைத்திய சிகிச்சைக்கான அவசர தேவைக் குப் பயணம் செய்ய வேண்டியே லாம்புடனும், வெள்ளைக் கொடியுடனும் வரவேண்டும். ஒரு சில கிலோ மீற்றர்களைக் கடந்து செல்ல இரண்டு மூன்று சோதனைச் சாவடிகளைக் கடக்க வேண்டியும் இருந்த்து. பகலில் குறிப்பிட்ட ஒரு நேரத்தின் பின் செக் பொயின்ற் மூடப்படும். பிறகு குறித்த வீதியால் யாரும் பயண செய்ய முடியாமல் மரத்தாலான துலா ஒன்று போடப்பட்டு வீதி மூடப்பட்டு விடும்.

1990 மார்ச் மாதம் திருகோணமலையிலிருந்து இந்தியப் படையின்கடைசிஇராணுவசிப்பாய்களும்வெளியேறினார்கள். இத்துடன் ஈழமண்ணில் இந்தியப் படைகளின் பிரசன்னம் முடிவுக்கு வந்தது. 1990 ஜூன் 10 இல் கிழக்கு மட்டக்களப்பு மண் ணில் கருக் கொண்ட யுத்த மேகம் ஜூன் 15 இல் யாழ் காங்கேசன் துறையிலும் உருக் கொண்டது.

இந்த மூன்றாம் ஈழப்போரின் பின்னரான காலப் பகுதியே

செக் பொயின்ற் எனப்பட்ட சோதனைச் சாவடியின் காலமாகும். இக் காலப் பகுதியில் வடக்கு கிழக்கு மாகாணத்தின் பெரும் பாலான நிலப்பரப்புக்கள் இரு வகைப்பட்டன.

விடுதலைப்புலிகளின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசம், அரசாங்கப் படைகளின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசம் என இருந்தது. அரசாங்கம் தமது படைகள் வசமிருந்த பிரதேசங்களை விடுவிக்கப்பட்ட பிரதேசம் (cleared area) எனவும் விடுதலைப் புலிகள் வசமிருந்த பிரதேசத்தை விடுவிக்கப்படாத பிரதேசம் (Uncleared area) எனவும் பெயரிட்டு அழைத்தது.இந்த இரு பிரதே சங்களுக்கிடையில் பயணம் செய்யும் போது மக்கள் பாரிய இடையூறுகளை சந்தித்தார்கள்.

வடக்கில் விடுதலைப் புலிகள் தமது பிரதேசங்களில் வசித்த மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் சென்று வர பாஸ் நடைமுறையை ஏற்படுத்தினார்கள். ஆனால் கிழக்கு மாகாணத்தில் இவ்விதம் பாஸ் நடைமுறைகள் ஏற்படுத்தப்பட வில்லை. ஏனெனில் மூவினங்கள் வாழ்ந்ததும் தமது ஆளு கைக்கு உட்பட்ட பிரதேசங்களை உறுதியாக வைத்திருக்க முடி யாத நிலையும் ஒரு காரணம் எனலாம்.

கிழக்கில் அரச படையி னர் தமது பிரதேசங்களின் முக்கிய இடங்களில் உறுதியான சோதனைச் சாவடிகளை அமைத்தார் கள். விடுதலைப் புலிகளின் பிரதேசங்களிலிருந்து தமது கட்டுப் பாட்டுப் பிரதேசங்களுக்கு வருவோரை மிகக் கடுமையாகப் பரி சோதனை செய்தார்கள்.

தேவைப்படும் போது தலையாட்டிகளின் முன்னால் நிறுத்தி

னார்கள் பிரதான வீதிகளில் படை முகாம்களின் முன்னாலிருந்த பாதையை மூடினார்கள். முகாம்களை சுற்றிச் செல்ல உபபாதை ஒன்று அமைத்தார்கள். ஐம்பது கிலோ மீற்றர் பயணம் செய்வ தற்கு ஐந்தாறு இடங்களில் பொதுமக்கள் ஏறி இறங்க வேண்டி வந்தது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இருந்து தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வருவோரை விடுதலைப் புலிகள் பரிசோதித்து உள் நுழைய அனுமதித்த சம்பவங்கள் மிக அரிதாகவே நிகழ்ந்தது.

பஸ்களில் பயணம் செய்யும்போது முதியோர், கைக்குழந்தை யுள்ள தாய்மார் மட்டும் ஆசனத் திலிருக்க அனுமதிக்கப்படுவார் கள். ஏனையோர் ஏற்றி இறக்கப்பட்டனர். அது போல கிழக்கின் ஏனைய மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துக்களும் ஒரே மாதிரியாகத்தானிருந்தது. ஒரு செக் பொயின்றில் இரா ணு வத் தினர் வாகனத்தில் வருவோரை ஏற்றி இறக்கினால் அடுத்த செக் பொயின்றிலும் ஏற்றி இறக்குவார்கள்.

கேட்டால் சொல்வார்கள் அது ஆமி, இது விசேட அதிரடிப் படை (எஸ்ரிஎவ், STF).

வடக்கேயுள்ள நிலைமையைப் பார்ப்போம் 1990 ஜுன் மாதம் போர் ஆரம்பித்த பின்பாக விடுதலைப் புலிகள் தமது பிரதேசங் கள் மீது மிக இறுக்கமான கண்காணிப்பை வைத்திருந்தார்கள்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வருவோரை பரிசோதித்து பாஸ் வழங்கிய பின்னரே உள் செல்ல அனுமதித் தார்கள். அது போல இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் இருந்து வருவோரை பரி

சோதித்த பின்னரே பயணம் செய்ய அனுமதித்தனர்.

சோதனைச் சாவடிகள் இருந்த இடங்கள் சாந்த சோலை, தாண்டிக்குளம், நொச்சிமோட்டை, ஓமந்தை எனக் காலத்தக்கு காலம் மாறுபட்டன. அது போல உயிலங்குளம், மடு, பறைய நாலங்குளம் ஆகிய இடங்களிலும் சோதனைச் சாவடிகள் இருந்தன.

சந்தேகப்படும் இளம் வயதினரைத் தடுத்து வைத்து தலை யாட்டிகளின் முன் நிறுத்தினார்கள். புகைப்படம் எடுத்து பாஸ் வழங்கிய பின்னர் தென் பகுதிக்குச் செல்ல அனுமதித்தார்கள். இராணுவத்தினர் தமது பிரதேசத்திற்குள் செல்லும் பொது மக்கள் என்னென்ன பொருள்களை எந்தெந்த அளவுகளில் கொண்டு செல்லலாம். என்ற அறிவிப்பைக் காட்சிப்படுத்தினார் கள். மீறினோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டு வழக்கும் பதிவு செய்யப்பட்டது.

1995 ஆம் ஆண்டின் பின்னரான காலப் பகுதியில் வடக்கே விடுதலைப் புலிகளின் கட்டுபாட்டுப் பிரதேசத்திலிருந்து வரு வோரை குட்செற் முகாமில் வைத்து விதிக்கப்படும் நிபந்தனை களை நிறைவேற்றுவோரை மட்டும் தென் பகுதி செல்ல அனும தித்தார்கள். பின்னர் நெலுக்குளம், வெளிக்குளம், வேப்பங் குளம் போன்ற இடங்களில் உள்ள பாடசாலைக் கட்டிடங்களில் தங்க வைத்துப் பரிசோதிக்கும் முறைமை உருவானது. மன்னார் மாவட்டத்திலிருந்து வருவோரும் இது போன்ற நடைமுறை களுக்கு உட்பட்டே பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

1996 மே மாதம் யாழ்ப்பாணக் குடாநாடு முற்றாக இராணுவக்

கட்டுப்பாட்டின் கீழ் வந்த காலத்தை பார்ப்போம்.

நீண்ட காலம் விடுதலைப் புலிகள் வசமிருந்த யாழ் குடாநாட்டைக் கைப்பற்றிய படையினர் முழத்துக்கு முழம் இராணுவக் காவலரண்களை அமைத்தார்கள்.

ஆரம்பத்தில் பொதுமக்களுடன் சுமூகமாகப் பழகிய இராணுவத்தினரின் போக்கில் 1996 ஜூலை மாதம் முல்லைத்தீவு இராணுவ கடற்படைத்தளம் தாக்கி அழிக்கப்பட்டதும் மாற்ற மேற்பட்டது. அதனைத் தொடர்ந்து செக்பொயின்ருகளில் ஆள்கள் காணாமல் போகும் சம்பவங்கள் அதிகரித்தது. சில இளம் பெண்கள் செக் பொயின்ருகளில் தடுக்கப்பட்டு பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்த சம்பவங்களும் பதிவாகியது.

தேசிய அடையாள அட்டை இன்றி பல வருடங்கள் சுதந்திரமாகத் திரிந்த மக்கள் பகல் நேரத்தில் மட்டும் பயந்து நடுங்கி சோதனைச் சாவடிகள் ஊடாகப் பயணிக்கும் நிலைமை உருவாகியது. ஒரு செக் பொயின்ரிலிருந்து இன்னொரு செக் பொயின்ற் வந்து வரிசையில் நின்று பயணப்பட போதும் போதும் என்றாகி விடும். இரவு நேரத்தில் பயணம் செய்ய முடியாத ஊரடங்கு நிலை. அரிக்கன் லாம்பு வெளிச்சத்தில் வெள்ளைக் கொடியைப் பிடித்து தான் வருத்த துன்பத்திற்கும் பயணப்பட வேண்டிய பரிதாப நிலை.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு பஸ்சில் செல்லும் போது அச்சுவேலி வல்லைச் சந்தியில் பஸ்சில் இறக்கிச் சோதனையிடுவார்கள்.

பஸ் புறப்பட்டு செல்லும் போது வல்லை வெளி சந்தியிலும் திரும்பவும் இறக்கி ஏற்றிச் சோதனையிட்டார்கள்.

இடையில் குடிமனை ஒன்றுமே இல்லை. ஆள்கள் ஏற இறங்க இடமில்லை. இதுபற்றி கேட்ட போது இராணுவத்தினர் கூறிய பதில் அது வேறு படையணி, நாம் வேறு படையணி எமது பிரதேசத்திற்குள் நுழைபவர்களைச் சோதனையிட்ட பின்பு தான் பயணம் செய்ய அனுமதிப்போம். இதனால் பயணிகளின் பயண நேரம் நீண்டு சென்றது.

இராணுவத்தினர் தமது பாதுகாப்புக் கருதி சில வீதிகளை மூடினார்கள். இதனால் அரைக் கிலோ மீற்றர் செல்ல வேண்டிய இடத்திற்கு ஐந்தாறு கிலோ மீற்றர்கள் சுற்றிச் சுழன்று சென்று வரவேண்டியிருந்தது. இதைவிட உயர்பாதுகாப்பு வலயங்கள் காரணமாகவும் அயல் பிரதேசத்தைச் சென்றடைய மிக நீண்ட தூரம் பயணிக்க வேண்டி வந்தது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச சோதனைச் சாவடிகள் நோக்கி வருவோம். இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து வருவோரின் பொருள்கள் பரிசோதிக்கப் பட்டன. மதுபானப் போத்தல்கள் சில காலங்களில் கொண்டு செல்ல அனுமதிக்கப்படவில்லை. சிகரெட் போன்றன வரி விதிப் புக்கு உள்ளாக்கப்பட்டன.

1998,1999 ஆண்டுகளில் ஆழ ஊடுருவும் படையணியினர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் கிளை மோர் தாக்குதலை நிகழ்த்த ஆரம்பித்தார்கள். முக்கியமான போராளிகள் கொல்லப்படத் தொடங்க விடுதலைப் புலிகள்

தமது பிரதேசங்களில் இடையிடையே சில செக் பொயின்று களை அமைத்தார்கள். யாவரையும் பரிசோதனைக்கு உட்படுத்திய பின்னரே செல்ல அனுமதித்தனர்.

2002 பெப்ரவரி 22 இல் அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை கையெழுத்தானது. பின்னர் ஏப்ரல் 08 ம் நாளன்று யாழ்ப் பாணத்திலிருந்து வ்வுனியா செல்லும் தரை வழிப்பாதை திறக்கப்பட்டது. அப்போது யாழ்குடா நாட்டில் முகமாலையிலும், வவுனியாவில் புளியங்குளத்திலும் விடுதலைப்புலிகளின் சோதனைச் சாவடிகள் உருவாகின. ஆள்களும், பொருள்களும் பரிசோதிக்கப்பட்டன. பொருள்களுக்கான வரி விதிக்கப்பட்டது. செக் பொயின்ரிலிருந்த தமிழீழ வைப்பகத்தில் உடனேயே பணம் கட்டும் முறைமை உருவானது. இராணுவத்தினரும் முகமாலை, ஓமந்தை சோதனைச் சாவடிகளில் பரிசோதனை செய்த பின்னர் பயணம் செய்ய அனுமதித்தார்கள்.

சரியாக 4 வருடங்கள் 4 மாதங்கள் 4 நாள்கள் ICRC இன் சிறப்பான வழித்துணையுடன் நடைபெற்ற இச் சோதனைச் சாவடிகள் 2006 ஓகஸ்ட் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெடித்த இறுதி ஈழப் போருடன் அழிவடைந்தன.

2006 ஓகஸ்ட் 11 இல் இறுதி ஈழப் போர் ஆரம்பித்த போது இராணுவத்தினர் வாகனத் தொடரணி மூலமாக தமது பயணங்களை மேற்கொள்ள முற்பட்டனர். அப்போது விடுதலைப்புலிகள் இயக்கத்தினரால் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதைத் தடுக்க வாகனத் தொடரணி செல்லும் வீதியை சில மணி நேரம் மூடும் நடைமுறை ஒன்று கொண்டு வரப்பட்டது. இதனை கொண்வே (Convay) என பொதுமக்கள்

அழைத்தனர்.

பிரதான வீதிகளின் சந்திகள் தோறும் அமைக்கப் பட்ட இராணுவ முகாம்களில் இருந்த இராணுவத்தினர் பிரதான பாதையிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்கு அப்பால் பொது மக்களை வாகனங்களை நிறுத்தச் செய்தனர். இதன் மூலம் இராணுவ வாகனங்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட்டது. முகமாலை இராணுவத் தளத்திலிருந்து பலாலி தளத்திற்கு வாகனங்கள் புறப்பட ஆரம்பித்தால் உடனேயே விசில் ஊதப்பட்டு விடும் முகமாலை முதல் பலாலி வரையான வீதிகள் மிக வேகமாக பொதுமக்கள் பாவனைக்குத் தடை செய்யப்பட்டது. இதுவும் ஒரு வகை சோதனைச் சாவடி முறை தான் எனலாம்.

வாகனத் தொடரணி செல்லும் போது சில மணி நேரம் வீதி மூடப்படும் போது அவசர தேவைக்கு வைத்தியசாலை செல்வோர், அலுவலகம் செல்வோர், தமது சொந்தக் காரியங்களுக்கு செல்வோர் என யாவரும் மழை, வெய்யில் பாராது காத்திருக்க நேரிட்டது. பல வேளைகளில் வாகனத் தொடரணி செல்லும் போது பொதுமக்கள் படும்பாடு சொல்ல முடியாத வேதனையாகவே இருந்தது.

ஒருவர் ஒரே நாளிலேயே இரண்டு மூன்று தடவை கொன்வே காரணமாக வீதியில் பல மணி நேரம் நிற்க நேரிட்டது. பெறுமதியான நாளாந்தப் பொழுதுகள் அவமாக கழிந்தது.

ஊரடங்கு நேரம் ஆரம்பித்த பின்பே தமது ஊர்களுக்கு பயந்து பயந்து செல்லும் பயங்கர நிலைமையும் இருந்தது.

2009 மே மாதம் போர் நிறைவுக்கு வந்தது சோதனைச் சாவடிகள் மெல்ல மெல்ல அகலத் தொடங்கியது. சின்ன சின்ன படை முகாம்களும் அகலத் தொடங்கியது. உயர் பாதுகாப்பு வலயமும் சுருங்கத் தொடங்கியது. வீதித் தடைகளும் அகற்றப்பட்டன. வீதிப்போக்குவரத்தும் மிகப் பெருமளவுக்கு இயல்பு நிலைக்கு வரத் தொடங்கியது. முப்பது வருடப் போரில் பட்டது போதும் மீண்டும் போர் வரக் கூடாதெனத் தான் யாவரின் மனங்களும் ஏங்குகின்றது. போர் நீங்கிய காலம் வந்தது. ஆயினும் போரின் போது பட்ட வடுக்கள் எழுத்துருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

போரினால் பட்ட அவதி இங்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எந்தத் தரப்பையும் வசைபாடும் நோக்கம் என் எழுத்துக்களுக்கு இல்லை.

எதிர்காலச் சந்ததி தெரிந்துகொள்ள இந்த ஆவணம் உதவும்.



# கடல் வலயத் தடையும் மீனவர் வாழ்க்கை முறையும்

"கடலம்மா எங்களுக்கு நீதி சொல்ல எவரும் இல்லையா......"

இந்தப் பாடல் 1993 இல் இசைக்கப்பட்ட விடுதலைப் போராட்டம் சார்ந்த பாடல். நடந்து முடிந்த 30 வருட காலப் போரில் மிகப் பெருமளவில் அழிவுகளையும் இழப்புக்களையும் சந்தித்த மக்கள் தொகுதியினராக மீனவர்களே உள்ளனர்.

மூன்று புறமும் கடலால் சூழப்பட்டு ஒடுங்கிய பிரதேசம் ஊடாக வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்யக் கூடிய பூகோள அமைப்புடைய யாழ்.குடாநாட்டில் மீனவர்களின் வாழ்க்கை முறையும் யாழ்ப்பாண நினைவுகளின் மலர்கின்றது. கடல் சார்ந்த பிரதேசங்கள் அதிகமுள்ள யாழ்ப்பாணத்தில் நாட்டின் மொத்த மீனவர் சனத்தொகையில் நாட்டின் மொத்த மீனவர் வந்ததாக 1981 ஆம் ஆண்டின் புள்ளி விவரங்கள்

தெரிவிக்கின்றது.

போராட்ட இயக்கங்கள் மளமளவென வேகமாக வளர ஆதார வாளர்களான சில மீனவர்களின் பங்களிப்பும் காரணமாக அமைந்தது.

1980 ஆம் ஆண்டகளில் தென் இந்தியாவைத் தளமாகக் கொண்டு விடுதலைப் போராட்ட இயக்கங்கள் இயங்கத் தொடங்கிய காலத்தில் படகுப் போக்குவரத்திற்கு ஆதரவாளர்களான சில மீனவர்கள் உதவினார்கள்.

1983 ஜூலை மாதம் வரையில் மீனவர்களின் கடற்றொழில் பெரியளவாகப் பாதிக்கப்படவில்லை. 1984 ஆம் ஆண்டை தொடர்ந்து மீனவர்களின் வாழ்க்கை முறை சோதனைகளைச் சந்திக்க ஆரம்பித்தது.

வர்த்தகப் கப்பல் துறை அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி பின்னாளில் தேசிய பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

தமிழ் போராட்ட இயக்கங்களை அழித்தொழிக்கும் பணி ஜே.ஆர்.அரசாங்கத்தால் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடல் மூலமாக தென்னிந்தியாவுக்குப் படகுப் பயணங்களை மேற்கொள்வதைத் தடுக்கப் பிரகடனப்படுத்தப்படாத தடைகள் நடைமுறைக்கு இடப்பட்டது.

1985 இல் குறிகட்டுவானிலிருந்து நெடுந்தீவு சென்ற குமு

தினி பயணிகள் படகு தாக்கப்பட்டது. பல பயணிகள் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

1986 ஜுன் 10 ஆம் நாளன்று குருநகரிலிருந்து மண்டைதீவுக்கு கடற்றொழிலுக்குச் சென்ற மீனவர்கள் பலர் வெட்டிக் கொல் லப்பட்டனர். 1984 இற்குப் பின்னர் வர்த்தமானி மூலம் பிரகடனம் செய்யப்படாத உத்தியோகபூர்வமற்ற கடல்வலயத் தடைச் சட்டம் நடைமுறைக்கு இடப்பட்டது.

கரையோர மீன்பிடி மட்டுமே மீனவரால் மேற்கொள்ள முடிந் தது. ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்ற மீனவர்களின் படகுகள் தாக் கப்பட்டன.

கடல்வலயத்தடைச்சட்டம்வர்த்தமானியில் அறிவிக்கப்படாத படியால் இது ஒரு வகையில் அரசின் சட்ட விரோதச் சட்டமே எனலாம். இச் சட்டத்தை எதிர்த்து மீனவர்கள் ஆர்ப்பாட்டங் களையும் பேராட்டங்களையும் தொடர்ச்சியாகவே நடத்தி னார்கள்.

1985 ஆம் ஆண்டில் யாழ். நகரில் பெரிய கோவில் என அழைக்கப்பட்ட கிறீஸ்தவ தேவாலயத்தின் வளாகத்தில் மாத கல், சில்லாலையைச் சேர்ந்த மீனவர்கள் அடையாள உண்ணா விரதம் இருந்ததனைக் கண்டுள்ளேன்.

கடலில் மீன்பிடித்து தமது வாழ்க்கையைக் கொண்டு நடத் திய மீனவர்கள் திடீரென வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட போது மிகவும் வறுமை நிலைக்கு உள்ளானார்கள்.

அரசாங்கம் இடம்பெயந்தோர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தையே மீனவர்களுக்கு வழங்கியது. மீனவர்களுக்கென விசேடமான நிவாரணம் எதுவுமேயில்லை.

நிவாரணமாக வழங்கப்பட்ட உலர்உணவுப் பொருள்கள் மாதம் முழுவதும் 3 நேர உணவுக்குப் போதாது. இதனால் மீனவர்கள் தமக்குப் பரீட்சயமில்லாத தொழில்களுக்கெல்லாம் செல்ல வேண்டியேற்பட்டது. மேசன் கூலி வேலை, விறகு கட்டி விற்றல், சந்தை வியாபாரம் எனப் பலவித தொழில்களுக்கும் சென்றார்கள்.

சம்மாட்டி எனப்பட்ட தொழிலதிபர்கள் தமது செல்வந்த நிலைமை மூலம் பட்டினியின்றி வாழ முடிந்தது. அவர்கள் தமது பண பலத்தின் மூலம் தமது பிள்ளைகளை மேற்குலக நாடுகளுக்குப் பாதுகாப்பாக அனுப்பி வைத்தரர்கள்.

தென்னிந்தியாவிற்கு ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொண்டு புலம் பெயரத் தொடங்கினார்கள். அரசாங்கமும் மக்கள் பல்லாயிரக் கணக்கில் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களிலிருந்து தென் இந்தியாவை நோக்கிப் படகுகளில் புறப்பட்ட போது கண்டு காணாமலும் இருந்தனர். அவ்வப் போது சில படக்குகள் கடற்படையினரால் தாக்கப்பட்டு பொது மக்கள் உயிரிழப்பைச் சந்திக்க நேரிட்டது.

ஆனாலும் ஜே.ஆர்.அரசு மக்கள் புலம்பெயர்ந்து தமிழர் சனத்தொகை குறைந்து பேராட்டத்திற்கு ஆள்கள் சேர்வது குறையுமென எதிர்பார்த்தது. இது போலத் தான் கட்டுநாயக்க

விமான நிலையம் ஊடாக மேற்குலகுக்குப் புலம்பெயர்ந்து செல்லும் இளைஞர்களையும் கண்டும் காணாமல் விட்டது. சில கைதுகள், கெடுபிடிகள் தவிர மற்றும் படி பயணம் தடுக்கப்பட வில்லை.

கடல் வலயத் தடைச் சட்டத்தால் ஆரம்பகாலங்களில் யாழ். நகரை அண்டிய குருநகர் பிரதேசம் தான் மோசமாகப் பாதிக் கப்பட்டது.

இப் பாதிப்பு பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டது. அந்த நாள்களில் இராணுவம், கடற்படை என்பன இப்போதையதைப் போல இராட்சத அமைப்புகளாக கட்டி எழுப்பப்படவில்லை. அத னால் கரையோரம் முழத்துக்குமுழம் படை முகாம்கள் இருக்க வில்லை.

மீனர்கள் பரவைக் கடல் தொழில், கரையோர படகு மீன்பிடி, களங்கட்டி முறையிலான மீன்பிடி, இறால் கூடு, நண்டுக் கூடு மூலமான மீன்பிடி என்பவற்றை ஓரளவுக்கு மேற்கொள்ள முடிந்தது. பாரிய அளவில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் சிறியளவில் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, வடமராட்சி கிழக்கு பிரதேச மீனவர்களும் கரையோரத்திலிருந்து குறிப்பிட்ட தூரம் வரை சென்றே மீன்பிடிக்க முடிந்தது.

1987ஜுலை 29 இல் இலங்கை இந்திய சமாதான உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அப்போது ஓர் அமைதி நிலை உருவாகியது. இந்திய அமைதி காக்கும் படைகள் வடக்கு கிழக்

கில் நிலை கொண்டன. ஏறத்தாழ 4 வருடங்கள் வரை ஆழ்கடல் மீன்பிடிக்கு செல்ல முடியாதிருந்த நிலையும், கரையோரம் ஆபத்துமிக்க மீன்பிடியையும் மேற்கொண்ட மீனவர்களுக்கு சாதகமான காலம் கனிந்தது. கடற்றொழிலை முன்பு போலச் சாதாரணமாகச் செய்ய முடிந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து தென்னிந்தியாவுக்கு சென்று இங்குள்ள பொருள்களை வாங்கி வந்ததும் சாதாரண மாகவே நடந்தது. 1987 ஒக்ரோபர் 10 ஆம் திகதியன்று இந்தியப் படைகளுடனான தமிழீழ விடுதலைப் புலிகளின் போர் ஆரம்ப மாகியது.

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து இந்தியப் படைகள் தீவிர போர் புரிந்தபடியே வெளியேறினார்கள். இது போல பலாலி, காங்கேசன்துறை, ஆனையிறவு படை முகாம்களிலிருந்தும் இந்தியப் படைகள் வெளியேறி யாழ்.குடாநாட்டை முழுமையா கவே கைப்பற்றினார்கள்.

அப்போது பாசையூர் மீனவர்களில் ஒரு பகுதியினர் பூநக ரியின் மண்ணித்தலை பிரதேசத்திற்கு பாதுகாப்புத் தேடிச் சென்றார்கள்.

இந்தப் படை நடவடிக்கையின் போது பல நூறு பொது மக்கள் கொல்லப்பட்டார்கள். காயமடைந்தார்கள். பொது மக்களின் அரச, தனியார் துறைகளின் ஏராளம் சொத்துக்கள் அழிக்கப் பட்டன. அப்போதும் இந்தியப் படைகளால் கடல் வலயத் தடை மீனவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. கரையோர முள்ள இந்தியப் படை முகாமில் மீனவர்கள் தமது பெயரைப் பதிந்துகொள்ள

வேண்டும். பாஸ் (pass) எடுத்து ரோக்கன் (Token) பெற்றே மீன வர்கள் கடலுக்குச் செல்ல முடியும்.

மாலை 5 மணிக்கு கடலுக்குச் செல்லும் மீன்பிடி படகு ஒன்று அதிகாலை 5 மணிக்குப் பின்னரே கரை திரும்ப முடியுமென்ற நிபந்தனையுடன் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். பட கில் கொண்டு செல்லப்படும் பொருள்கள் யாவும் அக்குவேறு ஆணி வேறாகப் பரிசீலிக்கப்பட்டன.

கரை திரும்பும் படகுகளில் இருந்த மீன் வகைகளும் கடு மையான சோதனைகளுக்குப் பின்னரே அனுமதிக்கப்பட்டது.

1990 ஜனவரி 21 ஆம் நாளன்று யாழ். குடாநாட்டிலிருந்து இந் தியப் படைகள் முழுமையாக வெளியேறினார்கள். அதற்கு முன் னரான நாள்களிலேயே வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல் லைத்தீவு மாவட்டங்களிலிருந்தும் இந்தியப் படைகள் வெளி யேறி விட்டார்கள். அப்போது அங்குள்ள காட்டுப் புறங்களி லிருந்து புறப்பட்ட விடுதலைப் புலிகள் அனைத்துப் பிரதேசங்க ளையும் தம்வசமாக்கிக் கொண்டு யாழ்ப்பாணத்தினுள்ளும் புகுந்தார்கள்.

நிலப் பரப்புக்களைத் தம் வசமாக்கினார்கள். அப்போது வடக்கு - கிழக்கு பிரதேசங்கள் யாவும் கடற்றொழில் உன்னத மாக நடைபெற்றது. இனி யுத்தம் வராது நிம்மதியாக வாழலா மென நினைத்தார்கள்.

அந்த நினைப்பில் மண் விழுந்தது. 1990 ஜூன் 10 மட்டக்களப்பு மண்ணில் வெடித்த ஈழப்போர் ஜூன் 15 ஆம் நாளன்று காங்கே

சன்துறை ஹாபர்வியூ ஹோட்டல் முன்பாகவும் வெடித்தது.

அதனால் மீனவர் வாழ்விலும் சோகம் ஏற்பட்டது. இந்தப் போரைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு எங்கும் இருந்து பல்லா யிரம் மீனவர்கள் உயிரைப் பணயம் வைத்து படகுகளில் குடும் பம் குடும்பமாக தென்னிந்தியாவுக்குச் சென்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறை, மணிந்தோட்டப் பிர தேசம் அகதிப் பயணத்திற்கான பிரதான பாதையாக இருந்தது. அது போல மாதகல், பருத்தித்துறையிலிருந்தும் பல்லாயிரம் பேர் தென்னிந்தியாவுக்குச் சென்றனர்.

கடலில் கடற்படைப் படகுகளின் தாக்குதலில் சிக்கி இறந்த குடும்பங்களும் இருந்தார்கள். வட பகுதி மீனவர்கள் ஏறத்தாழ அரைவாசிப் பேர் இவ்விதம் தென்னிந்தியாவைச் சென்றடைந் தார்கள். தமிழகம் மண்டபம் முகாமில் பதியப்பட்ட இந்த மீனவ மக்களும் பிற தொழில் செய்யும் மக்களும் தென்னிந்தியாவின் அனைத்து மாவட்டங்களுக்கும் அகதிகளாக அனுப்பி வைக்கப் பட்டார்கள்.

தமிழகம் சென்ற மீனவர்கள் அரசினால் வழங்கப்பட்ட நிவார ணங்களைப் பெற்றதுடன் தமிழக மீனவர் ஆதரவுடன் ஓரளவு கடற்றொழிலும் ஈடுபட முடிந்தது.

அதேவேளை இங்குள்ள மீனவர்கள் போரின் வெம்மையில் சிக்கி அல்லற்பட்டனர். அரசினால் வழங்கப்பட்ட இடம்பெயந் தோர் நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டு ஆபத்தான கடற் றொழிலைச் செய்து கொண்டு வாழ்ந்தார்கள்.

அதே வேளை இந்திய தமிழகத்தில் வருடத்தில் 45 நாள்கள் கடலில் மீன் பெருகுவதற்காக மீன் பிடிக்க தடை செய்யவார்கள். அக்காலத்தில் மீனவர்கள் வாழ்வாதாரத்தில் போதுமான நிவா ரணங்கள் வழங்கப்படுகிறது. அதுபோல எமது நாட்டில் மீனவர் களுக்கு என தனியான நிவாரணம் எதுவுமே வழங்கப்பட வில்லை. 2004 டிசெம்பர் 26 இல் சுனாமி பேரலைகள் எமது நாட்டை தாக்கி பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் பறிக் கப் பட்ட காலத்தில் மட்டுமே மீனவர் நிவாரணம் வழங்கப்பட்டது. அதுவும் சிங்கள மீனவர்கள் பாதிக்கப்பட்ட காரணத்தாலேயே தமிழ் பேசும் மீனவர்களுக்கும் நிவாரணம் கிடைத்தது.

1990 ஜூன் 15 இல் ஆரம்பித்த ஈழப்போரின் பின்னர் தான் தான் கரையோரம் வாழ்ந்த மீனவர்களின் வீடுகள், படகுகள், விமானக் குண்டு வீச்சில் அகப்பட்டுப் பெருமளவு சேதத்தைச் சந்தித்தது. கடலில் மீனவர் உயிரிழப்பும் பெருமளவு இடம் பெற்றது.

1990 ஜூனில் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து தீவக மக்களின் இயல்பு வாழ்க்கை தலை கீழானது. யாழ்ப் பாணக் கோட்டை இராணுவ முகாமைக் கைப்பற்ற தமிழீழ விடு தலைப் புலிகள் மிகக் கடுமையான போரைத் தொடுத்தனர்.

கோட்டையிலுள்ள இராணுவ வீரர்களைக் காப்பாற்ற ஊர் காவற்றுறை படைமுகாமில் பெருமளவு படை வீரர்கள் குவிக்கப் பட்டனர். அங்கிருந்து முன்னேறத் தொடங்கிய இராணுவத்துடன் விடுதலைப் புலிகள் மிகக் கடுமையாகப் போராடினார்கள்.

இராணுவம் போரிட்ட படியே அல்லைப்பிட்டி, மண்டைதீவு

வரை முன்னேறி வந்தனர். ஏராளம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 1990 செப்ரெம்பர் 26 ஆம் நாளன்று யாழ்.கோடட்டை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் கடல் வழியாக மண்டைதீவை நோக்கிப் பின் வாங்கினார்கள். இதனால் தீவக மக்களின் வாழ்வு மட்டுமல்ல கடற்றொழிலாளர்களின் வாழ்க்கையும் சீரழிந்து போனது.

1990 போருக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் போர் தொடங்கினால் இங்குள்ள தீவகப் பிரதேச மக்கள் வட்டுக்கோட்டை சென்று அராலித்துறையூடாக தீவகம் சென்று பாதுகாப்பாக இருந்தரர்கள். எனது பாடசாலை சக மாணவன் ஒருவன் புங்குடு தீவைச் சேர்ந்தவன். எனக்கு கூறுவான் “மச்சான் இஞ்ச சண்டை தொடங்கினால் பண்ணைக்கு அங்கால தமிழீழம். நாம் ஓடிப் போய் பாதுகாப்பாக இருப்போம்” என்பான். இந்த நிலைமை தலைகீழாக மாறி தீவக வாழ்வின் கட்டுமானங்கள் சீர்குலைந்தது.

1983 ஜூலைக்குப் பின்னரான காலப் பகுதியில் கடலில் மீன்பிடிக்கும் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட பின்னர் யாழ். குடாநாட்டில் பொதுமக்கள் உண்ணும் மீன்களும் அளவு குறைந்தது. இதனால் பொதுமக்களின் போசாக்கு நிலையும் பாதிக்கப்பட்டது.

1994 ஓகஸ்ட் மாதம் சந்திரிகா பிரதமராாக ஆட்சிக் கட்டிலில் ஏறினார். அப்போது தமிழீழ விடுதலைப் புலிகளுடனான போரை நிறுத்தி அறிவிப்புச் செய்தார். போர் நிறுத்தத்திற்கும் பேச்சு வார்த்தைக்கும் விடுதலைப் புலிகளை அழைத்தார்.

அக்காலத்தில் தாக்குதல்கள் எதுவுமே நடக்கவில்லை. ஆனாலும் குடாநாட்டு மீனவர்கள் கரையோரத்தை அண்டியே தொழில் செய்தனர். ஆழ்கடல் சென்று அகலத் தொழில் செய்ய முடியாத நிலையேற்பட்டது. 1994 நவம்பரில் சந்திரிகா ஜனாதிபதியானார். பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. மீனவர் தொழில்களில் பெருமளவு முன்னேற்றமில்லை.

1995 ஏப்ரல் 19 ஆம் நாளன்று திருகோணமலை கடற்படைத் தளத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் கடற்கரும்புலித் தாக்குதலை நடத்தி ரணசுறு, சூரயா கடற்கலங்களை அழித்தார்கள். மீண்டும் கொடூர போர் மூண்டது. அப்போதும் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டது.

1995 ஜூலை 09 இல் பலாலி படைத் தளத்திலிருந்து முன்னேறிப் பாய்ச்சல் என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இராணுவத்தினர் சண்டிலிப்பாய், சங்கானை ஊடாக, வட்டுக்கோட்டை பிரதேசம் வரை முன்னேறினார்கள். பின்பு விடுதலைப் புலிகளின் புலிப் பாய்ச்சல் நடவடிக்கை மூலம் இது முறியடிக்கப்பட்டது. 1995 ஓகஸ்டில் இழமுழக்கம் நடவடிக்கை மூலம் பலாலி முகாம் படையினர் அச்சுவேலிப் பிரதேசத்தைக் கைப்பற்றினார்கள். பின்பு இது ரிவிரச இராணுவ நடவடிக்கையாகப் பெயரிடப்பட்டு யாழ்ப்பாண நகரை மீட்கும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டது.

அப்போது 1995 ஒக்ரோபர் 30 ஆம் நாளில் மாபெரும் இடப்பெயர்வு நடந்தது. யாழ்.குடாநாட்டின் மீனவர்களில் யாழ்ப்பாணம், வலிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் தமது படகுகளுடன் அரியாலை, தனங்களப்பு, கேரதீவு ஊடாக வன்னிப் பகு

திக்குச் சென்றனர்.

படகுகளில் போக முடியாத மீனவர்கள் தரை வழியாக இடம் பெயர்ந்து தென்மராட்சி, வடமராட்சி பிரதேசங்களுக்குச் சென்றார்கள். பல குடும்பங்கள் வன்னிப் பிரதேசத்திற்குச் சென்றார்கள்.

இந்த மாபெரும் இடம்பெயர்வில் மீனவர்கள் பூநகரியின் பள்ளிக்குடா, நாச்சிக்குடா பகுதிகளில் குடியமர்ந்தனர். பள்ளிக்குடா, பாலாவி, மண்டைக் கல்லாறு, கிராஞ்சி, வலைப்பாடு, மூன்றாம்பிட்டி, நாச்சிக்குடா போன்ற கிராம மீனவர்களுடன் ஒத்திசைந்து தொழிலைச் செய்து வந்தார்கள்.

இத்தகைய இடம்பெயர்வுகளால் கடல்தொழிலை நம்பி வாழாமல் வேறுபல கூலி வேலைகளையும் செய்யப் பழகினார்கள். ஆயினும் போதிய வருமானம் இன்றி மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

1990 ஜூன் யுத்தத்தின் போது வலிகாமம் வடக்கின் பலாலி, மயிலிட்டி பிரதேசங்களிலிருந்த மீனவர்கள் வடமராட்சியின் சக்கோட்டை, இன்பருட்டி பிரதேசங்களுக்குச் சென்று குடியேறி மிக நீண்டகாலம் வாழ்ந்து வருவதும் குறிப்பிடத்தக்கது. பெரும் மீன் வளங்கள் நிறைந்த இக் கடல் பிரதேசம் மீன் பிடிக்க முடியாத பிரதேசமாகவே தொடர்ந்தும் இருந்து வருகிறது. மயிலிட்டி மீன்களுக்கு தனியான சுவை உண்டென வாயூறச் சொல்வதை இன்றும் கேட்க முடிகிறது.

இடம்பெயர்வுக் காலங்கள் தொடர்ச்சியாக வந்ததை

தொடர்ந்து கடற்றொழிலாளர்களின் சிந்தனையிலும் கல்வி தொடர்பான நாட்டமேற்பட்டது. பிள்ளைகள் படித்து உத்தியோக மானால் தமது வாழ்வாதாரம் ஓரளவு சிறப்பாக இருக்குமெனச் சிந்தித்தார்கள்.

பிள்ளைகளை படிப்பிப்பதில் கவனம் செலுத்தினார்கள். குறிப்பாக பெண் பிள்ளைகளின் கல்வித் தரம் உயர்ந்தது. கணிசமான பெண்கள் அரச, தனியார் துறை வேலைகளுக்குச் செல்லத் தொடங்கினார்கள். ஆண்கள் தந்தையாரின் கடல் தொழிலுக்கு உதவியதால் கல்வியில் பெரிதாக முன்னேற முடியவில்லை.

1993 மே முதல் 1996 ஏப்ரல் வரை நடைபெற்ற கிளாலி கடல் நீரேரி ஊடாக பூநகரி நல்லூர் செல்லும் படகுப் போக்குவரத்தி லும் மீனவர்கள் ஈடுபட்டார்கள். உயிரிழப்பை சந்தித்த படியே சேவையிலீடுபட்டார்கள்.

1996 ஏப்ரல் 19 ஆம் நாளன்று யாழ். குடாநாட்டில் கோப்பாய், புத்தூர், நீர்வேலிப் பிரதேசங்களிலிருந்த இராணுவத்தினர் ஓசையின்றி முன்னேறி தென்மராட்சி பிரதேசத்தைக் கைப் பற்றினார்கள். மே மாதமளவில் வடமராட்சி பிரதேசமும் அரச படையினர் வசம் வந்தது.

அப்போது வடமராட்சிப் பிரதேசத்திலிருந்த விடுதலைப் புலி கள் சார்புடைய மீனவக் குடும்பங்கள் வடமராட்சி கிழக்கு கடல் பிரதேசத்தினூடாக முல்லைத்தீவுப் பிரதேசத்தைச் சென்றடைந் தார்கள்.

1996 மே மாதத்தின் பின்னர் யாழ்.குடாநாட்டில் தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசங்களில் இருந்து மக்களின் மீள் குடியேற்றம் நடைபெறத் தொடங்கியது.

மீன்பிடி நடவடிக்கைகளுக்கும் இராணுவத்தினர் மெல்ல மெல்ல அனுமதிக்கும் போக்கை கடைப்பிடித்தனர். ஆரம்பத்தில் கரையோரப் பிரதேசங்களில் வலை வீசி மீன் பிடிக்க அனுமதித் தார்கள். அதுவும் பகல் நேர அனுமதியாகவே இருந்தது. நாளடைவில் கரையிலிருந்து குறிப்பிட்ட தூரம் படகில் சென்று மீன் பிடிக்க அனுமதித்தார்கள்.

சில மாதங்களின் பின்பாக கரையோரத்திலிருந்து குறிப் பிட்ட தூரம் வரை மீன் பிடிக்க செல்பவர்கள் மாலை 5 மணிக்கு புறப்பட்டு செல்லவும் அதிகாலை 5 மணிக்குப் பின்னர் கரைக் குத் திரும்பி வரவும் அனுமதித்தார்கள். இவ்வாறு மீன் பிடித்தவர் கள் பாஸ் நடைமுறையின் கீழ் கடலில் இறங்க அனுமதிக்கப் பட்டது.

படகில் புறப்படும் மீனவர்கள் அக்குவேறு ஆணிவேறாக இராணுவத்தினரால் பரிசோதிக்கப்பட்டார்கள். மீனவர்கள் தமது உள்ளாடையுடன் மட்டும் படகில் சென்று மீன்பிடித்துவர ஆரம்ப நாட்களில் அனுமதிக்கப்பட்டார்கள். சில காலம் செல்ல அவர்கள்விரும்பிய ஆடையுடன்செல்லஅனுமதிக்கப்பட்டார்கள். அதிகாலை 5 மணிக்குப் பின்னர் கரை திரும்பும் படகுகள் கடுமையான சோதனைக்குப் பின்பு கரையில் கட்ட அனுமதிக் கப்பட்டது.

1996 இன் இறுதிக்காலத்தில், 1997, 1998 காலப் பகுதியில்

பூநகரியின் மண்ணித்தலை, கல்முனை, கௌதாரிமுனை பிரதேசங்களில் இருந்து விடுதலைப் புலிகள் குருநகர், பாசையூர் கரையோரங்களுக்கு திடீரென வந்து தாக்குதல் தொடுத்தனர். இதனால் கரையோரம் முழுவதும் பனைக் குற்றிகளை நட்டு முள்ளுக் கம்பி வேலிகளை இராணுவத்தினர் அமைத்தார்கள்.

குடாநாட்டில் வலிகாமம், வடமராட்சி, தீவகம் போன்ற பிரதேசங்களில் இது போன்ற முள்ளுக் கம்பி வேலிகள் அடைக்கப்படவில்லை.

அங்கும் பாஸ் நடைமுறையின் கீழேயே கடல் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டார்கள்.

1997, 98 ஆண்டு காலப் பகுதியில் பூநகரியின் நாச்சிக்குடா பிரதேசத்தில் இருந்து படகுகள் மூலம் யாழ்.குருநகருக்கு பொது மக்கள் மீளத் திரும்பினார்கள். அவ்வாறு வந்த மக்கள் ஆரம்பத் தில் தேவாலயம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டார்கள். சில நாட் களின் பின்பாக அவர்கள் சீநோர் முகாமில் தங்க வைக்கப்பட்டு அவர்களது பிரதேச கிராம அலுவலர் பொறுப்பெடுத்த பின்பு சொந்தப் பிரதேசங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

விடுதலைப் புலிகள் தமது பிரதேசத்தில் இருந்து யாழ்ப்பா ணத்திற்கு மக்கள் மீளச் செல்வதை கண்டும் காணாமல் விடும் போக்கையே கடைப்பிடித்தார்கள்.

2002 பெப்ரவரி 22 இல் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன் படிக்கை காலப் பகுதியிலும் மீனவர் பிடிக்கும் முறைகளில்

குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. கரையோர மீன் பிடி மட்டுமே அனுமதிக்கப்பட்டது. ஆழ் கடல் மீன்பிடி தொடர்ந்தும் மறுக்கப்பட்டது.

ஆனாலும் இக்காலங்களில் அச்சமின்றியதாக மீன் பிடிக்கக் கூடிய நிலை இருந்தது.

2006 ஓகஸ்ட் 11 ஆம் நாளில் இறுதி ஈழப்போர் ஆரம்பித்தது. வன்னிப்பெரும் நிலப்பரப்பில் இருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்குடன் விடுதலைப் புலிகள் அல்லைப்பிட்டி, மண்டைதீவு பிரதேசங்களில் வந்து இறங்கினார்கள். பெரும் சண்டை மூண்டது. இராணுவம் தமது நிலையை தக்க வைத்துக் கொண்டது. இதனைத் தொடர்ந்து தொடர்ச்சியான ஊரடங்கு சட்டங்களால் மீன்பிடி முற்றாகவே நடைபெறவில்லை. சில நாட்களின் பின் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கரையோர வலை வீசும், களங்கட்டி, நண்டுக் கூடு, இறால் கூடு தொழில்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டது.

சில வாரங்களின் பின் பாஸ் நடைமுறைகளின் கீழ் மீண்டும் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட்டனர். விடுதலைப் புலிகள் ஆதரவு மீனவக் குடும்பங்கள் கடலில் இறங்க அனுமதிக்கப்படவில்லை. கடல் தொழிலுக்குச் செல்பவர்களின் உடைமைகள், உணவு என்பவை மிகக் கடுமையாக பரிசோதிக்கப்பட்டது.

2008, 2009 ஆம் ஆண்டுகளில் வன்னிப் பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து படகுகளில் தப்பி ஓடி பருத்தித் துறை நோக்கி மக்கள் வரத் தொடங்கினார்கள். அவ்வாறு வந்த மக்கள் கைதடி, நாவற்குழி, கொடிகாமம் இராமாவில் ஆகிய

இடங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

2009 மே 19 இல் போர் முடிவுக்கு வர மீனவர்களுக்கு கடற்றொழில் செய்யும் முறைமைகளில் கூடியளவு சுதந்திர நிலை ஏற்பட்டது. சில மாதங்களின் பின் பாஸ் நடைமுறை முற்றாகவே நீக்கப்பட்டது. கரையோரம் இருந்த கடற்படை, இராணுவத்தின் முகாம்கள் நாளடைவில் விலக்கப்பட்டது.

ஆனால் இந்திய றோலர்களின் வருகையால் இலங்கை வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பெருமளவு பாதிக்கப் படும் நிலை பிரதான பிரச்சினையாக உள்ளது.

கடல் சூழ் யாழ்ப்பாணப் பிரதேச மீனவர்களின் வாழ்நிலை போரினால் சீரழிக்கப்பட்டது எழுத்து ஆவணமாக இங்கே முன் வைக்கப்பட்டுள்ளது. இது அனைத்துப் பிரதேச மீனவர்களின் பிரச்சினைகளை முழுமையாக பிரதிபலிக்காமல் இருக்கலாம். ஆனால் மூன்றுபுறம் கடலால் சூழப்பட்ட யாழ்ப்பாண மண்ணில மீனவர்களை விடுத்து யாழ்ப்பாண நினைவுகளை முன்வைக்க முடியாதல்லவா.

ஆதலால் இன்றைய பத்தி மீனவர்களின் வாழ்வியலாக மலர்ந்துள்ளது.



# ரியூசன் கால நினைவு மீட்டல்

தம்பி, நீ வகுப்பில் படிக்கிற திறமை காணாதாம். வாத்தியார் கூப்பிட்டுச் சொன்னவர் உனக்கு கணக்குப் பாடத்தில ரியூசன் ஒழுங்கு செய்யட்டாம். ஏன் அப்பு நீ படிக்க கள்ளப்படுகிறாய். இக் கணம் ரியூசன் படிப்பிக்க நாலு பேருக்கு தெரிய வருமே....... மானம் மரியாதை போகுமே.

பிள்ளையைப் பெற்ற தகப்பனாரின் கவலை அது. இது இன்று நேற்று நடந்த கதையல்ல. 40 வருடங்களுக்கு முந்திய உரையாடல். மாணவன் ஒருவன் ரியூசன் படிப்பது வெட்கத்துக் குரியதாக இருந்தது. காலவெள்ளம் வழமைகள் யாவற்றையும் கட்டறுத்து போகச் செய்து விடும்தானே.

1970 களில் தமிழ் மாணவர்களின் குறிப்பாக யாழ்ப்பாண மாணவர்களின் கல்கலைக்கழக அனுமதியை மட்டுப்படுத்த

தரப்படுத்தல் முறை அரசாங்கத்தால் அறிமுகம் செய்யப்பட்டது. இதுவே ரியூசன் சென்ரர்களை வளர்த்தது.

ஆம்! இன்று ரியூசன் ஒரு பாசனாகி விட்டது. யாழ்.குடாநாட்டில் மட்டுமல்ல நாட்டின் நாலாபுறங்களிலும் பட்டிதொட்டியெங்கும் இதுதான் நிலைமை.

பாடசாலை வகுப்பறைக் கல்வியில் முழுமையாகத் திறமை வாய்ந்த ஆசிரியர்கள் கற்பித்தாலும் கூட ஓர் மாணவன் ரியூசனுக்குப் போகிறான். அங்கே என்ன உள்ளது. அதைப் பார்ப்போம் என்ற உளவியல் எங்கும் வியாபித்து விட்டது. அன்றைய யாழ்ப்பாணத்தின் ரியூசன் கால நினைவுகளில் முழ்கிப் பார்ப்போம்.

கல்வியை மூலதனமாகக் கொண்டு முன்னேறிய யாழ்ப் பாணச் சமூகத்தில் ரியூசன் சென்ரர்கள் எனப்பட்ட தனியார் கல்வி நிலையங்களின் தோற்றம் இயல்பாகவே உருவாகிது.

1970 களில் தான் ரியூட்டறி, ரியூசன் சென்ரர் எனக் கூறப்பட்ட தனியார் கல்வி நிலையங்கள் பல்கிப் பெருகத் தொடங்கியது.

யாழ். நகரச் சுற்றாடலில் உருவாகிய தனியார் கல்வி நிலையங்களைப் பார்ப்போம். அஸ்ரன் இன்ஸ்ரிரியூட் - திரு. லோநாதன் (Bond Institute) திரு. ஆனந்தகுமார். (பொன்ட் மாஸ்ரர்), யாழ்.போதனா வைத்தியசாலைக்கு முன்பாக எடியுகேசன் சென்ரர் (Education center), பலாலி வீதி இலுப்பையடிச் சந்தியில் எடியுகேசன் ரியூசன் சென்ரர் (Education Tution center), கொட்டடியில் மீனாட்சி கல்வி நிலையம், திரு. குழந்தைவேல் , கந்தர்மடத்தில்

யூனிவேர்சர் - பொ.ஐங்கரன், ஆனைப்பந்தியில் மீனாட்சி கல்வி நிலையம் , சுண்டுக்குளியில் நொதேர்ண் கல்வி நிலையம், பீகொண் கல்வி நிலையம், (Becon Tution center) யாழ்.பிரதான வீதியில் சட்டக் கல்விக்கெனவும், உயர்தர வகுப்பு மாணவர்களுக்கெனவும் உருவாக்கிய (Law centre) (லோ சென்ரர்) அரியாலையில் றேடியன்ற் கல்வி நிலையம், யாழ். நகரச் சுற்றாடலில் பிறந்து வளர்ந்த நான் பார்த்தறிந்த கேட்டறிந்த ரியூட்டறிகள் தான்.

இது போல இன்னும் பல ரியூட்டறிகள் யாழ். நகர, புறநகரச் சுற்றாடலில் உருவாகி இருக்கலாம். வலிகாமம் என அழைக்கப் படும் பிரதேசத்திலுள்ள 5 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் தீவகம் என அழைக்கப்படும் பிரதேசத்திலும் வடமராட்சி, தென் மராட்சி, பச்சிலைப்பள்ளி பிரதேசங்களிலும் பல தனியார் கல்வி நிலையங்கள் உருவாகி இருக்கும்.

அவை யாவும் கண்டறியப்பட்டு அவற்றின் செயற்பாடுகள் ஆவணப்படுத்தப்பட வேண்டியவை. பல்கலைக்கழக மட்டத்தில் முதற்பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு, முதுகலைமாணி, முது தத்துவமாணி, கலாநிதிப் பட்டப்படிப்புக்களுக்கு இவை ஏற்கனவே ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டும் இருக்கலாம். மக்கள் வங்கியினால் வெளியிடப்பட்டு வரும் பொருளியல் நோக்கு அறிவியல் ஓர் இதழ் 1988 ஆம் ஆண்டு தனியார் கல்வி நிலையங்கள் தொடர்பான ஆய்வு இதழாக வெளி வந்திருந்தது இந்த இதழில் நாட்டின் அனைத்துப் பிரதேசங்களும் உள்வாங்கப்பட்டு பல கோணங்களில் அமைந்த தரமான கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன.

1970 களில் அரசாங்கத்தால் அறிமுகம் செய்யப்பட்ட தரப் படுத்தல் தொடர்பாக எமது பார்வையைச் செலுத்துவோம்.

பல்கலைக்கழக அனுமதிக்கு திறமை அடிப்படையில் மட்டும் மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட நடைமுறை இருந்த காலத்தில் யாழ்ப்பாண மாணவர்களால் நாட்டின் நாலா பாகங்களிலும் இருந்த பல்கலைக்கழகங்கள் நிறைந்தன.

நாட்டின் இன விகிதாசாரத்தில் சிறிய பங்கை வகித்த தமிழ் மக்களில் மிகச் சிறிய பங்கைக் கொண்டிருந்த யாழ்ப்பாண மாணவர்கள் அவ்வாறு பல்கலைக்கழகளுக்கு அனுமதி பெற்றது பேரினவாதச் சிந்தனை கொண்ட அரசாங்கத்துக்குப் பிடிக்கவில்லை. அதன் விளைவாகத் தரப்படுத்தல் முறையைக் கொண்டு வந்தனர்.

மாவட்டத்து மாவட்டம் பல்கலைக்கழகக் கற்கை நெறிகளுக்கு வெட்டுப்புள்ளிகளை நிர்ணயித்தனர். யாழ்ப்பாண மாணவர்களுக்கு இந்த முறைமை கல்வியில் பாரிய பின்னடைவைக் கொடுத்தது. கல்வியில் பின் தங்கியிருந்த அந்த மாவட்டங்களில் மருத்துவர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், பட்டதாரிகள் உருவாக தரப்படுத்தல் கை கொடுத்தது.

யாழ்ப்பாணத்தில் 250 மொத்தப் புள்ளிகளைப் பெற்ற ஒரு மாணவன் பல்கலைக்கழகத்துக்குச் செல்ல முடியாதிருந்த போது இன்னொரு மாவட்டத்தில் 201 புள்ளிகளைப் மொத்தப் புள்ளிகளைப் பெற்ற ஒருவர் மருத்துவப் படிப்பிற்குத் தெரிவாகி இருப்பார். கல்வியில் மிகக் குறைந்த வசதிகளைக் கொண்ட அந்த மாவட்டங்களில் 201 புள்ளிகளை ஒரு மாணவன் பெறுவ

தென்பது பெரும் சாதனை தான். வசதி படைத்தோர் கல்விப் புலத்தில் உள்ள அதிகாரிகள் பலர் தரப்படுதலின் நன்மையை அனுபவிக்க கல்வி வசதி குறைந்த மாவட்டத்தின் பாடசாலை ஒன்றில் பெயரைப் பதிந்துவிட்டு யாழ்ப்பாணம் போன்ற கல்வி வசதி படைத்த மாவட்டங்களின் தனியார் கல்வி நிலையங்களில் விட்டுப் படிப்பித்தனர். இவை பற்றி ஆராய புறப்பட்டால் எமது ரியூசன் தலையங்கத்தின் திசை மாறிவிடும்.

அதனால் ரியூசன் திசைநோக்கி மீண்டும் வருவோம். 1970 களின் தரப்படுத்தல் முறைமை தான் யாழ்ப்பாணத்தில் ரியூட் டறி துறையாக வளர்த்தது. பல்கலைக்கழக அனுமதிக்கு வந்த கடும் போட்டியும் பிற மாவட்டங்களின் வசதி படைத்த மாண வர்களின் வருகையும் யாழ்.மாவட்டத்தின் நகரப் பிர தேசங் களில் ஏராளம் ரியூசன் சென்ரர்களை உருவாக்கியது.

அக்காலத்தில் பாடசாலைகள் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை இரு நேரமாக இயங்கியது. மதிய உணவு இடைவேளையாக 12.30 மணி வரை ஒதுக்கப்பட்டிருந்தது.

காலையில் 6 மணி முதல; 7 மணி வரை ரியூசன் நடத்திய நிகழ்வும் இருந்தது. பரீட்சை நெருங்கும் காலங்களில் அதி காலை 5.30 மணி முதல் காலை 7.30 மணி வரையும் நடைபெற்றது. பாடசாலை முடிந்ததும் மாலை 4.30 மணி முதல் 6 மணி வரை வகுப்பு நடத்திய ரியூட்டறிகளும் இருந்தன. இதனால் நாள் முழுக்க பாடசாலை சீருடையுடன் தான் இருக்க வேண்டி வந்தது.

ஆனாலும் "கல்வியும் எங்கள் மூலதனம், இதில் கத்தி வைக் கிறது ஆளுமினம்...' என மன வைராக்கியம் கொண்டு

படித்தார்கள்.

1970 களில் ஏற்படுத்தப்பட்ட தரப்படுத்தல் முறைமை தான் தமிழ் இளைஞர்களுக்கு அரசாங்கத்துக்கு எதிரான போராட்டச் சிந்தனைகளை உருவாக்கியது. தரப்படுத்தல் முறைமைக்கு எதிராக யாழ்.நகர வீதிகளில் பெரும் ஆர்ப்பாட்டங்களைச் செய் தார்கள். ஆனாலும் இரும்புப் பெண்மணியான சிறீமா அரசாங் கம் எதற்கும் அசைந்து கொடுக்கவில்லை.

விளைவு தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தரித்த போராட்டத்தின் பால் ஈர்க்கப்பட்டதாகச் சமூகவியலாளர்கள் கூறுகின்றனர்.

பல்கலைக்கழக அனுமதிக்கு தேவையான குறை நிரப்பு கல்வியை வழங்கிய தனியார் கல்வி நிலையகள் மிக வேக மாகவே க.பொ.த. சாதாரண தரம் (O/l) ஆரம்ப வகுப்புகள் எனத் தமது கால்களை நகர, கிராம இடைவெளிகளின்றி எங்கும் பரப்பத் தொடங்கின.

சட்ட மாணிப் பரீட்சை, வெளிவாரிப் பட்டப்படிப்பு, லண்டன் ICMA பரீட்சை, சர்வதேச தரத்திலான ஆங்கிலக் கற்றை நெறிச் சான்றிதழ்கள் என வியாபகம் தொடர்ந்தது.

பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியரை மிக மதிப்பாக உயர்வாக மாணவர்கள் பர்த்த மனநிலை இந்த ரியூசன் சென்ரர் களின் வரலால் வளர்வால் சற்று கீழிறங்கி வரத் தொடங்கியது.

இது கவலைக்குரிய விளைவாகப் பார்க்கப்பட்டது. அதே வேளை பாடசாலைகளில் மிகத் திறமையாகக் கற்பித்த

ஆசிரியர்களில் சிலர் ரியூட்டறிக்கு அங்கே வடிவாய்ப் படிப்பிக் கிறன். பணம் பண்ணும் மனநிலையுடன் கீழ்த்தரமாக நடந்து கொண்டதும் அரங்கேறியது.

இன்றும் அரற்கேறி வருகின்றது.

விதிவிலக்காக சில ஆசிரியர்கள் பாடசாலையில் மிகத் திற மையாக கற்பித்து தமது மாணவர்கள் யாரும் தான் கற்பிக்கும் ரியூட்டறிக்கு வரக் கூடாது. அங்கேயும் இப்படித் தான் படிப்பிக் கிறேன் எனக் கூறிய நிகழ்வும் நடந்தது.

ஆசிரிய வளம் எல்லாப் பாடசாலைகளிலும் எல்லாப் பிர தேசங்களிலும் சிறப்பாக இருக்கவில்லை. இன்றும் அந்த நிலைமை உள்ளது.

அதனாலும் மாணவர்கள் குறைநிரப்பும் கல்வியைப் பெற ரியூசனுக்குப் போகின்றனர். ஆரம்ப காலங்களில் கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் போன்ற முக்கியத்தும்வம் கூடிய பாடங்களுக்கு மட்டுமே ரியூசன் சென்றனர்.

பின்னாளில் ரியூசன் நிலையங்கள் மாணவர்களைக் கட் டாயப்படுத்தி எல்லாப் பாடங்களையும் எடுக்க வைத்துப் பணம் பார்க்கத் தொடங்கினார்கள். விதி விலக்காக மனித நேயத்துடன் நடந்த ரியூசன் நிலையங்களும் இருந்தன.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைய தவறும் மாணவர்கள் அடுத்த வருடம் பாடசாலை போகாமல் Day class எனப்பட்ட முறைமையின் கீழ் யாழ் நகர ரியூசன் நிலையங்கள்

இருந்தன. கால மாற்றம் Day calls முறையில் இராட்சத நிறுவனங்களாக இயங்கியவை வற்றிப் போய் விட்டன.

Paper class எனப்பட்ட முறையின் கீழ் கடந்த கால் பரீட்சை வினாத்தாளுக்கு விடைகள் எழுதிப் பழக்கிய முறைமையும் இருந்தது.

இதுவும் தற்போது சுருங்கி விட்டது.

1980 களில் போர் மேகங்கள் சூழத் தொடங்கியது. 1983 ஜூலை 23 திருநெல்வேலி தபால் பெட்டிச் சந்தியில் அடித்த சுனாமி ரியூசன்களின் திசையையும் மாற்றத் தொடங்கியது.

பாதுகாப்பு அச்சம் காரணமாக நகரப் பிரதேசங்களை நாடும் வழக்கம் குறையத் தொடங்கியது.

இதனால் புறநகர, கிராமப் புறங்களில் ரியூசன் துறை மிக வேகமாக வளர்ந்தது. பெரிய கடை முதலாளிகள் கௌரவமாகப் பார்க்கப்பட்டது போல பெரிய ரியூசன் நிலைய அதிபர்களும் கௌரவமாகப் பார்க்கப்பட்டனர்.

பாடசாலை ஆசிரியர்கள் தான் இவ்வாறு புதியதொரு தொழிலதிபர்களாகவும், பணக்கார வர்க்கமாகவும் உருவாகினார்கள்.

உயர்தர வகுப்புகளில் ரியூசன் நடத்திய ஒரு சில பிரபல ஆசிரியர்கள் பாடக் குறிப்புகளை எழுதக் கொடுக்காது சிறு புத்தகங்களாக அடித்து விற்று பணம் பண்ணிக் கொண்டனர். ரியூட், கடந்த கால வினாத் தாள்கள், மாதிரி வினாத்தாள்கள்

எனத் தனியாக அடித்து பணம் பார்த்த சில ரியூட்டறிகளும் இருந்தன. மனிதாபிமான அடிப்படையில் கட்டணம் வசூலித்த நிர்வாகிகளும் இருந்தார்கள்.

திறமைமிக்க ஏழை மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி வழங்கி அவர்களை கல்வி மான்களாக, பெரும் பதவி வகிப் போராக மாற்றிய புண்ணியவான்களும் இருந்தார்கள். இன்றும் இருக்கிறார்கள். ரியூட்டறிகள் ஆரம்ப காலங்களில் தடிகளால் அமைக்கப்பட்டு கிடுகுகளால் வேயப்பட்ட கொட்டில்களாகவே இருந்தன.

சீமெந்துக் கட்டிடம் மிகக் குறைவாகவே இருந்தன. காலப் போக்கில் வருமானம் பெருகப் பெருக சீமெந்தினால் அமைக் கப்பட்ட நிரந்தரக் கட்டிடங்கள் உருவாகின. கிராமப் புறங்களில் தான் இந்த நிலைமை இருந்தது.

ஆனால் நகரப் புறங்களில் பெருமளவுக்கு வாடகைக் கட்டி டங்களில் இயங்கின.

பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த வெளி வாரிப் பட்டப்படிப்பை நடத்தியது. யாழ். மத்திய கல்லூரிக்கு அரு காமையிலிருந்த ரிம்மர் ஹோல் (Timer hall) வெளிவாரிப் பட்டப் படிப்புக்கு பிரபலமான கல்லூரியாக இருந்தது.

யாழ். விக்ரோறியா வீதியிலிருந்த மாஸ்ரர் இன்ஸ்ரிரியூட் உயர்தர வகுப்பில் விஞ்ஞானக் கல்விக்குப் பிரபலமாயிருந்தது. யாழ். ஆஸ்ப்பத்திரி வீதியிலிருந்த பொன்ட் இன்ஸ் ரிரியூற் லண்டன் ICMA கற்றை நெறிக்கு பிரபலமாயிருந்தது.

இக் கற்கை நெறிக்கு கொழும்பிலிருந்த விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்து கற்பித்துவிட்டு மாலையில் திரும்பவும் விமானம் மூலம் கொழும்பு சென்ற விரிவுரையாளர்களும் இருந்தார்கள்.

யாழ்.பிரதான வீதியில் கன்ரேபியா எனும் ரியூசன் சென்ரர் இருந்தது. இது ஆங்கிலக் கற்கை நெறிகளுக்கும் லண்டன் CIMA என மாற்றப்பட்டது.) கற்றை நெறிக்கும் பிரபலமாக இருந்தது.

ரியூசன் நிலையங்கள் வாணி விழாவை தவறாமல் நடத்தி வந்தார்கள். கிறீஸ்தவர்கள் அதிகம் வாழும் பிரதேசங்களில் ஒளி விழாவையும் நடத்தினார்கள்.

சில ரியூசன் நிலையங்கள் மாணவ முதல்வர்கள் முறை, இல்ல விளையாட்டுப் போட்டிகள், வருடாந்த ஒன்று கூடல்கள், கல்விச் சுற்றுலாக்கள் எனப் பாடசாலைக்குச் சமனாக புறப்பாட விதானச் செயற்பாடுகளை நடத்தினார்கள்.

படித்து விட்டு வேலையற்றிருந்த இளைஞர்கள் சிலர் ரியூசன் நிலையங்களை இராட்சத நிறுவனங்களாக கட்டியெழுப்பினார் கள்.

பட்டம் பெற்றுவிட்டு வேலையற்றிருந்த இளைஞர்களும் வரு வாய் தேடி ரியூட்டறிகளை ஆரம்பித்தார்கள்.

பல்கலைக்கழக மாணவர்களாயிருந்த சிலர் ரியூசன் பல் கலைக்கழக மாணவர்களாயிருந்த சிலர் ரியூசன் கொடுத்து அதிக வருவாய் ஈட்டினார்கள். பல்கலைக்கழக விரிவுரையா

ளர்கள், பேராசிரியர்களை விட அதிக விலை கூடிய மோட்டர் சைக்கிள்களை ஓடித் திரிந்தார்கள்.

பாடசாலையில் தன்னிடம் கற்றும் மாணவன் ரியூட்டறியிலும் வந்து தன்னிடம் படித்தால்தான் பாடசாலை தவணைப் பரீட் சையில் கவனிப்பேன் என வெருட்டிய சம்பங்களும் நடந்தன.

ஓகோவென நடந்த ரியூட்டறிகளில் சிரேஷ்ட ஆசிரியர்கள் சிலர் நிர்வாகத்துடன் முரண்பட்டு புதிய ரியூட்டறிகளை ஆரம் பித்ததும் நிகழ்ந்தது. வெளி மாவட்ட மாணவர்களுக்கு விடுதி வசதி அளித்து கல்விச் சேவை செய்த சில ரியூட்டறிகளும் இருந்தன.

1980 களில் பேராட்ட இயக்கங்கள் வளரத் தொடங்கிய காலங் களில் சில ரியூட்டறிகள் குறித்த ஒரு இயக்கத்தின் கோட்டை போலவும் பிரச்சாரப் பீரங்கியாகவும் செயற்பட்ட நிகழ்வுகளும் நடந்தது.

இயக்கத்துக்கு சேருமாறு மாணவர்களை தூண்டி அனுப்பிய சில நிர்வாகிகளும் இருந்தார்கள். இயக்கங்கள் உருவாகி ஒவ்வொரு இயக்கங்களும் ஒவ்வொரு துறைக்கும் வரி (Tax) வசூலித்த காலங்களில் ரியூசன் முதலாளிகளும் வரி செலுத் தினார்கள். போராட்ட காலங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப் பட்ட போது பாடசாலைக்கு ஹர்த்தால் ஆனால் மாலை நேரம் ரியூசன் நடந்தது. ஆனால் பின் நாள்களில் ரியூசனும் ஹர்த்தால் காரணமாக நடைபெறவில்லை.

போர் மேகங்கள் சூழ்ந்து இடம்பெயர்வுகள் வந்த காலங்

களில் ரியூட்டறிகளும் பாதிப்பைச் சந்தித்தன.

வலிகாமம் வடக்கின் பெரிய பாடசாலைகளில் ஒன்றாகிய வயாவிளான் மகாவித்தியாலயம் இடம்பெயர்ந்து உரும்பிரா யில் ஒரு தனியார் கல்வி நிலையத்தில் இயங்கி வந்தது.

1989 ஆம் ஆண்டிற்கு முன்பாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை முக்கியத்துமிக்க பரீட்சையாக இருக்கவில்லை. பின் னைய காலத்தில் தான் இந்தப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை தயார்ப்படுத்தும் ரியூசன் சென்ரர்கள் விஸ்வ ரூபம் எடுத்தன.

இதற்குப் படிப்பித்த பிரபல ஆசிரியர்கள் மாதந்தோறும் இலட்சக் கணக்கில் பணம் உழைக்கும் நிலை உருவாகியது.

O/L day calls முறைமையும் பெருமளவுக்கு ஒழிந்து போனது.

1983, 1985, 1990, 1995, 2006 என போர் தீவிரம் பெற்ற ஆண்டுகளில் இடம்பெயர்வுகள் ஏற்பட்ட போது தனியார் கல்வி நிலைய முன்னணி ஆசிரியர்களும் வெளிநாடுகளுக்கும் சென்றார்கள். இதனால் அவர்களிடம் உதவியாளர்களாக நின்ற சிலர் பழைய பெயருடன் ரியூட்டறிகளை ஆரம்பித்துப் பெரும் தொழிலதிபர்கள் ஆனார்கள். ரியூசனில் ஓரிரு பாடங்களைப் படிப்பது என்ற நிலை மாறியது.

முன்பள்ளி வகுப்புக்கும் ரியூசன், ஆரம்ப வகுப்புக்கும் ரியூ சன் இடை நிலைக் கல்விக்கும் ரியூசன் என ரியூசன் ஓர் பாச னாகி விட்டது.

உயர்தர வகுப்பில் கணக்கியல் என்ற ஒரு பாடம் இருக்கிறது. எமது காலத்தில் ஓர் ஆசிரியரிடமே இரண்டு வருடமும் பயபக்தி யாக படித்து பரீட்சை எழுதினார்கள்.

தற்போதே காசேடு பேரேடு அந்த ஆசிரியர் திறமையாகப் படிப்பிப்பாராம் எனப் போவார்கள், பங்குடமைக் கணக்கிற்கு ஓர் ஆசிரியர், கம்பனிக் கணக்கிற்கு ஓர் ஆசிரியர் என சாம் பாறுக் கல்வியைப் பெற்று இறுதியாகப் பரீட்சை எழுதுகின் றார்கள்.


இதுபோலத்தான்ஏனையபாடங்களுக்கும்செல்கின்றார்கள். இதுவும் ஓர் கால மாற்றம் தான்.

வெளிவாரியாக பட்டப் படிப்பை, பட்டப்பின் படிப்பை, முது கலை மாணிப் படிப்பை வழங்கும் நிறுவனங்களும் அதிகம் உரு வாகி விட்டன. இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குவால் அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகங் களும் பட்டக் கற்கை நெறிகளை நாடெங்கும் நடத்துகின்றன. கணனிக் கல்வியை வழங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் 1990 களில் மூலை முடுக்கெங்கும் முளைத்தன. பின்னாளில் தக வல் தொழில்நுட்கக் கல்வி, கணனி வலைப்பின்னல் ஊடான கல்வி என தனியார் கல்வி நிறுவனங்களின் இயலளவு அதி கரித்துச் சென்றது.

ஆரம்ப காலங்களில் செலவு குறைந்த தனியார் கல்வி நிறுவன முலைமை பின்னாளில் அதிக செலவுள்ளதாகவும் பல்லாயிரம் பணச் செலவுள்ளதாகவும் மாறியது.

ஆசிரியர் மாணவர் உறவு நிலையிலும் ஆரம்ப காலங்களில் இருந்த கீழ்படிவு காலம் செல்லச் செல்ல குறைந்து சென்று விட்டது.

ரியூசன் செல்லாத மாணவர்களே இல்லை எனும் காலம் வந்துவிட்டது. ரியூசன் குறித்த நினைவலைகள் மிகமிக நீள மனவை. பட்டறிவுக்கு அகப்பட்டவையும், கேட்டறிவுக்கு கிடைத் தவையும் இங்கு எழுத்தாவணமாகியுள்ளது.




# போர்க்காலமும் மருத்துவமும்

போர் யுகம் ஒன்று முடிந்து விட்டது. போர்க் காலத்தில் மருத்துவத்துறை குறித்தான பதிவையும் முன் வையுங்கள் எனக் கூறி பெறுமதியான தகவல்களைத் தந்த தினக்குரல் வாசகர்களான ஓய்வுநிலை மருத்துவ அதிகாரிகளுக்கு நன்றி கள்.

யாழ்ப்பாண நினைவுகளின் பதிவான இன்றைய பத்தியில் எந்தத் தரப்பையும் குறைகாணும் நோக்கம் எனக்கில்லை. எமது வாழ்வை சீரழித்த போர் மருத்துவத்துறையையும் எவ் வாறு சீரழித்தது என ஆவணப்படுத்துவதே இதன் நோக்க மாகும்.

யாழ்ப்பாணத்தில் பிறந்த ஆயிரக்கணக்கானோர் மருத்துவர் களாக படிப்பை முடித்து யாழ்.குடாநாடு மட்டுமன்றி, முழுநாட்டி லும், உலகளாவிய ரீதியிலும் சேவை புரிகின்றனர்.

1980 களில் யுத்தம் ஆரம்பித்த போது மருத்துவத்துறை மீதான மக்களின் தேவையும் தங்கியிருத்தலும் பாரிய அளவில் அதிகரித்தது. அதேவேளை யுத்தத்தின் தீவிரம் மருத்துவத் துறையை மிக மோசமாகப் பாதித்தது.

மருத்துவ மனைகளுக்கு மருந்து, மின்சாரம், தளபாடவசதி கள், கட்டிட விரிவாக்கம் என்பவை கிடைப்பதில் இடர்ப்பாடுகள், போர் அச்சுறுத்தல் காரணமாக மருத்துவர்கள், நிபுணத்து வமருத்துவர்கள் வெளியேறினார்கள் எனப் பல விடயங்கள் பதிவிற்குரியவை.

1980 களின் ஆரம்பத்தில் யுத்தத்தின் வரவு மெல்ல மெல்ல ஆரம்பித்தது. அக்காலத்தில் யாழ்.குடாநாட்டில் யாழ்.போதனா வைத்தியசாலை, மாவட்ட வைத்திய சாலைகள்,கிராமிய வைத் தியசாலைகள், சுற்றயல்கூறு வைத்தியசாலைகள் எனப் பல வைத்தியசாலைகள் போதிய மருத்துவர்களைக் கொண்டு சிறப் பாக இயங்கின. மூளாயில் கூட்டுறவு வைத்தியசாலை மிகச் சிறப் பாக இயங்கி நாடுமுழுவதும் பெயர் பெற்றிருந்தது.

பிரித்தானியா காங்கேசன்துறை மயிலிட்டியில் அமைத்த காசநோய் (TB) வைத்தியசாலையும் பெயர் பெற்றிருந்தது. மானிப்பாய் மெமோறியல் வைத்தியசாலை, குருநகரில் திருச் சிலுவை சுகநல நிலையம் (Holy Cross), இணுவிலில் மைக்லி யோட் வைத்தியசாலை, யாழ்.பிரதான வீதியில் பிலிப் நேசிங் ஹோம் என நாலா திசைகளிலும் தனியார் வைத்திய சாலைகள் இயங்கின. வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வசதி படைத்தோர் இத்தனியார் வைத்தியசாலைகளை நாடிவருமள வுக்கு இவற் றின் மதிப்பு உயர்வாக இருந்தது. நிபுணத்துவ வைத்தியர்களால்

அக்காலத்தில் குடா.நாடு நிரம்பி வழிந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் 1980 களின் ஆரம் பத்தில் மருத்துவ பீடம் தனியான துறையாக ஆரம்பிக் கப்பட்டது. யாழ்ப்பாணம் உள்ளிட்ட இலங்கை முழுவதற்குமாக இம்மருத் துவ பீடம் மருத்துவர்களை உருவாக்கிக் கொடுத்தது. ஆயுர்வே தம், சித்த மருத்துவத்திலும், ஏனைய மருத்துவத்திலும் பெயர் பெற்ற விற்பன்னர்கள் இருந்தார்கள். பரம்பரை மருத்துவத் திற்கு பேர்போன கிராமங்களும் குடும்பங்களும் இருந்தன.

போரின் வரவு மருத்துவத்துறையின் சகல பாகங்களையும் வேகமாக ஆட்டங்காணச் செய்தது. அதேவேளை, பொது மக்க ளுக்கான சேவைகளை வழங்குவதிலும் இத்துறை மாபெரும் சவால்களை எதிர்நோக்கியது. போரின் விளைவால் இடம் பெயர்வுகளும், உயர்பாதுகாப்பு வலயங்களும் உருவாகின.

இதனால், வலிகாமம் வடக்கிலுள்ள வைத்தியசாலைகள் யாவும் முற்றாகச் செயலிழந்தன. இதேபோல தீவகத்தின் வைத்தியசாலைகள் 1990 ஜூன் மாதத்தின் பின்னர் செயலிழந்த நிலை எனச் சொல்லுமளவுக்கு நிலை உருவாகியது.

பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்த காலத்தில்தான் மருத்துவத்துறைக்கான அடித்தளங்கள் உருவாகின. யாழ் குடாநாட்டிலும் பெருமள வுக்கு அக்காலத்தில் தான் உருவாகின. அவ்வாறு உருவாகிய பிரதேச, கிராமிய வைத்தியசாலைகள் 1980 களின் பின்னர் பின்னடைவைச் சந்திக்கும் நிலை தோன் றியது.

நோயாளிகளுக்கான போக்குவரத்து நிலைமைகளும்

பாதிக்கப்பட்டன. போருக்கு முன்னர் ரக்சி, கார் என்பவற்றில் நோயாளிகளை வைத்தியசாலைக்கு அனுமதிக்கும் நிலை இருந்தது. மேலதிக சிகிச்சைக்காக தென்பகுதிக்கு அம்பி யூலன்ஸ் மூலம் செல்லும் நிலையும் இருந்தது.

1990 ஜூனில் யாழ்., வவுனியா தரைவழிப்பாதை தடைப்பட்ட போது கொழும்பில் உயர் மருத்துவச் சேவை பெறுவதற்கான போக்குவரத்துப் பாதையும் தடைப்பட்டது. இக்காலத்தில் I C R C எனப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் மருத்துவச் சேவைகள் மிக உயர்வாக மக்களுக்கு வழங்கப்பட்டது.

1971 ஏப்ரல் 05 இல் ஜே.வி.பி. ஆயுதப் போராட்டத்தின் போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு (I C R C) இலங்கைக்கு அர சாங்கத்தால் முதல்முதலாக வரவழைக்கப்பட்டிருந்தது. இயல்பு நிலை தோன்றியதும் I C R C வெளியேறியது. 1987 ஜூலை மாதத் தின் பின்னரும் ஜே.வி.பி. இயக்கத்தின் ஆயுதப் போராட் டம் மீள ஆரம்பித்தது. இதனால் 1989 இல் I C R C யின் வரவு எமது நாட்டில் மீளவும் நிகழ்ந்தது.

1990 ஜூனில் இரண்டாம் ஈழப்போர் ஆரம்பித்த போதும் பின் னரான காலங்களிலும் வடக்கு - கிழக்கு உள்ளிட்ட இலங்கை முழுவதும் சிறப்பான சேவைகளை வழங்கிய I C R C யை பொது மக்கள் என்றுமே மறக்கமுடியாது. யாழ்குடாநாட்டிலும் பல விதங்களிலும் மிகச் சிறப்பான சேவையை பொது மக்க ளுக்கு வழங்கியது.

மருத்துவத்துறையின் வெற்றிடங்கள் பலவற்றை நிரப்ப I C R C நிறையவே முயற்சிகளைச் செய்தது. யாழ்குடா நாட்டிலிருந்து

வெளியிடப் பயணங்கள் 1990 ஜூன் 15 ஆம் திகதிக்குப் பின்பாக கேரதீவு சங்குப்பிட்டித்துறை, கொம்படி ஊரியான், கிளாலி கடல் நீரேரி ஊடான போக்குவரத்துகளாக இடம்பெற்றன. இவை விடுதலைப்புலிகளின் ஆளுகை காலத்திலேயே நடந்தன. 1996 ஆம் மே மாதம் முழு யாழ்.குடாநாடும் அரசாங்கப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்த போது கடல், விமானப் பயணங்கள் தொடங்கின. 1997 ஜனவரி மாதம் முதல் I C R C யினால் வாடகைக் கமர்த்தப்பட்ட கப்பல் நோயாளர் கப்பல் சேவை ஆரம்பிக்கப் பட்டது. செவ்வாய்க்கிழமைகளில் திருகோணமலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி நோயாளர் கப்பல் சேவை நடை பெறும். புதன்கிழமைகளில் காங்கேசன்துறையிலிருந்து திரு கோணமலை நோக்கி நோயாளர் கப்பல் சேவை நடக்கும். கப்ப லில் நோயாளர் ஒருவரும் அவருடன் வழித்துணையாக இன்னு மொருவரும் பயணம் செல்ல அனுமதிக்கப்பட்டனர். சிறியரக கப்பல் ஒன்றில் பெரிய சிவப்பு குருசு தாங்கிய I C R C கொடி கட்டப்பட்டிருக்கும்.

இக்கப்பலில் செல்லும் நோயளர்களில் பலர் புற்று நோயாளர் களாகத் தான் இருந்தார்கள். இக்கப்பல் சேவை 2002 ஏப்ரலில் 08 இல் முகமாலை ஊடான தரைவழிப்பாதை திறக்கப் பட்ட சில மாதம் பின்பான காலப்பகுதிவரை நடைபெற்றது. 1990 ஜூன் 15 இல் இரண்டாம் ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்ட போது யாழ். கோட்டை இராணுவ முகாம் பகுதியில் கடுமையான மோதல்கள் நடைபெற்றதால் யாழ்.போதனா வைத்தியசாலை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. பாதுகாப்புக் காரணங்களுக்காக மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலை வளாகத்தில் இயங்கியது. 1990 செப்ரெம்பர் 26 ஆம் நாளன்று யாழ். கோட்டை இராணுவத்

தினர் மண்டைதீவுக்கு கடல் நீரேரியூடாக பின் வாங்கினார்கள். இதனால் அக்டோபர் மாதம் முதல் யாழ்.போதனாவைத்திய சாலை தனது சொந்த இடத்திற்கு மீளவும் வந்தது.

அப்போது விமானக் குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்புப் பெறும் நோக்குடன் அரசாங்கம் யாழ்.போதனாவைத்திய சாலை யிலிருந்து 500 மீற்றர் தூரம் வரையான பகுதி பாதுகாப்பு வலய மாக அரசாங்கத்தால் பிரகடனம் செய்தது.

I C R C இன் பொறுப்பில் யாழ்.போதனாவைத்தியசாலை வளாகப் பாதுகாப்பு கொண்டுவரப்பட்டது. போதனாவைத்திய சாலையின் கூரை ஓடுகள், சீற்றுகள் மீது I C R C இன் சிவப்பு செஞ்சிலுவை அடையாளம் இடப்பட்டது. இரவில் அதனை வானிலிருந்து பார்க்கக் கூடிய வகையில் மின்சாரவெளிச்சம் காட்டப்பட்டிருந்தது. யாழ்போதனாவைத்தியசாலையின் வளா கத்திலிருந்து ஒருகிலோ மீற்றர் தூரத்தில் இரவு வேளையில் மின்சாரத் தூணில் 4 ரியூப் பல்புகள் போடப்பட்டு அடையாள வெளிச்சம் காட்டப்பட்டது. மின்சாரம் இல்லாத யாழ்ப்பாணத்தில் I C R C அமைத்த மின்சார பல்புகளின் வெளிச்சத்தில் கல்வி கற்பதை வாடிக்கையாகக் கொண்டிருந்த சில மாணவர்களும் இருந்தார்கள். மண்ணெண்ணெய் 200, 300 ரூபா வரை ஒரு லீற் றர் விலைப்பட்டகாலத்தில் ஏழ்மையிலும் கல்வி பெற இந்த வெளிச்சம் உதவியது.

போதனாவைத்தியசாலைக்காக நிர்ணயிக்கப்பட்ட பாது காப்பு வலயப் பிரதேசத்தில் சொந்த வீடுகளை வைத்திருந்தவர் கள் தமது நிலை பாதுகாப்பானதென கருதினார்கள். இப்பிர தேசத்தில் வீடுகளை வாடகைக்கு பெறுவதற்கு மக்கள் போட்டி

யிட்டார்கள்.

I C R C ஆல் 2000 ஆம் ஆண்டு முதல் 2002 மே மாதம் வரையில் சிற்றி ஒவ் ரிங்கோ (City of Trinco) எனும் பயணிகள் கப்பல் சேவைக்கு திருகோணமலை முதல் காங்கேசன்துறை வரை பாதுகாப்பு வழித்துணை வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

மாதத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் நோயாளர்களை ஏற்றிச் செல்ல மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கப்பல் சேவையை அரசாங்கம் வழங்கியது. கப்பலிலேறி திருகோணமலையில் இறங்கி கொழும்புக்குச் சென்று சிகிச்சை டபெறப்பட்டது.

வைத்தியசாலை வளாகத்தில் அம்பியூலன்சில் ஏறி பருத்தித் துறைக்குச் சென்று நோயாளரும் அவருடன் கூடச் சென்ற உதவியாளும் கப்பலில் பயணிக்க விடுதலைப் புலிகளின் வழமையான பாஸ் (Pass) முறைக்கு உட்பட்டே பயணத்தை மேற் கொண்டனர்.

பிரதேச மாவட்ட வைத்தியசாலைகளை விடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர் சிகிச்சை நாடுவது அதிகரித்தது. அரசாங்கம் மின்பிறப்பாக்கிகளை கப்பல் மூலம் அனுப்பியது. கப்பல் மூலமாக டீசல், பெற்றோல் என்பன யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரப்பட்டது. மின் பிறப்பாக்கல் மூலம் மின்சாரம் பெறப்பட்டது.

டீசல், பெற்றோல் எடுத்து வருவது தாமதித்தால் மின்சார பாவனையில் தடங்கல் ஏற்பட்டது. வைத்தியசாலைக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட நிலையை வைத்தியசாலைக் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட பெற்றோல் மருத்துவர்களின் மோட்டார்

சைக்கிள் பாவனைக்கென குறிப்பிட்டளவில் விநியோகிக்கப் பட்டது. தென்பகுதியில் அப்போது லீற்றர் ஒன்று முப்பது ரூபா விற்றபோது அது மூவாயிரம் ரூபாவுக்கு யாழ்ப்பாணம் சந்தையில் விற்கப்பட்டது.

மருத்துவத்துறை சார்ந்த உத்தியோகத்தர் ஊழியர்களுக் கென சவர்க்காரம், மண்ணெண்ணெய் என்பன குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை வழங்கப்பட்டது. அக்காலப்பகுதியில் ஒட்சிசன் தட்டுப்பாடு திறமையான மருத்துவச் சேவைக்கு பெரும் சவாலாக இருந்தது.

போதனா வைத்தியசாலையில் கடமையாற்று வோரின் போக்குவரத்திற்கென மினிபஸ் சேவைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

பருத்தித்துறை, கொடிகாமம் வரையென இவ்வாறு 4 சேவைகள் யாழ்.போதனாவைத்தியசாலையில் தொடர்ந்து 13 வருடங்கள் இருந்து அரும் பெரும் சேவையாற்றிய பணிப்பாளர் நவமலர் கனகரத்தினம் அர்ப்பணிப்புமிக்க சேவை பதிவிற்குரி யது.சவால்மிக்கபோர்க்காலத்தில்யாழ்.பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப் பாளராக கடமையாற்றுவது என்பது இலேசனதல்ல.

போர் காலத்தில் மருத்துவர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட போது போலி மருத்துவர்கள் உருவாகினார்கள். மருத்துவத் துறையின் ஏற்படுத்தியதும் குறிப்பிடத்தக்கதான காலத்தில் காசோலை மூலம் பெற்ற மாற்ற வழியின்றிக் கடை கடையாக துன்பங்களும் நடந்தன. வங்கிகள் கையிருப்புக்கு பாரிய பற்

றாக்குறையை மையே இதற்கான காரணமாகும்.

1995 செப்டெம்பரில் பலாலி முகாமிலிருந்து இடிமுழக்கம் இராணுவ நடவடிக்கை தொடங்கியது. இதுபின் சூரியக்கதிராக மாறியது. 1995 அக்டோபர் 30 ஆம் நாள் கந்தஷ்டி விரதம் முடிந்த கடைசி நாள்.மாலை வேளையில் ஒலிபெருக்கி மூலம் விடுதலைப் புலிகள் யாழ்.நகர பிரதேசத்தில் அறிவிப்பு ஒன்றை விடுத்தார்கள். இன்று இரவுக்குள் யாழ்ப்பாணம், வலிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த சகல மக்களும் நாவற்குழி ஊடாக தென்மராட்சிப் பிரதேசத்திற்கு வெளியேறிவிட வேண்டுமென அறிவித்தார்கள்.

இவ் அறிவிப்பு யாழ்ப்பாண மக்களிடையே பெரும் திகைப்பை ஏற்படுத்தியது. சிறு கிளை ஆறுகள் திரண்டு ஆறு ஒன்று உருவாகி ஆறுகள் பல ஒன்றாகிபேராறு உருவாவது போல வீதிகள் தோறும் சனத்திரள் திரண்டது. யாழ்.போதனா வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்ற நோயாளிகளின் நிலையும் அவதிக்குள்ளனது. பொதுப் போக்குவரத்து பஸ்கள் இல்லாத அக்காலத்தில் சைக்கிள் மூலம் தான் சகல பயணமும் நிகழ்ந்தது. கார், ரக்சி, மினிபஸ் பிடிப்பதென்றாலும் பெரும் செலவு.

யாழ் போதனா வைத்தியசாலையில் நோயாளியுடன் தங்கி நின்றவர்கள் நோயாளியைப் பார்ப்பதா அல்லது தனது குடும்பத்தைப் பார்ப்பதா எனத் திகைத்தனர்.

இயலுமான நோயாளிகளைத் துண்டு வெட்டி வீட்டுக்குக் கூட்டிச் சென்றார்கள். குடும்பமாக இடம் பெயரும் முனைப்புடன் வைத்தியசாலை செல்லாமல் நோயாளிகளை கைவிட்டு இடம்

பெயர்ந்தவர்களும் இருந்தார்கள்.

மகப்பேற்றுக்கு மருத்துவமனையில் அனுமதித்த மனைவியைப் பார்ப்பதா? வீட்டிலிருந்த குஞ்சு குருமன் பிள்ளைகளைப் பார்ப்பதா என கணவன் தடுமாறினான் பெற்ற தந்தை அல்லது தாய் இயலாமல் நோயாளர் கட்டிலில் படுத்திருக்க அவர்களைப் பார்ப்பதா அல்லது தனது குடும்பத்தைப் பார்ப்பதா என்ற தடுமாற்ற நிலை.

மருத்துவர்களும் மருத்துவத் துறைசார் ஊழியர்களும் தத்தமது குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டுமே என்ற ஆதங்கம், பயம், பதகளிப்பு, எதிர்காலம் குறித்த பேரச்சம் என்ற மனநிலை. ஊர் ஓடினால் சேர்ந்து ஓடு என்பார்களே. அது போல ஓட வேண்டிய நிலையில் பலரும் ஓடினார்கள்.

யாழ் போதனா வைத்திய சாலைப் பிரதேசம் தாக்குதலற்ற பாதுகாப்பு வலயம். ஆயினும், ஊரோடு சேர்ந்து பலரும் ஓடிவிட, விடுதிகளில்இருந்த நோயாளர்கள் அதிதீவிர சிகிச்சைப் பிரிவிலிருந்த நோயாளர்களெனப் பலரும் திக்கற்ற நிலை ஒன்றுக்குள் தள்ளப்பட்டனர்.

இந்த நெருக்கடி நிலையால் நோயாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த விபரங்கள் பட்டியலிட ஆரம்பித்தால் இந்தப் பத்தியின் திசை நீண்டுவிடும். யாழ்.குடாநாட்டில் பெரிய யாழ்ப்பாணம் (யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுகள் ) வலிகாமப் பிரதேசம் என்பவற்றின் ஆதார, மாவட்ட, கிராமிய வைத்தியசாலைகள் யாவுமே இடம்பெயர்ந்தன. ஆயினும் இப்பிரதேசங்களில் இடம்பெயராமல் பிடிவாதம்

பிடித்த நூறு குடும்பங்கள் வரையிலிருந்தனர்.

மிகுதி 6 இலட்சம் மக்களும் இடம்பெயர்ந்தனர். யாழ்போதனா வைத்திய சாலையும் அனுமதி பெற்று இடம் பெயர்ந்தது. பருத்தித்துறை மந்திகையிலுள்ள ஆதார வைத்திய சாலை யுடன் சேர்ந்து இயங்கியது. யாழ்ப்பாணத்தின் 7 பிரதேச செயலகப் பிரிவு மக்களும் தென்மராட்சி, வடமராட்சி பிரதேசங்க ளுக்கு இடம்பெயர்ந்தனர்.

இம்மக்களில் ஓரிரு இலட்சம் மக்கள் கிளாலிப் படகுத் துறை ஊடாக வன்னிப் பிரதேசத்திற்கும் இடம் பெயர்ந்தனர்.

தென்மராட்சி, வடமராட்சிப் பிரதேசங்களிலிருந்த வைத்திய சாலைகளுடன் யாழ்ப்பாணத்தின் இடம்பெயர்ந்த வைத்திய சாலைகள் இணைந்து கொண்டன. 1995 அக்டோபர் மாபெரும் இடப்பெயர்வுடன் யாழ்ப்பாணத்தின் மருத்துவத் துறைசார் உத்தியோகத்தர்களில் கணிசமானோர் வவுனியாவுக்கும் நாட்டின் தென்பகுதிக்கும் இடம்பெயர்ந்தனர். ஒழுங்கமைக்கப் பட்ட அடிப்படைத் தேவைகளுடன் வாழ்ந்த பெரும் மக்கள் கூட்டம் மட்டுப்படுத்தப்பட்ட நிலப்பரப்புக்குள் மிகக் குறைந்த வசதிகளு டன் வாழ வேண்டி வந்தது.

இவர்களுக்கு மருத்துவச் சேவைகளை வழங்குவதில் மருத்துவத்துறை மாபெரும் சவால்களை எதிர்நோக்கியது. ஒழுங்கமைக்கப்பட்ட நிலையில் இயங்கிய தனியார் மருத்து வமனைகள் திக்கற்ற நிலைக்குத் தள்ளப்பட்டன. இதன் மொத்த சுமையும் பொது மக்கள் மீதே தள்ளப்பட்டது.

1996 மே மாதத்தில் அரசாங்கப் படைகளால் யாழ்.குடாநாடு

முழுமையாக கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த வைத்தியசாலைகள் யாவும் தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பின. போரினால் சேதங்களை எதிர்நோக்கிய வைத்தியசாலைகள் யாவும் மீளவும் புனரமைப்புச் செய்யப்பட்டன. குறிப்பாக தீவகப் பிரதேசத்தின் மக்கள் மீளச் செல்லவும் பெரும்பாலான நிலப்பரப்புகளில் மீண்டும் குடியமரும் நிலையும் உருவானது. ஆனாலும் மீளக்கு டியமர்ந்தோர் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது.

அப்பிரதேசங்களில் இயங்காதிருந்த வைத்தியசாலைகள் மீளவும் இயங்குவதற்குரிய அடிப்படைகள் யாவும் உருவாக்கப்பட்டன. 1990 ஜூன் 16 இல் போர் ஆரம்பிக்கப்பட்டு தரைப்பாதை மூடப்பட்ட போது நோயார்களுக்குரிய இரத்தத்தை இங்கேயே பெற வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டது.இரத்தம் பெற்றுக் கொடுத்து உழைக்க முற்பட்ட புறோக்கர் தொழிலை ஒழித்து இரத்த தானம் செய்யும் உணர்வுள்ள மக்கள் சமூகத்தை உருவாக்குவதற்கு கடுமையாக உழைத்த மருத்துவ சமூகத்தை பாராட்டத் தான் வேண்டும்.

போர் காரணமாக காயப்பட்டு இரத்தம் ஏற்ற வேண்டிய அவசர தருணங்களில் "இரத்தம் தேவை" எனப் பத்திரிகைகளில் செய்தி வரும். உடனேயே ஓடிச் சென்று இரத்தம் கொடுத்த கொடையாளர்களின் எண்ணிக்கை பெருகிச் சென்றது. நடமாடும் இரத்த தான முகாம்களும் ஏற்பாடு செய்யப்பட்டன. போர்க் காலத்தில் சட்டமருத்துவ அதிகாரிகளின் சேவைகளைப் பெறுவதிலும் பல கஷ்டங்களிருந்தன.

1990 ஜூனுக்குப் பிற்பட்ட காலங்களில் யாழ்.மாவட்டத்தின்

அரச வைத்தியசாலைகளுக்கான மருந்துகள் காலாண்டு அடிப்படையில் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டன. இவ்வாறு எடுத்து வருவது பிந்திப் போகும் காலங்களில் எல்லா நோயா ளர்களுக்கான சேவைகளும் சவால்களை எதிர்நோக்கின.

சிலவேளை இரண்டாம் காலாண்டு முடிவில் தான் முதலாம் காலாண்டு மருந்து வரும்.

போர்க் காலங்களில் M S F எனப்பட்ட பிரான்ஸியத் தன்னார் வத் தொண்டு நிறுவனத்தின் மருத்துவ உத்தியோகத்தர்கள் சேவை புரிந்தார்கள். இவர்கள் மருத்துவ சேவையின் இடைவெளிகளை நிரப்ப ஓரளவு முயற்சிகள் செய்தனர். M S F அமைப்பினர் வடமராட்சியில், மந்திகை மருத்துவமனையில் தான் கடமையிலிருந்தனர்.1998 ஆம் ஆண்டில் வடமராட்சி, அச்சுவேலிப் பிரதேசங்களில் வெள்ளைப்பூரான் (Socpean) எனும் ஒரு வகைப்பூரானின் கடியால் பலர் பாதிக்கப்பட்டனர்.

ஒரு சமயம் மந்திகை வைத்தியசாலையில் 500 பேர் வெள்ளைப் பூரான் கடிக்குச் சிகிச்சை பெற்றனர். வெள்ளைப் பூரான் கடியை சரியாக இனங்கண்டு சரியாகச் சிகிச்சை அளிப்பதில் மருத்துவ அதிகாரிகள் செயற்பட்ட விதம் போதா தென ஓய்வு நிலை மூத்த மருத்துவர்கள் குறைப்பட்டார்கள். இதனால், வெள்ளைப்பூரான் கடியினால் பல இறப்புகளும் ஏற் பட்டன. நாளடைவில் வெள்ளைப்பூரான் கடி கட்டுப்பாட்டுக்குள் வந்து ஏறத்தாள இல்லை எனும் நிலைக்கு வந்தது.

1996 மே மாதத்திற்குப் பின்பு இரவு நேர ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இக்காலங்களில் இரவு ஊரடங்கு

வேளையில் கையில் அரிக்கன் லாம்புடன் வெள்ளைக் கொடி தாங்கி மருத்துவமனைக்கு வர வேண்டிய தேவை ஏற்பட்டது. சிலவேளை நோய் உபாதை தாங்கி இரவு முழுவதும் காத்திருந்து அதிகாலை 4 மணிக்கு புறப்பட்டு வைத்தியசாலைக்கு வர வேண்டியும் இருந்தது.

தரைப்பாதை தடைப்பட்டமையால் கொழும்புக்கு உயர் மருத்துவ சேவைக்கு செல்வது தடைப்பட்டது. 2002 ஏப்ரல் 8 இல் முகமாலை ஊடாக பகல் நேரத்தில் தரைவழிப்பாதை திறக் கப்பட்ட போது அம்பியூலன்ஸ் வண்டி மூலம் நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக எடுத்துச் செல்வது இலகுவானதாக இருந்தது. இக்காலத்தை அண்டிய காலங்களில் மருத்துவ சேவை வசதிகள் யாழ்.குடாநாட்டிற்குள் பெருக ஆரம்பித்தது.

2002 ஏப்ரல் 8 முதல் 2006 ஓகஸ்ட் 11 வரை சரியாக 4 வருடங்கள் 4 மாதங்கள் 4 தினங்கள் தரைவழிப்பாதை திறக்கப்பட்டிருந்த போது கொழும்புக்கு நோயாளர்களை அனுப்புவதில் சிரமம் இருக்கவில்லை.

2006 ஆகஸ்ட் 11 ஆம் திகதிக்கு பிற்பட்ட நிலைமையில் தரைப்பாதை தடைப்பட மிக நீண்ட ஊரடங்குச்சட்டம் பிறப்பிக் கப்பட்டது. அப்போது பொது மக்களுக்கான மருத்துவ சேவை வழங்குவதில் நிறையவே சவால்கள் எழுந்தன.

ஆனாலும், முன்னைய காலங்களை போல நிபுணத்துவ மருத்துவ சேவை இல்லை எனச. சொல்லக் கூடிய நிலமை இருக்கவில்லை.

போர்க் காலத்தில் அங்கவீனமடைந்த நோயாளிகளுக்கு

தேவையான அவயங்களான செயற்கைப் பாதம், செயற்கைக் கை முச்சக்கர வண்டி, சக்கரநாற்காலி போன்ற பல உபகரணங்களையும் வழங்கி வரும் யாழ்.சுண்டுக்குளி ஜெய்பூர் புனர் வாழ்வு நிறுவனமும் பாராட்டுதற்குரியது. நிறுவனம் இத்துடன் இயன் மருத் சுயதொழில் உதவித் திட்டங்களையும் பொது மக்களுக்கு எதிர்காலம் குறித்தான நம்பிக்கைகளை உருவாக்கியது.


மருத்துவத்துறை எதிர்நோக்கிய துன்பங்களின் மேலே பட்டியலிட்டவற்றைத் தவிர இன்னமும் இருக்கலாம். 2009 மே மாதத்தின் பின்னர் புதிய சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டது.

2009 டிசெம்பர் மாதம் முதல் தரைவழிப் போக்குவரத்து தடையற்றுத் திறந்துள்ளது. இன்று நிபுணத்துவ மருத்துவர்களால் யாழ்.குடாநாடு நிரம்பி வழிகின்றது. தனியார் வைத்திய சாலைகள் நாலாதிசைகளிலும் உருவாகி வருகின்றன.

ஒரு பனடோலுக்கும் வழியில்லாது வாழ்ந்தவாழ்வியல் துன்பங்கள் மறக்க முடியாது. அவற்றின் நினைவுகள் கால வெள்ளத்தில் அள்ளுண்டு போகக் கூடியதென்பதற்காக செய்துள்ளேன். காலப் பெட்டகம் இதனை சேகரித்துக் கொள்ளுமென திடமாக நம்புகின்றேன். இவை போல வடக்கு கிழக்கின் ஏனைய மாவட்டங்களிலும் போர்க்கால நினைவுகள் நிறையவே இருக்கும். அவையும் அந்தந்த பிரதேச எழுத்தாளர்களால் ஆவணப்படுத்தப்பட வேண்டியவை.

**நன்றி - தினக்குரல் வார வெளியீடு**

**2013 ஓகஸ்ட் 18, 25, செப்ரெம்பர் 01**



# நல்லெண்ணையும் கைத்தொழிலின் கால மாற்றங்களும்

யாழ்ப்பாணத்தை நினைவுபடுத்தும் உணவுப் பொருட்கள் பல உள்ளன. பனை மரத்தின் மூலம் பெறப்படும் உணவுப் பொருட்கள், கறுத்தக் கொழும்பான் மாம்பழம், பலாப்பழம், நல் லெண்ணெய் என இவற்றை விசேடமாகக் கூறலாம்.

யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலுடன் பண்டைக் காலம் தொட்டு இன்று வரையும் தொடர்ந்து வரும் நல்லெண் ணெயை யும் அக் கைத்தொழிலின் கால மாற்றம் குறித்தும் இங்கு பார்ப்போம்.

எண்ணெய் வகை பல இருந்தாலும், எள் மூலம் பெறப்படும் எண்ணெயை தான் நல்லெண்ணெய் என அழைக்கின்றார்கள். யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலில் நல்லெண்ணெயின் செல் வாக்கு அபரிமிதமானது.

தாய்மைப் பேறடையும் பெண்கள், மங்கைப் பருவத்தை அடைந்த பெண்கள் பத்தியமான உணவாக நல்லெண்ணெயை யும் சேர்த்துப் பயன்படுத்துவார்கள்.பருவமடைந்த பெண் ணுக்குகத்தரிக்காய்ச்சாறு,வேப்பந்துளிர்ச்சாறு என்பவற்றுடன் நல்லெண்ணெயைக் கலந்து குடிக்கக் கொடுப்பார்கள். உடம்பு பலமடையும் என்பதே இதற்குக் காரணமாகும்.

முன்னாளில் குத்தரிசிச் சோறு பானையால் இறக்கியவுடன் சுடச் சுட நல்லெண்ணெய் விட்டுச் சாப்பிடுவது பெருமளவு வழக்கமாயிருந்தது. தோசை சுடும் போது நல்லெண்ணெய் விட்டுச் சுட்டு சாப்பிடும் வழக்கம் இன்றும் ஓரளவு தொடருகின் றது. அரிசிமாப் பிட்டு சுடச் சுட இறக்கி நல்லெண்ணெய் கலந்து சாப்பிடும் வழக்கம் இந்நாளில் அருகி விட்டாலும் ஓரளவுக்குத் தொடருகின்றது. பிராமணர் மிளகாய் வறுத்து இடித்த தூளுக் குள் நல்லெண்ணெய் விட்டு உணவுடன் சேர்ப்பார்கள்.

சனிக்கிழமைகளில் காலையில் உச்சந் தலையில் நல்லெண் ணெய் தேய்த்து உடல் முழுவதும் நல்லெண்ணெய் தடவி வாயினுள் சிறிதளவு நல்லெண்ணெய் வைத்திருந்து கொப்ப ளிப்பது வழக்கமாயிருந்தது. அந்நாளில் அரப்பு அல்லது சீயாக் காய், வெந்தயம் வைத்து முழுகிய பின் ஆட்டிறைச்சி சாப்பிடும் வழக்கமிருந்தது.

இந்துக்கள் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் மண் சிட்டிக்குள் நல்லெண்ணெய் விட்டு எள்ளுப் பொட்டலம் வைத்து சனீஸ்வர னுக்கு விளக்கு வைக்கும் முறை நாடெங்கும் நடைபெறுகின்றது. யாழ்ப்பாணத்தைக் களமாகக் கொண்டு எழுதப்பட்ட சிறுகதை களில், நாவல்களில் பெண்களின் தோற்றத்தை வர்ணிக்க

நல்லெண்ணெய்க் கறுப்பி எனக் குறித்தார்கள். ஊர்ப் பேச்சு வழக்கிலும் இச்சொல் நிரம்பவே கலந்திருந்தது. இன்று நல்லெண்ணெய்க் கறுப்பி என்ற சொற்றொடரை காண்பது அரிது.

ஆயுர்வேத மருத்துவத்தில் தாளங்காய் எண்ணெய், பொன்னாங்கண்ணி எண்ணெய் ஆகியவற்றைக் காய்ச்சுவ தற்கு நல்லெண்ணெய்தான் ஆதாரமானது. குழந்தைப் பிள் ளைக்கு மூலிகைகள் கலந்து காய்ச்ச நல்லெண்ணெய்தான் பயன்படுத்தப்படுகின்றது.

ஆனைக்கோட்டையின் சோமசுந்தரம் வீதி, நவாலி வடக்கு புலவர் வீதி, பண்டத்தரிப்பு பிரான்பற்று ஆகிய இடங்களில் நல்லெண்ணெயை உற்பத்தி செய்யும் கைத்தொழில் பரம்பரை பரம்பரையாக நடைபெற்று வருகின்றது.கொக்குவில், சுழிபுரம் போன்ற கிராமங்களில் ஒரு சிலர் இக்கைத்தொழிலைச் செய்து வருகின்றனர். நல்லெண்ணெய் உற்பத்தி செக்கு எனப்படும் முறைமை மூலமாகவே கால காலமாகச் செய்யப்பட்டு வருகிறது.

ஆகமுந்தைய காலங்களில் பனையோலையால் இழைக்கப் பட்ட பெரிய ஊத்துப் பெட்டிக்குள் ஆட்கள் ஏறி நின்று நசித்துக், கைப்பலத்தால் எண்ணெய் பெறப்படும் முறை இருந்தது. மனித வலுவைப் பயன்படுத்தும் இம்முறைமைக்கு பதிலான தொழில் நுட்பம் ஒன்று பின்னாளில் கண்டு பிடிக்கப்பட்டது. நல்லெண் ணெய்ச் செக்கு ஒன்றைப் புதிதாக உருவாக்கும் போது வாழைப் பழம்,பாக்கு, வெற்றிலை, நிறைகுடம் என்பவை வைத்து தெய்வ பக்தியுடன்தான் உருவாக்குவார்கள்.

செக்கு குற்றி இரண்டு வருடத்திற்கொரு முறையோ, இரட்டைப் பக்கமாயின் நான்கு வருடத்திற்கு ஒரு முறையோ புதிதாக வைக்கப்படும். அப்போதும் நிறைகுடம் வைத்து வழிபட்ட பின் தான் செக்கு குற்றியை இயக்கத் தொடங்கு வார்கள். நிலத்துடன் பிணைக்கப்பட்டு இருப்பது அசக்கு குற்றி எனப்படுகிறது. நன்கு முற்றிய புளிய மரத்தின் அடிப்பாக மரத்தை எடுத்து எட்டடி நீளத்திற்கு ஒரு பக்கம் கோதுவார்கள்.

இத்தொழிலில் நிபுணத்துவம் பெற்றவர்கள் பண்டத்தரிப்பு, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களில் இருக்கின்றார்கள். செக்கு குற்றியின் மேல் பாகத்தைக் கோதிய பின் மிகுதி 4 அடி மரத்தைக் கோதாமல் பூமிக்குள் தாட்டு வைப்பார்கள். அப்பகுதி கறையான் அரிக்காமலிருக்க ஒயில் பூசி பொலித்தீன் சுற்றி வைத்திருப்பார்கள்.

கோதிய செக்கு குற்றி 2 வருடங்களில் பாவிக்க முடியாத நிலையை அடையும் போது நிலத்தில் புதைந்தபுளிய மரத்தைக் கோதி செக்கு குற்றி ஆக்குவார்கள். செக்கு குற்றி வெடிக்காம லிருக்க வளையம் கட்டுவார்கள். செக்கு குற்றியினுள் இடப்படும் எள்ளைக் குற்றி எண்ணெயாக்க உலக்கை ஒன்றைப் பயன்படுத்துகின்றனர்.இது முதிரை மரத்தில் செய்யப்பட்டி ருக்கும். உலக்கையுடன் இணைத்து வைக்கப்பட்டிருக்கும் உப கரணம் பூவரசு மரத்தால் செய்யப்பட்ட கொளுக்கி ஆகும்.

கொளுக்கியின் பின் இணைக்கப்பட்டிருக்கும் மரப்பகுதி முதிரை மரத்தினால் செய்யப்பட்ட கதிராலாகும். கொளுக்கியை யும் கதிராலையும் இணைத்துக் கட்டப்பட்ட கயிறு வடக் கயிறு எனப்படுகின்றது. முன்னாளில் தும்புக் கயிற்றால் செய்யப்பட்ட

வடக் கயிறு இந்நாளில் நைலோனால் செய்யப்படுகின்றது. கொளுக்கி கதிரால் என்பவற்றைத் தாங்கியபடி கீழே நிற்பது இலுப்பை மரத்தினால் செய்யப்பட்ட துலாவாகும்.

துலாவை நிறுத்த நிலத்தில் பனை மரக் குற்றியைப் பொதுவாக வைத்திருப்பார்கள். துலாவின் பின் புறம் பாரத்திற் காக மண் மூடை ஒன்றை அல்லது பெரிய கல்லை வைப்பார்கள். செக்கு குற்றியின் மேல்புறம் முன்னைய காலத்தில் பனை ஓலையால் அமைத்த வட்டக் குடிலை கொளுக்கியுடன் சேர்த்துக் கட்டியிருப்பார்கள்.துலாவுடன் பிணைக்கப்பட்ட சோடி மாடுகள் செக்கை வட்டமாகச் சுற்றி வரும் போது இந்த வட்டக் குடிலையும் சேர்ந்து சுற்றி வரும்.

இதற்கென பனை ஓலையை வெட்டிச் சிறகடிப்பார்கள். இப்பனை ஓலை வட்டக் குடில் அழகியல் அம்சங்கள் நிறைந்த தாயிருக்கும். பின்னாளில் கொளுக்கியுடன் இணைந்து சுற்றிய பனை ஓலை வட்டக் குடிலை அமைக்கும் முறை அற்றுப் போனது. அதற்குப் பதிலாக தகரக் கொட்டகை அமைத்து அது கொளுக்கியுடன் இணைக்காமல் கம்பியுடன் கட்டும் முறைமை உருவானது.

செக்குத் துலாவுடன் பிணைக்கப்பட்ட மாடுகள் வேகமாக நடக்கவிடப்பட செக்குக் குற்றியால் எள்ளு குற்றப்படும். நல்லெண்ணெய் பெறப்படும் அது போல தேங்காய் கொப்பறா இடிக்கப்பட்டு தேங்காய் எண்ணெய் பெறப்படும். இலுப்பைக் கொட்டை அல்லது இலுப்பம் பருப்பு குற்றப்பட்டு இலுப்பெண் ணெய் பெறப்படும்.

மாடுகள் இரண்டு சோடிகளை ஒவ்வொரு செக்கு உரிமையா ளர்களும் வைத்திருப்பார்கள். ஒரு சோடி மாடுகள் களைத்தால் மற்றைய சோடி மாடுகளை செக்குத் துலா இழுக்கப் பயன்படுத் தினார்கள். செக்கு இழுக்கும் மாடுகள் களைத்தாலும் இழுத்தே தீரும்.

இதையொட்டிய “செக்கு இழுக்கும் மாடு போல இழுக்கின் றாய்” என்ற பழமொழி யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் பிரபலமா னது. இளைத்தாலும் களைத்தாலும் ஒரு வேலையை ஒருவர் செய்து முடிப்பது என்ற கருத்தில் இப்பழமொழி வழங்கப்படுகின் றது. செக்கு இழுக்கும் மாடுகளை கட்டி வைப்பதற்கும் மாட்டுக் கொட்டகை ஒன்றை அமைத்திருப்பார்கள். இக் கொட்டகையில் வைக்கோல் உள்ளிட்ட ஏனைய உணவுகள் மாட்டிற்கு வைக்கப் பட்டிருக்கும். வைக்கோல் பட்டடை மாட்டுக் கொட்டிலுக்கு அரு கில் போடப்பட்டிருக்கும்.

செக்கு சுற்றும் மாடுகளை விரட்டி வேகமாக நடக்க வைக்க ஒருவர் தடியுடன் இருப்பார். வயலில் சூடு மிதிக்கும் போது மாடு களை வளைத்து விரட்டுபவரை நடையன் வளைப்பது என்பார் கள். அது போல விஷேட பெயர் செக்கு மாடுகளை வளைக்கும் போது வழங்கப் பெறவில்லை. செக்குத் துலா இழுப்பதற்கு பலசாலி மாடுகள் தேவை. இதற்கென வன்னிப் பெருநிலப் பரப்புக்குச் செல்வார்கள். நாம்பன் மாடுகளை மாட்டின் வாலைப் பார்த்து அதன் தரத்தைப் பார்த்து பிடித்து வருவார்கள். மாடுகளின் திறமையைப் பொறுத்தே செக்கு இழுக்கும் செயல் திறமையாக அமையும். பெறப்படும் எண்ணெயும் தரமானதாக அமையும்.

எள் மூலம் நல்லெண்ணெய் வடிப்பது, தேங்காய் கொப்பறா மூலமாக தேங்காய் எண்ணெய் வடிப்பது இலுப்பெண்ணெய் வடிப்பது போன்றவை யாவும் வெய்யில் காலத்தில்தான் நிகழும். ஏனெனில், வெய்யில் காலத்தில் தான் இவை நன்றாகக்காயும். அதனால் மழை காலத்தில் செக்குத் தொழில் நடக்காது. நன்கு காய்ந்த விதைகளைத்தான் செக்கு குற்றி எண்ணெயாகத்தரும்.

பெரும்பாலும் வருடத்தில் 4 மாதங்கள் எண்ணெய் வடிக்கும் தொழில் நடைபெற மாட்டாது. மாடுகளுக்கும் ஓய்வு தான். நல்லெண்ணெய் வடிப்பதற்கு வெள்ளை நிறத்திலான எள், கறுப்பு நிறத்தினாலான எள் என இரு வகையான எள்ளுகளைப் பயன்படுத்துவார்கள். வெள்ளை நிற எள்ளு விலை கூடியது. கறுப்பு நிற எள்ளை வெள்ளை எள்ளுடன் கலந்தால் நல்லெண் ணெய் வாசம் உள்ளதாக வரும்

மழை காலத்தில் மழை நீரை நம்பி மானாவாரியாக நெல் விளையும் வயலில் எள் விதைப்பார்கள். நல்லெண்ணெய் செக்கு வைத்திருக்கும் பிரதேசத்திலும் பிற பிரதேசங்களிலும் விளையும் எள்ளை வாங்கி மூடைகளாக வைத்திருப்பார்கள்.

தூய்மையாக்கி காய வைத்த 20 கிலோ கிராம் நிறையுடைய எள்ளை செக்கு குற்றியினுள் இடுவார்கள். இவ்வாறு ஒரு முறை எள்ளைப்போடுவதை ஒரு காணம் போடுதல் என அழைக் கின்றார்கள். செக்கு குற்றியினுள் போடப்பட்ட ஒரு காணம் எள் ளைக் கொட்டுவதற்கு முன்பு பனை ஓலையினால் இழைக்

கப்பட்ட கடகப் பெட்டிகளே பாவிக்கப்பட்டன. தற்போது உரப்பை மூலமே எள்ளு கொட்டப்படுகின்றது.

சோடி மாடு துலாவைச் சுற்றி வரும் போது உலக்கை செக்கு குற்றியினுள் இடப்பட்ட எள்ளை இடிக்க இடிக்க எள்ளு நசிந்து நெரிந்து எண்ணெய்யாகத் தொடங்கும். இந்த எள்ளைக் கிண்ட வென விசேடமாகச் செய்யப்பட்ட அலவாங்கு ஒன்று உள்ளது. இதன் மூலமே அவ்வப்போது எள்ளு கிண்டப்படும். செக்கு உலக்கை ஆட்டப்பட்டு நல்லெண்ணெய் உருவாகும் போது அது செக்கு குற்றியின் அடியிலுள்ள பைப்மூலமாக வரத் தொடங்கும். இதனை ஏந்தி எடுக்கவென பாத்திரம் ஒன்று வைக்கப்பட்டிருக் கும். இது முன்னாளில் பித்தளை,அலுமினியப் பாத்திரங்கள் மூலம் பெறப்பட்டது. பின்னாளில் பிளாஸ்ரிக் பாத்திரங்கள் மூலம் நல்லெண்ணெய் பெறப்படு வருகின்றது. செக்கு குற்றி யால் வடிக்கப்பட்ட நல்லெண்ணெய் மண்டி கலந்து கலங் கலாகவே வரும்.

இதனை 3 நாட்கள் வைத்திருக்க முற்றாகத் தெளிந்த நிலையில் வரும். அப்போது வரும் தெளிந்த நல்லெண்ணெயை கண்ணாடி போத்தலில் இடுவார்கள். போத்தலில் அடைக்கப்பட்ட நல்லெண்ணெய்க்கு போத்தல் வாயிலில் மரத் தக்கையை அடைத்து விடுவார்கள். காலப்போக்கில் கண்ணாடிப் போத்த லுக்குத் தட்டுப்பாடு வர பிளாஸ்ரிக் போத்தலில் நல்லெண் ணெயை அடைத்து விற்கும் முறைமை உருவாகியுள்ளது.

செக்கு குற்றியால் நல்லெண்ணெய் எடுத்து முடிய வரும் எள்ளுப்பிண்ணாக்கு ஆடு, மாடுகளுக்குத் தீவனமாகிவிடும். எள்ளுப் பிண்ணாக்கை வெளியேற்றி விட்டு செக்கு குற்றியை

யும் உலக்கையையும் சுத்தப் படுத்தி விட்டு செக்குக் குற்றியைப் பாதுகாப்பாக மூடி வைத்திருப்பார்கள். செக்குக் குற்றியினுள் நீர்த் தன்மையிருந்து சக்கு கட்டினால் பின்பு பெறப்படும் நல்லெண்ணெய் சுவையற்றதாகவும் பழுதடையும் தன்மை யுள்ளதாகவும் மாறி விடும். அது நல்லெண்ணெய் வியாபாரத் தையும் பாதித்துவிடும். அதனால்,செக்கு குற்றி, துலா, எள் என் பவற்றின் தூய்மையில் அதிக கவனம் செலுத்துவார்கள்.

மழை காலத்தை முன்னிட்டு முற்கூட்டியே நல்லெண்ணெய் வடித்துக் கையிருப்பாக வைத்திருப்பார்கள். மழை காலத்தில் நல்லெண்ணெயின் விலை ஏற்றமாக இருக்கும். யாழ்ப்பாணக் குடா நாட்டின் வலிகாமம் தென்மேற்குப் பிரதேசத்தை மையப் படுத்தியதாக நடந்த நல்லெண்ணெய் வடிக்கும் செக்கு கைத்தொழில் யுத்த காலத்தில் எள்ளைப் பெறுவதில் ஏற்பட்ட தடங்கல்கள், அமைதியற்ற நிலைகளால் பாதிப்பை எதிர் கொண்டது. 1995 அக்டோபர் 30 ஆம் நாளில் வலிகாமம், பெரிய யாழ்ப்பாண (யாழ்ப்பாண நல்லூர் பிரதேச செயலக பிரவுகள்) மக்கள் மாபெரும் இடப்பெயர்வைச் சந்தித்தார்கள். அப்போது செக்குக் கைத்தொழில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது.

நல்லெண்ணெய் செக்குகளை அப்படியே கைவிட்டுச் சென்ற குடும்பங்கள் தான் அதிகம். ஒரு சிலர் துணிந்து செக்கு உபகரணங்களைக் கழற்றிச் சென்று தாம் இடம் பெயர்ந்த இடங்களில் பொருத்தி நல்லெண்ணெய் வடித்தார்கள். இரவு பகலாகச் செக்கைச் சுழற்றி அதிக இலாபமும் உழைத்தார்கள். கிளாலிக் கடல் நீரேரியைக் கடந்து வன்னிப் பெருநிலப் பரப் பிற்குச் செக்கைக் கொண்டு சென்ற ஓரிருவரும் இருந்தார்கள்.

போர்க் காலத்தில் பொருளாதாரத் தடை இருந்த காலங்களில் செக்கு இயங்குவதற்கு பெரிய தடைகள் இருக்கவில்லை.

மின்சாரம், எரிபொருள் எதுவுமே தேவைப்படாது மாடுகள், செக்கு குற்றி, துலா, கதிரால் போன்றவற்றின் மூலம் எண் ணெய் வடிக்கும் பாரம்பரிய முறை கடைப்பிடிக்கப்பட்டது. போர்க் காலத்தில் ஏராளம் கைத்தொழில்கள் செயலிழந்த போதும் செக்கு கைத்தொழில் தொடர்ந்து நடைபெற்றது.

நல்லெண்ணெய் இல்லாத யாழ்ப்பாணத்தவரின் வீடுகளே இல்லை எனலாம். நல்லெண்ணெயைத் தொடாமல் யாழ்ப் பாண மக்களின் பொழுதும் முடிவதில்லை. விஞ்ஞான தொழில் நுட்பத்தின் வரவு எத்தனையோ கைத்தொழில்களைக் காணா மல்ப் போகச் செய்தது. மனிதர்களின் பழக்க வழக்கங்கள் பல அடியோடு மாறின.

ஆனாலும், நல்லெண்ணெய் யாழ்ப்பாண மக்களின் வாழ்வியலுடன் கலந்த வகிபாகம் மிகப் பெருமளவுக்குமாற்ற முறாமல் அப்படியே இருக்கின்றது. யாழ்ப்பாண மக்கள் பல இலட்சம் பேர் புலம் பெயர்ந்து உலகின் நாலா திசைக்கும் நாட்டின் நாலா திசைக்கும் சென்று வாழ்கின்றனர். ஆனாலும், அங்கு அவர்கள் நல்லெண்ணெய் பாவனைகள் தொடர்கின்ற னர். இங்குள்ள அளவுக்கு இல்லையென்றாலும் நல்லெண் ணெய் போத்தல் இல்லாமல் அவர்கள் வீடுகள் இருக்கமாட்டாது என்பது நிச்சயமானது. அதனால், தான் இங்கிருந்து நல்லெண் ணெய்ப் போத்தல்கள் விமானம் மூலமாகச் செல்கின்றன.

மாடுகளால் செக்குத் துலா சுற்றும் முறைமைக்கு வயல்க

ளில் நெல் கதிர்களை வெட்டிச் சூடடிக்கும் இயந்திரம் வந்து விடை கொடுத்து விட்டது. செக்கு மாடுகளுக்குத் தேவையான வைக்கோல் மனிதர்கள் அரிவாளினால் நெற் கதிர்களை அரிவு வெட்டும் போது கிடைத்தது. சூடடிப்பதற்கு இயந்திரம் வந்த போது வைக்கோல் தனியே வராமல் அது இயந்திரத்திலேயே தூள் தூளாக்கப்பட்டு வயலெங்கும் வீசப்படுகிறது.

இதனால், அறுவடை செய்யப்பட்ட பின் வைக்கோல் கும் பிகள் அடுக்கி வைத்திருக்க முடியாமல் போனது. நாடு முழுது வம் இதே நிலை தொடர்கின்றது. செக்கு மாடுகளுக்குத் தீவன மாக வைக்கோல் கிடைக்காத போது மாடுகளுக்கு விடை கொடுத்து மாற்று வழி தேட வேண்டிய நிர்ப்பந்தத்தை செக்கு உரிமையாளர்களுக்கு ஏற்படுத்தியது.

அதனால் மாடுகளைப் பயன்படுத்தாமல் லான்ட்மாஸ்ரர் (Land Master) எனப்பட்ட சிறிய ரக ட்ராக்ரர்களைப் பயன்படுத்த ஆரம்பித்துள்ளார்கள். மாடுகளைப் பயன்படுத்திய போது செக்கை சுற்றி வர நிலம் போதுமானதாக இருந்தது. ஆனால், லான்ட் மாஸ்ரரைப் பயன்படுத்த ஆரம்பித்த போது செக்கைச் சுற்றி வட்டமாக நிலத்திற்குக் கொங்கிறீற் இட்டுத் தார் ஊற்ற வேண்டிய நிலை வந்துள்ளது.

அப்போது தான் லான்ட் மாஸ்ரர் வேகமாகச் சுற்றி நல் லெண்ணெயை சரியான முறையில்.வடிக்க முடியும். இல்லா விடில் நிலம் ஈரலிப்பாக உள்ள போது லான்ட் மாஸ்ரர் சுற்றி ஓட முடியாமல் போய்விடும். நல்லெண்ணெய் வடிக்கும் செக்கு கைத்தொழிலில் பல நூறு குடும்பங்கள் ஈடுபட்ட காலமொன்று இருந்தது.

காலமாற்றம் இவ் எண்ணிக்கையைப் படிப்படியாகவே குறைவடையச் செய்து விட்டது. இத் தொழிலில் ஈடுபட்ட குடும்பங்களின் உறுப்பினர்கள் பலர் மேற்கு நாடுகளை நோக்கிப் புலம் பெயர்ந்தார்கள். இன்னும் சிலர் அரச உத்தி யோகம்,தனியார் துறைவேலை எனச் சென்று விட்டார்கள்.

இதனால் இன்று இக் கைத் தொழிலில் ஈடுபடுவோர்களின் எண்ணிக்கையைக் குறைவடையச் செய்து விட்டது. செக்கில் நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் என வடிப்பதனால் இவர்களது வீடுகளில் எண்ணெய் தாராளமாக எப்போதும் இருக்கும். இதனால் வீட்டில் எண்ணெய் கலந்த உணவு தயாரிப் பதும் உண்பதும் தாராளமாகவே நிகழும்.

இப் பழக்கத்தால் அறுபது வயதை அண்மிக்காமல் மாரடைப் பால் இறந்தவர்கள் அதிகம் பேர் இருந்ததும் இக்கைத் தொழி லில் இருந்து விலக ஒரு காரணமாக கூறுகின்றார்கள். தூய்மை யாக வடித்து விற்கும் நல்லெண்ணெயை வாங்கும் சில வியா பாரிகள் மரக்கறி எண்ணெயைக் கலப்படம் செய்து போத் தல்களில் அடைத்து குறைந்த விலைக்கு விற்று தம்மை நட்ட மடையச் செய்ததாகவும் குறைபடுகின்றார்கள்.

இதனால் தரமான நல்லெண்ணெயை மருத்துவத் தேவைக ளுக்கு வாங்குபவர்கள் பாதிப்புறும் நிலை தோன்றுகின்றது. செக்குத் துலாவை லான்ட் மாஸ்ரரால் இழுக்கும் முயற்சி கைவிடப்பட்டு இயந்திரத்தின் மூலம் நல்லெண்ணெய் வடிக்கும் முயற்சியைச் சிலர் செய்தார்கள். இவ் இயந்திரங்கள் பழுதடை யும் போது இந்தியாவிலிருந்து உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்து உடன் திருத்த முடியாத நிலையால் கைவிட்டு முள்


ளார்கள்.

போர்க்காலம் முடிந்து இயல்புநிலை தோன்றியுள்ளது. நல்லெண்ணெய்க் கைத்தொழில் தங்கு தடையின்றி தொடரக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆனாலும் தொழிலில் இருந்து விலகிச் செல்லும் குடும்பங்கள் தான் அதிகரிக்கின்றன. நல்லெண்ணெய்க்கான தேவை தொடர்ந்தும் உயர்வாகவே இருக்கின்றது.

ஆரோக்கிய மனித சமூகமொன்றைக் கட்டியெழுப்ப உதவும் இது போன்ற கைத்தொழில்களைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு**

**2013 செப்ரெம்பர் 22, 29**



# அருகிப்போகும் சம்பிரதாயங்கள்

மனித வாழ்வில் சடங்கு சம்பிரதாயங்கள் பலவற்றை கால மாற்றம் மெல்ல மெல்ல செல்லரித்து வருகிறது. வழக்கொழிந்து போகச் செய்கிறது. புதுமை, நவீன நாகரிகம் எனும் பெயர்களில் சிலவற்றை உட்புகுத்துகின்றது. திருமண நிகழ்வு நடைபெறும் நாளில் மாலைப்பொழுதில் திருமணக் கேக் வெட்டும் சம்பிரதா யம் ஒன்று அண்மைக்காலத்தில் உட்புகுந்து கொண்டது.

பூக்கூடையை காவிநிற்கும் சிறுமிகள் Flower Girls எனும் பெயரில் திருமணச்சடங்குக்குள் உட்புகுந்துவிட்டார்கள். மங் கைப் பருவ மங்கல நீராட்டு விழாவுக்குள்ளும் கேக் வெட்டும் சம் பிரதாயம் எல்லா இடமும் நுழைந்துவிட்டது.

அதேநேரம் எம்மிடையே தொன்றுதொட்டு நிலவி வந்த பல பழக்கங்கள் அருகிப்போய்விட்டன. அவற்றின் நினைவுகள் மீது இன்று நடந்து பார்ப்போம்.

அக்காலத்தில் வேலியடைத்த வீடு வளவுகளைத் தான் பெருமளவு காண முடியும். வேலி அடைப்பதில் பல முறைகள் இருக்கின்றன. கிடுகு வேலி, அலம்பல்வேலி, கிளுவங்கதியால் வேலி, பனை யோலை வேலி, முருகைக்கற்பாறை வேலி, வாழைச்சருகு வேலி என இதன் பட்டியல் நீண்டு செல்லும்.

யாழ்ப்பாண பண்பாட்டின் தனித்துவமான பண்புகளில் ஒன் றான கிடுகுவேலி ஏனைய வேலிகளும் தனித்துவமாக ஆராயப் படவேண்டியவையே. அவற்றை, ஆராயப்புறப்பட்டால் இப் பத்தி யின் திசை தடம்மாறிவிடும். வேலி அடைத்த காலத்தில் தெரு வுடன் உள்ள வேலியுடன் படலை ஒன்று இருக்கும். இப் படலை கிடுகளால் அல்லது தடிகளால் ஆக்கப்பட்டிருக்கும்.

குறித்த ஒரு வீட்டுக்காரரை தேடி ஒருவர் வரும்போது வீட்டில் ஆட்கள் யாருமே இல்லாவிட்டால் தன் வரவை அறிவிக்க குழை முறித்துப்போடும் முறை இருந்தது. மரங்கள் உள்ள வேலியில் இருந்து குழைகளை முறித்துப்போடுவது இலகுவானதாக இருந்தது. குழைகளை முறித்து படலையில் குற்றிவிடுவார்கள். சிலநேரம் படலையின் கீழ் நிலப்பகுதியில் குழையைப் போட்டு விடுவார்கள்.

வீட்டு உரிமையாளர் திரும்பி வரும்போது தமது வீட்டு வாச லில் இருக்கும் குழையை வைத்து தாம் இல்லாதபோது யாரோ தேடிவந்ததை உணர்ந்து கொள்ளுவர். அக்கம்பக்கத்து வீட்டா ரிடம் விசாரித்து யார் வந்தது என விசாரித்து அறிந்து கொள்வர். மிக நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் விரல் நுனியில் வந்துவிட்ட இக்காலத்தில் வேலிகள் மதில்களாகி விட்ட இக் காலத்தில் குழைறித்துப்போடுவது தேவையற்றதாகி விட்டது.

ஆயினும் கிராமப்புறங்களில் இம்மரபு அங்கொன்று இங் கொன்றதாக தொடர்வதை அரிதாகக் காணலாம்.

மண்வீடுகள் நிறைந்திருந்த காலத்தில் வீடு வேய்வதற்கு பனைஓலைகள், தென்னோலைக்கிடுகுகள் போன்றவை பயன் பட்டன. மழைக்காலம் நெருங்கும்போது வீடு வேயும் படலம் தொடங்கும். பனையோலைகள் வெட்டி சீராக அடுக்கி கால் களால் உழக்கி தட்டையாக்கிய பின் வீடு வேய்வார்கள்.

வேயப்பட்ட வீட்டின் பனையோலைகள் காலம் கடந்து பழுத்தல் நிலைக்கு வரும்போது அந்த ஓலைகளை வெட்டிக் கழிப்பார்கள். அந்த பனை ஓலைகளை பெறுவதற்கு என விவ சாயிகள் காத்திருப்பார்கள்.

பழுத்த பனையோலைகள் தோட்டச்செய்கைக்கு சிறந்த இயற்கை பசளையாக உள்ளது. கிராமியக் கூட்டுறவு அடிப் படையில் வேயப்பட்ட வீடுகளின் கூரையின் கீழ் மூலையில் நெருப்பைப் பற்றவைத்து விட்டு ஐயோ ..... ஐயோ என ஒப்பாரி வைத்த பின்பு தீயை அணைக்கும் பழக்கம் இருந்தது. விசித்தி ரமான இப்பழக்கம் ஓலை வீடு தீ விபத்துக்களால் பாதிக் கப்படாமல் இருக்க அக்கினி தேவதையைத் திருப்திப்படுத்தும் செயல் எனக் கூறினார்கள். வீடுகள் நெருப்பினால் பாதிக்கப் படாமல் இருப்பதற்கான நாணமெனவும் மூத்தோர்கள் கூறுகின் றார்கள். இற்றை நாளில் மண் வீடுகளும், ஓலைக்கூரைகளும் விரல் விட்டு எண்ணக்கூடியதாக இருக்கின்றன.

ஆயினும் இப்பழக்கம் வழக்கத்தில் எங்காவது இருப்பதாக அறியக் கிடைக்கவில்லை. விசித்திரமான தாயினும் மனிதர்க

ளின் நம்பிக்கையின் பாற்பட்டதான வழக்கம் அது.

குழந்தை ஒன்று பிறந்து வளரும் பராயத்தில் பற்கள் முளைக்க ஆரம்பிக்கும்போது கொழுக்கட்டைகள் அவித்து பல்லுக்கொழுக்கட்டை கொட்டும் வழக்கம் இன்றும் தொடர் கின்றது.

தாய் மாமன், மாமி இணைந்து பல்லுக்கொழுக்கட்டை கொட் டும் வழக்கம் நிலைபெற்றதாக என்றும் இருக்கும். ஆனால் குழந்தைப் பிள்ளையொன்று அரிசி புடைக்கும் சுளகினுள் விளையாட்டுத்தனமாக இருந்து தும்மும்போதும் பல்லுக் கொழுக்கட்டை கொட்டும் வழக்கம் முன்னாளில் இருந்தது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் தென்மராட்சி பிரதேசத்தில் இவ்வழக்கம் பெரிதும் நிலைபெற்று இருந்தது. ஏனைய பிர தேசங்களில் இவ்வழக்கம் பெரிதும் இருந்ததாக அறியப்பட வில்லை. குழந்தைப் பருவத்தில் பல்லு முளைத்து பல்லுக் கொழுக்கட்டை கொட்டிய குழந்தை ஒன்று இவ்விதம் சுளகினுள் இருந்து தும்மினால் இரண்டாம் முறையாக இந்த நிகழ்வு நடைபெறும்.

தாய்மாமன் முறையிலுள்ள ஒருவர்தான் இந்த நிகழ்வை நடத்துவார். கொட்டிய கொழுக்கட்டைகளில் சிலவற்றை ஓலைப் பெட்டி ஒன்றினுள் வைத்து வீட்டிற்கு சற்றுத் தொலைவில் உள்ள முச்சந்தியில் வைப்பார்கள்.

வடமராட்சிப் பிரதேசத்தில் கார்த்திகை மாத திருவிளக்கீடு வந்து எட்டாம் நாள் மச்சப்படையலை அமரத்துவம் அடைந்த தமது முன்னோர்கள் நினைவாக படைப்பார்கள். இதனைத்

தவம் என்பார்கள். அப்படையலில் ஒருபகுதி உணவை பனை ஓலையால் செய்த குடலையினுள் இட்டு வடலி வளவினுள் உள்ள அணிஞ்சி மரம் அல்லது பூவரசு மரத்தில் கட்டி விடுவார் கள். அதன் பின்பு மச்சப் படையலை உண்பதற்கான சைகையை பல்லி சொல்லவேண்டும்.

பல்லி சொல்லும்வரை காத்திருப்பார்கள். பல்லி சொன்ன பின்பு தான் உண்பார்கள். இன்று தவம் படையல் முறை ஓரளவுக் குத்தான் வழக்கில் உள்ளது. தென்மராட்சிப் பிரதேசத்தில் கார்த்திகை விளக்கீடு அன்று மச்சப்படையல் தமது இறந்து போன உறவுகளை நினைத்துப் படைக்கும் வழக்கம் பெருமள வில் வழக்கொழிந்து வருகின்றது.

குழந்தை பிறந்ததும் காதுகுத்தும் வழக்கம் ஆண், பெண் வேறுபாடின்றி நிகழ்ந்த காலம் இருந்தது. குழந்தை பிறந்து 31 ஆம் நாள் தொட்டிலில் இடும்போது தாய் மாமனால் காதுகுத்தும் நிகழ்வு நடத்தப்படும்.

சிலவேளை குழந்தை பிறந்து 9 ஆம் மாதம் முதல் 12 ஆம் மாதத்துக்குள் இந்தக்காது குத்தும் சடங்கு நடைபெறும். காது குத்துவது விஞ்ஞான ரீதியிலும் நன்மை பயக்கும் ஒன்றென மூத்தோர்கள் நினைவு கூருகின்றனர். அக்கியூ பங்சர் முறை யில் மனித உடலில் ஊசி குத்தி நோய்களுக்கு சிகிச்சை அளிப் பார்கள். அதுபோல எம்மவர் பிள்ளைகளுக்கு காது குத்துவதும் உடலில் உள்ள நோய்களை அண்டவிடாது என்ற நம்பிக்கை இருக்கிறது.

இப்போதைய மூத்த தலைமுறை ஆண்களில் காது குத்திய

அடையாளத்துடன் கூடிய ஆண்களைக் காணமுடியும். ஆனால் இன்றைய காலத்தில் நாகரிகம் என்றபெயரில் சில இளைஞர் கள் ஒற்றைக்காதைக்குத்தி தோடு போடுவதனை காண்கி றோம். பெண் குழந்தைகளுக்கு காது குத்தும் வழக்கம் மாறு பாடின்றி அப்படியே தொடருகின்றது.

பிறந்த குழந்தைகளை தொட்டில்களில் போடுவது நூல் சேலையால் அமைக்கப்பட்ட ஏணைகளில் போடுவதை இன்று அரிதாகவே காணமுடிகிறது. முன்னைய தலைமுறையினர் தமது குழந்தைகளை தொட்டிலில் அல்லது ஏணைகளில் இட்டு நித்திரை கொள்ளவைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

ஏணையில் குழந்தை தாலாட்டி நித்திரை கொள்ள வைக்கும் போது குழந்தையின் தலை உருண்டையாக வருவதற்கு சாத்தி யம் நிறைய இருந்தது. தொட்டில் செய்பவர்கள் சற்று வசதி படைத்த குடும்பத்தவர்களாக இருந்தார்கள். தனது தாய் அல் லது தந்தை அவர்களின் தாய் தந்தை படுத்த தொட்டில் எனத் தொட்டிலின் பரம்பரையைக் கூறி மகிழ்ந்த காலம் இருந்தது இன்றும் இருக்கிறது.

நவீன பிளாஸ்ரிக் உபகரணங்கள் மலிந்துவிட்ட இக்காலத் தில் தொட்டிலை ஏணையை தேடிப்பிடிப்பது முயற்கொம்பாகி விட்டது. குழந்தை வளர்ப்பு முறைகளும் நவீனத்துவங்களின் வர வால் பெரிதும் மாறிவிட்டது. மங்கல நிகழ்வுகளுக்கு அழைப் பிதழைக் கொண்டு செல்லும் போது பழம், பாக்கு, வெற்றிலை வைத்துக் கொடுக்கும் மரபும் சில பிரதேசங்களில் வழக்கிலிருந் தது. பின்னாளில் அவசர உலகில் அவசர மனிதர்களாக பலரும் மாறவே அவசரமாகவே இவ்வழக்கமும் விடை பெற்றுப்

போனது.

குழந்தை பிறக்கும் போது ஆண்பிள்ளை பிறந்தால் கூரை யில் தடியால் தட்டுவார்கள். அக்காலத்தில் வீடுகள் யாவும் மண் வீடுகளாவும் ஓலைக் கூரைகளாகவும் இருந்தன. இதனால் கூரையில் தட்டி அறிவிக்கும் முறைமை சாத்தியமானதாக இருந்தது. பெண் குழந்தை பிறந்தால் சமையலறைக் குசினி யில் அடுப்பு ஊதி அதனைத் தெரியப்படுத்துவார்கள்.

புதிய பாப்பசர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக இத்தாலி வத்திக்கானில் புகைபோக்கி வழியாக வெண்புகை இட்டு அதனை உலகத்துக்கு தெரியப்படுத்தும் வழக்கம் இன்று வரை யும் தொடர்கிறது.

அதுபோன்றதொரு மரபாகவே ஆண் குழந்தை, பெண் குழந்தை பிறந்தால் தெரியப்படுத்தும் பாரம்பரிய மரபை குறிப் பிடலாம்.

கோழி வளர்ப்பு ஒவ்வொரு வீட்டிலும் மேற்கொள்ளப்பட்ட ஒரு காலம் இருந்தது. நகர கிராம வேறுபாடின்றி கோழி வளர்பை காண முடிந்தது. அந்த நாட்களில் பண்ணைகளில் வளரும் லெக்கோன் கோழி முட்டைகளை விரும்பி வாங்க மாட்டார்கள். லெக்கோன் முட்டைகள் உண்பதை அருவருப்பாகப் பார்த்தார்கள்.

இன்றைய நாட்களில் வீடுகளில் வளர்க்கும் ஊர்க் கோழி களை அருந்தலாகவே காண முடிகிறது. பிள்ளைப் பேறு, மங் கைப் பருவம் அடைதல் என்பன போன்றவற்றுக்கே ஊர்க் கோழி முட்டைகள் கொடுத்து அவற்றை உணவுக்கு எடுத்தல்

என காலம் மாறிவிட்டது.

ஊர்க் கோழிகள் வீட்டில் வளர்த்த காலங்களில் கோழிக் குஞ்சுகளை வேறு இடத்தில் விலைக்கு வாங்கினால் அக் குஞ்சு களை குடும்பத் தலைவி சமயலறை அடுப்பைச் சுற்றி "காட்டில் மேய்ந்து வீட்டை வா" என மூன்று தரம் கூறிச் சுற்றிவிட்டு வள வில் விடுவார்கள். இந்நாளில் கோழிகள் வளர்ப்பவர்கள் இந்த மரபை பின்பற்றுவதை அரிதாகவே காணமுடிகிறது.

காணி ஒன்றில் தென்னம்பிள்ளை நட்டு வளர்க்கும் போது முதல் பாளை விடும் தென்னம்பிள்ளைக்கு மங்கைப் பருவ மங்கல நீராட்டு விழா நடத்தும் மரபு பெருமளவில் வழக்கில் இருந்தது. பெண் பிள்ளை ஒன்று பிறந்து வளர்ந்து மங்கைப் பருவம் அடையும்போது மங்கைப் பருவ மங்கல நீராட்டு விழா நடத்தும் மரபு இன்றும் இருக்கிறது. இந்து, கிறிஸ்தவ மத வேறு பாடின்றி தமிழரின் பண்பாடாக இதனைக் கொண்டாடுகின் றனர்.

மரங்களில் தென்னையைப் பிள்ளையாகக் கூறும் மரபு உள்ளது. அதனால் காணி ஒன்றில் முதன்முதலாக பாளை விட்டு தென்னங்குரும்பைகள் விடத் தயாராகும் தென்னைக்கு மங்கைப் பருவ மங்கல நீராட்டு விழா நடத்தப்படுகிறது.

தென்னம்பிள்ளையை மஞ்சள் கலந்த நீரால் குளிப்பாட்டு வார்கள். தங்கச் சங்கிலி ஒன்றை தென்னம் பாளையில் தொங்க விடுவார்கள். சில இடங்களில் தென்னம்பிள்ளை வட்டுக்கு முன்பாக தங்கச் சங்கிலி, மாலை என்பவற்றை அணி விப்பார்கள். அதற்கு முன்பாக தென்னம்பிள்ளைக்கு புத்தம்

புதிய சேலை அணிவிப்பார்கள். தென்னம்பிள்ளைக்கு முன் பாக உள்ள நிலப்பரப்பில் கோலமிட்டு புதுப்பானை வைத்து பொங்குவார்கள்.

பிட்டு, களி, பலகாரம் போன்றவற்றையும் செய்து பழம், பாக்கு வெற்றிலையும் வைத்து படைப்பார்கள். தீப ஆராத்தியும் காட்டுவார்கள். சுமங்கலிப் பெண்கள் இதனைச் செய்வார்கள். இந்த நிகழ்வுகளை தென்னம்பிள்ளைக்கு குமரி கட்டுதல் எனவும் சில இடங்களில் அழைக்கும் மரபு உள்ளது. இந்த நிகழ்வு இன்றும் பெருமளவில் வழக்கிழந்துபோய் தென்மராட்சி போன்ற சில பிரதேசங்களிலும் அங்கொன்றும் இங்கொன்று மாக சில பிரதேசங்களிலும் நடைபெறுகின்றது.

வீட்டில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கு அறிகுறியாக சிறிய தென்னம்பிள்ளையின் ஓலைகளை வடக்குக் கிழக்காக பிடித்து முடித்து விடுவார்கள் இதனைக் கண்டவர்கள் துடக்கு உள்ளவர்களைக் குறித்த அந்த வீட்டுக்கு போக விடமால் மறிப் பார்கள்.

வீட்டில் மங்கல காரியம் முடிந்த பின்பாகவே ஓலை முடிச்சுக் களை அவிழ்ப்பார்கள். இன்றும் இந்த மரபை வடமராட்சியின் சில கிராமங்களில் ஓரளவு காணமுடிகிறது.

வீட்டு வாசலில் நிற்கும் போது எதிர்பாராத விதமாக தும்மி னால் குறித்த ஆளை அப்படியே நிற்க வைத்து தும்மிய இடத் துக்கு தண்ணீர் தெளிப்பார்கள். அதன் பின்பு தான் தும்மிய வரை நகர்ந்து செல்ல அனுமதிப்பார்கள். இல்லாவிட்டால் குடும் பத்துக்கு கேடுவரும் என நம்பினார்கள்.

வீட்டில் சமைத்த உணவுப் பண்டங்களை தூர இடத்துக்கு கொண்டு போகும் போது கரித்துண்டு அல்லது இரும்புத் துண்டு உணவுப் பாத்திரத்திற்கு அருகில் வைப்பார்கள்.

குறிப்பாக இரவு வேளையில் உணவைக் கொண்டு போகும் போது இவ்வாறு கொண்டுபோகும் முறை இன்றும் தொடர் கிறது.

இரசாயன ரீதியாக அசுத்த வாயுக்களை இரும்புக் கரித் துண்டு அகற்றுவதாக கூறுகின்றனர். இந்த மெய்ஞானம் இன் றைய விஞ்ஞானமாகத் தான் தெரிகிறது.

முன்னாளில் வீட்டுக்கு வருபவர்களுக்கு பித்தளைச் செம் பில் தான் தண்ணீர் கொடுப்பார்கள். தண்ணீரை வாங்கிய ஒரு வர் செம்பின் மேற்புறத்தில் உள்ள தண்ணீரை சிறிது ஊற்றிய பின்பு தான் குடிப்பார்.

மந்திரம் மாயம் ஏதும் செய்திருந்தால் அது தண்ணீர் மேற் புறம் தான் இருக்கும். அதனால் அதனை ஊற்றிவிட்டு குடித்தால் பயம் இல்லை என்பது ஒரு காரணமாக கூறப்பட்டது.

ஆனால் உண்மையில் தண்ணீரின் மேற்புறம் தூசு இருந் தால் அதனைச் சிறிது ஊற்றி விட்டு குடித்தால் தீமை இல்லை என்பதுவே சரியான காரணம் ஆகும்.

வீட்டில் கர்ப்பிணி பெண் இருந்தால் அவரைக் கொண்டு தலையணையை மூடித் தைக்க விடமாட்டார்கள். கொழுக்கட்டை பிடிக்க விடமாட்டார்கள். கோயில்படி கடக்க விடமரட்டார்கள்.

வீட்டில் உள்ளோரை திருவாதிரை நட்சத்திர நாளில் தூரப் பயணம் போக விடமாட்டார்கள். திருவாதிரை போபவர் திரும்பி வரமாட்டார் என்பார்கள்.

திருவாதிரை நாளில் வெளிநாட்டுக்கு பயணம் புறப்பட்ட பலர் பிரஜாவுரிமை, வதிவிட உரிமை கிடைத்தும் தாயகம் திரும்பி வந்துபோக சந்தப்பம் வாய்க்காமல் உள்ளனர் என மூத் தோர்கள் இன்றளவும் நினைவு கூருவதை கேட்கக் கூடியதாக உள்ளது.

மரண வீடுகளில் சடலத்தை பாடையில் வைத்து காவும் போது பன்னாங்கின் மேல் வைத்து காவும் மரபு பெருமளவு வழக்கொழிந்து போய்விட்டது. பச்சைத் தென்னோலை எடுத்து பன்னாங்கு செய்யவார்கள்.

காரைநகர் பிரதேசத்தில் இன்றும் பன்னாங்கு கட்டி அதில் வைத்துத்தான் இறந்தவரின் உடலை காவும் மரபு தொடர்கின் றது. பன்னாங்கு கட்டுவதற்கு வயதில் மிக மூத்த ஒருவரை தேடிக் கண்டுபிடிக்கும் அளவுக்கு நிலைமை வந்து விட்டது.

“பொன்மேனி பளபளக்க பன்னாங்கில் படுத்திருந்து பொன் மகனே போனவிடம் வந்தெனக்கு சொல்வாயே....” எனும் நாட்டார் பாடல்கள் ஒப்பாரிப் பாடல்களாக இருந்த காலமும் மலையேறிப் போய்விட்டது.

மரண வீடுகளில் இறந்தவர்களின் அருமை பெருமைகளைக் கூறி ஒப்பரரி வைக்கும் வழக்கம் முன்னாளில் மிகவும் முக்கிய மானதாக இருந்தது. பெண்கள் ஒன்று கூடி நெஞ்சில் அடித்து அடித்து இறந்தவரின் பெருமைகளை கூறி அழுவார்கள்.

இவ்வாறு நெஞ்சில் அடித்து அழும்போது இருதயத்திற்கு நல்லது எனவும் சுவாச்சுற்றோட்டம் ஒழுங்காக இருக்கும் என வும் விஞ்ஞான காரணங்களும் கூறப்படுகிறது.


இந்நாளில் சம்பளத்திற்கு ஆள் பிடித்து ஒப்பாரி வைக்கும் நிகழ்வுகள் அரங்கேறத் தொடங்கிவிட்டன. ஆனாலும் ஒப்பாரி மரபை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கும் சில கிராமங்களும் உள்ளது.

பனம்பாத்தி கிண்டும்போது பாத்தி நாச்சியாருக்கு எனக் கூறி சோறு சமைத்து, முட்டை அவித்து, முரல் மீன் கறி சமைத்து படைக்கும் மரபும் முன்னாளில் இருந்தது.

மங்கல காரியங்களுக்கு பலகாரம் சுடும்போது முதல் சுட்ட பலகாரத்தை அடுப்பு நாச்சியாருக்கு என அடுப்புக் கல்லின் மீது போடும் வழக்கமும் இன்று அருகி வருகிறது.

அருகிப் போகும் சடங்குகள், சம்பிரதாயங்களின் பட்டியல் மிகமிக நீளமானது. மாதிரிக்குச் சிலவற்றை இங்கு பதிவு செய் துள்ளேன். கிராமத்திற்கு கிராமம் பிரதேசத்திற்கு பிரதேசம் இது மாறுபடுகிறது. இவை குறித்து கலைமாணி, முதுகலை மணி, கலாநிதிபட்ட ஆய்வுகள் பல செய்யப்பட்டு ஆவணப்படுத் தப்பட்டுள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

**நன்றி - தினக்குரல் வாரவெளியீடு 2013 டிசெம்பர் 08,15**



# பூங்காவனத் திருவிழா

ஊர்கூடித் தேரிழுத்த ஒற்றுமைப் பண்பாட்டின் அம்சங்களில் கோயில் திருவிழாக்கள் முதன்மையானவை. யாழ்பாணத்தில் தனித்துவமாகத் திருவிழாக்களை கொண்டாடிய கோயில்கள் பல உள்ளன. புத்தூர் , ஆவரங்கால் கிராமங்களில் இரவு நேரத் தில் நடைபெறும் தனித்துவமான திருவிழாக்கள் தொடர்பான நிகழ்வுகளாக இன்றைய பத்தி மலர்கிறது.

யாழ்.குடாநாட்டின் வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் புத்தூர் , ஆவரங்கால் கிராமங்களில் சிவன் கோயில்கள் இரண்டு உள் ளன. இந்த இரு கோயில்களிலும் சிவன், அம்மன் தெய்வங் களுக்கு தனித்தனியான கொடித் தம்பங்கள் உள்ளன. ஆடி மாதத்தில் மீண்டும் இவ் இரு கோயில்களான சிவன் கோயில் களும் கொடியேறி ஆடிப்பூரம் நாளன்று தீர்த்த திருவிழா நடைபெறும். தீர்த்த திருவிழா முடிந்த அடுத்த நாள் நடைபெறும்

பூங்காவனத் திருவிழாக்கள் யாழ்ப்பாணம் முழுவதும் பிரசித்த மானவை. யாழ். – பருத்தித்துறை வீதியை அண்மித்து இவ் இரு கோயில்களும் இருப்பதுடன் ஒரே நாளில் பூங்காவனத் திரு விழா கோலாகலமாக நடைபெற்றதும் காலாகாலம் பேசப்பட்டு வருகின்றது. வல்வெட்டித்துறையின் இந்திர விழா பேசப்பட்டு வருவது போல இவ் இரு கிராமங்களதும் பூங்காவனத் திருவிழா பேசப்படுகின்றது. காலாதி காலமாக புத்தூர் ஆவரங் கால் கிரா மங்களின் பூங்காவனத் திருவிழா பேசப்படுகின்றது. வரு கின்றது.

வல்வெட்டித்துறையின் இந்திரவிழா வருவது போல இவ் இரு கிராமங்களதும் பூங்காவனத் திருவிழா பேசப்படுகின் றது. காலாதி காலமாக புத்தூர் ஆவரங்கால் கிராமங்களின் பூங்கா வனத் திருவிழா நடைபெற்ற போதும் 1955 ஆம் ஆண்டுதான் கோலாகலமும் பிரமாண்டமும் பெற்றது.

இவ் வருடம் ஆவரங்கால் சிவன் கோயிலின் அம்மன் பூங்கா வனத் திருவிழாவை அப்போதைய பரிபாலன சபை கோலா கலமாகக் கொண்டாடத் தீர்மானித்தது. அதே சமயம் புத்தூர் சிவன் கோயிலிலும் அம்மன் திருவிழாவின் பூங்காவனத் திரு விழாவை சிறப்பாக கொண்டாடுவதெனவும் தீர்மானித்தனர். இவ் இரு கோயில்களும் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள் ளன. அம்மன் கோயில் பூங்காவனத் திருவிழா ஆரம்பித்த காலங்களில் இவ் இரு கிராமத்தவர்களுக்கும் இடையே போட்டி உருவானது.போட்டி இருந்தது பொறாமை இருக்கவில்லை. திருவிழாக் குழப்பங்களோ, சண்டை சச்சரவுகளோ எக் காலத் திலும் இருக்கவில்லை. நாணயமான ஆரோக்கியமான திரு

விழாப் போட்டியாகவே இருந்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நாலா பாகங்களிலிருந்தும் மக்கள் இப்போட்டிப் பூங்காவனத் திருவிழாக்களைப் பார்க்க வந்தார்கள். பருத்தித்துறை வீதியில் புத்தூர், ஆவரங்கால் பிரதேசங்களில் இரவிரவாக மக்கள் கூட்டம் அலை மோதியது. 1955 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டு வரையும் 12 வருடங்கள் தான் இந்த திருவிழா வசந்தம் இருந்தது. 1967 ஆம் ஆண்டில் ஆவரங்கால் சிவன் கோயில் பாலஸ்தானம் செய்யப்பட்டு 1982 ஆம் ஆண்டில் கும்பாபிஷேகம் நடைபெறும் வரையில் திரு விழாக்கள் நடைபெறவில்லை.

1983 ஆம் ஆண்டில் உள்நாட்டுப் போரின் அதிதீவிரம் ஆகியதுடன் திருவிழா வசந்தங்கள் யாவுமே தூர விலகிப் போய் விட்டன. பூங்காவனத் திருவிழாக் காலத்தின் உன்னதங்களை நோக்கிப் பயணிப்போம்.

புத்தூர் சிவன் கோயிலில் 11 ஆம் நாள் பூங்காவனத் திருவிழாவை நடத்துவதற்கான ஆயத்தங்கள் ஊர் முழுவதும் கூடி நடக்கும். சிகரம் கட்டுதல் அக்காலக் கோயில்களில் பிரதானமான ஒன்றாகும். இணுவில், கரவெட்டி, அளவெட்டி, மல்லாகம் போன்ற கிராமங்களில் சிகரம் வைத்திருந்தவர்கள் இருந்தார்கள். எட்டு முதல் பத்துச் சிகரங்களை வரவழைத்தார்கள். பருத்தித்துறை வீதி முகப்பில் ஒரு சிகரம் அங்கிருந்து மேற்காக கோயிலை நோக்கி வரும் வீதிகளிலும் இடையிடையே சிகரங்கள், கோயில் கோபுர வாசலில் ஒரு சிகரம், பக்க வாசல்களில் சிகரங்கள் கட்டப்பட்டிருக்கும். சிகரம் கட்டுதல் என்பது அக்காலத்து கோயில்களில் திருவிழாக்களின் ஆடம்பரத்தைக் காட்

டும் ஒரு வடிவமாகும்.

பணவசதி படைத்த கோயில்களின் அந்தஸ்தைக் காட்டச் சிகரங்கள் இருக்கும் சிகரம் 3 அடுக்காக இருக்கும். முதல் அடுக்கில் அகலமாக இருக்கும் சிகரம் மேலே செல்லச் செல்ல ஒடுங்கிச் செல்லும். கோயில் கோபுர வாசலுக்கு முன்பாகக் கட்டப்படும் சிகரத்தின் முதல் தளத்தில் மேடை அமைத்து அதில் தவில் கச்சேரி நடத்திய சில கோயில்களும் உள்ளன.

புத்தூர் சிவன் கோவிலிலும் பூங்காவனத் திருவிழா அன்று இதுபோல நடந்தது. பூங்காவனத் திருவிழாவன்று கோயில் வெளிவீதியில் சுழலும் மேடை அமைத்து அதில் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. பூங்காவனமன்று சிகரம் கட்டப்படும் வீதிகளில் பந்தல் போடும் நிகழ்வும் தனித்துவமாயிருக்கம். பனைமரக் கப்புகளை நட்டு பச்சைத் தென்னோலையை கூரையாகப் போட்டு பச்சை நிறத்தில் பந்தல் அமைப்பார்கள்.

பந்தல் கப்பு ஒவ்வொன்றுக்கும் பெரிய கதலி வாழைக்குலை முழுவாழையாக வாழை இலைகள் நீக்கி கட்டப்பட்டிருக்கும் வாழைகளுடன் வர்ண ரியூப் லைற்றுகள் பூட்டப்பட்டிருக்கும். இளநீர்க் குலைகள் , மூங்கில், சவுக்கு மரங்களும் கட்டப்பட்டிருக்கும். வல்வெட்டித்துறையிலிருந்து வரவழைக்கப்பட்ட பாரிய ஜென ரேற்றர் மூலமாக மின்சாரம் முழு வீதிகளுக்கும், கோயில் வளாகம் முழுவதற்கும் வழங்கப்பட்டிருக்கும். பருத்தித்துறை வீதியிலும் வடக்காக ஆவரங்கால் நோக்கி அரைக்கிலோ மீற்றர் தூரம் வரையில் வீதியின் இருபக்கமும் கப்பு கட்டப்பட்டு வாழைக் குலைகளுடன் ,வர்ணரியூப் லைற்றுகள் பூட்டப்பட்டிருக்கும். பூங்காவனத் திருவிழா என்பதே சிவன், அம்மன்

திருக்கல்யாணம் தான். இதற்காக வனம் வைக்கும் நிகழ்வு ஆலய வெளிவீதியில் நடை பெறும். அக்காலத்தில் வனம் வைத்தல் பிரமாண்டமாக நிகழ்ந்தது. அம்மன் குடியிருப்பதற் காக வனம் போல் இலைகுழைகளால் கட்டுவார்கள். வனத்தில் சகல வகையான மரக்கறிகளும் தொங்கவிடப்பட்டிருக்கும். புடலங்காய்கள் நீள நீளமாகக் கட்டப்பட்டிருப்பதுவும், பயிற்றங் காய்கள் மாலைகளாகப் போடப்பட்டிருப்பதும் தனி அழகாயி ருக்கும். அங்கு அம்மன் விக்கிரகம் கொலு வைத்துத் தவம் இருக்கும் காட்சி உருவாக்கப்படும். மாலை 6 மணிக்கு அம்மன் விக்கிரகம் கொலுவிருக்க சிவனை அழைத்துச் செல்வதற்கான சடங்குகள் இந்துக் குருமாரால் நடத்தப்படும்.

சிவன் விக்கிரகம் வனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு கோயில் வெளிப்பந்தலுக்கு அம்மனுடன் அழைத்து வரப்பட்டு திருக்கல்யாணம் நடைபெறும் நிகழ்வு நள்ளிரவு 1 மணியுடன் நிறைவு பெறும். இச்சடங்கு நடைபெறும் நேரத்தில் சுழலும் மேடையிலம் , சிகரத்தின் முதலாவது அடுக்கு மேடையிலும் கலை நிகழ்வுகள் நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த நாதஸ்வரக் கலைஞர்களின் தவில் கச்சேரிகள் களைகட்டும். சதுர் கச்சேரி என அழைக் கப்பட்ட சின்ன மேளக் கச்சேரிகளும் கலகலப்பூட்டும். சின்ன மேளம் என்ற கலை வடிவத்தை இப்போதைய தலைமுறையில் பலருக்குத் தெரியாது. சங்கீத வடிவத்துடன் கூடிய தவில் கச்சே ரியை பெரிய மேளமெனவும், இற்றைக் காலத்து டப்பாங் குத்து வடிவத்துடன் கூடிய சதுர்க் கச்சேரியை சின்ன மேளமெனவும் அழைக்கின்றார்கள்.

சின்ன மேளக் கச்சேரியை ரசிப்பதற்குத்தான் இளவட்டங்கள் பெருமளவில் கூடுவார்கள். அடக்க ஒடுக்கம் குறைந்த இளம் பெண்களை என்னடி சின்ன மேளக்காரியாட்டம் நிற்கிறாய் என அழைக்கும் மரபு இன்றளவும் மூத்தோரிடம் உள்ளது. கோயில் கள்தான் பாரம்பரிய கலைவடிவங்களைப் பேணிப் பாதுகாத்த கூடங்களாக அக்காலத்தில் திகழ்ந்தன. இசைக் கலைஞர்களின் திறமைகள் வெளிப்படும் இடமாக கோயில் திருவிழாக்களே திகழ்ந்தன. அக்காலத்தில் எனக்கு இவ்வளவு காசு தர வேண்டு மென ரேற் பேசி கலைஞர்கள் கோயில் கலை நிகழ்வுகளுக்கு செல்வது அரிதிலும் அரிது. இன்றோ இந்த நிலைமையைக் காணமுடியாது. வெளிநாட்டுப் பணத்தின் தாராள வரவு மூலை முடுக்கு கோயில் எல்லாம் பிரமாண்டமான திருவிழா நடை பெறும் நிலையை உருவாக்கிவிட்டது.

இசைக்கலைஞர்களும் பெரிய தொகை பேசி திருவிழாவுக் குச் செல்வதாக மூத்தோர்கள் குறைப்படுகின்றனர். புத்தூர் சிவன்கோயிலில் பூங்காவனத் திருவிழாவன்று வாணவேடிக் கைகள் வான் பரப்பை ஒளி மயமாக்கும் . வெடி எனப்பட்ட பட்டாசுகளும் கலகலப்பூட்டும். இந்தியாவிலிருந்து வந்த பொன் னுத்தாய் எனப்பட்ட பிரபல பெண் நாதஸ்வரக் கலைஞரின் கச்சேரியும் நடைபெற்றது. வில்லுப்பாட்டு நிகழ்வுகள் உள்ளூர்க் கலைஞர்கள் மூலம் நிகழ்த்தப்பட்டது.

இரவிரவாக மக்கள் கூட்டம் அலை மோதி திருவிழாவை இன்பப் பெருவிழாலாகப் பார்த்து ரசித்தார்கள். திருவிழாச் செலவுக்கென இளைஞர் கோஷ்டி ஊரில் பண வசூலில் ஈடு படும் வாழைக்குலைகள் யாவும் அன்பளிப்பாகக் கிடைத்தன.

திருவிழா முடிய அடுத்தநாள் வாழைக்குலைககளை ஏற்று வதற்கு லொறிகள் வந்த நிற்கும் கொழும்புச் சந்தைக்கு எடுத்துச் சென்று விற்றுக் காசாக்கும். அக் காசு அடுத்த வருடத் திருவிழாக்கு முற்பணமாக இருக்கும். புத்தூர் சிவன் கோயில் பூங்காவனத் திருவிழா இப்படியே கோலாகலமாக நடக்கும். ஆவரங்கால் சிவன் கோயிலில் இருந்து வடக்காக சில நூறு யார் தூரமும், தெற்காக புத்தூர் நோக்கி 500 யார் தூரத்திற்கு மேல் வீதியெங்கும் ஒளிமயமாக இருக்கும். வீதியின் இரு கரைகளிலும் தடி நட்டு முழு வாழை குலைகளுடன் நட்டு அதனுடன் இளநீர்க் குலை, தாளங்காய், கொக்கட்டி குழை கட்டி கலர் ரியூப் லைற் போட்டிருப்பார்கள். வல்வெட்டித்துறை ஜெயா லைற் மெசின் மின்சாரத்தை வழங்கும்.

கோயில் வளாகமெங்கும், வீதி யெங்கும் மின்னொளி பிர காசிக்கும் ஆவரங்கால் சிவன்கோயில் , புத்தூர் சிவன் கோயில் பூங்காவனத் திருவிழாக்களின் பிரமாண்டங்களையும் பார்த்து ரசிக்கவென இரவிரவாக பல்லாயிரக்கணக்கில் மக்கள் அலை மோதுவார்கள். ஆடிப்பூரத்தில் அம்மன் தீர்த்தம்முடிய அடுத்த நாள் நடைபெறும் பூங்காவனத் திருவிழாவுக்கு நிதி சேகரிப் பிற்கென இளைஞர்கள் ஊரெங்கும் கொப்பி கொண்டு செல் வார்கள். அக்காலத்தில் ஒவ்வொரு குடும்பமும் பத்து, இருபது ரூபாவெனத் தான் கொடுப்பார்கள் .

இது அக்காலத்தில் பெரிய காசு ஒரு பவுண் தங்கம் பத்து ரூபாவுக்கு விற்ற காலமும் இதற்குச் சற்று முன்பாகதான் இருந் தது . 1967 ஆம் ஆண்டில் மூன்று ரூபா முப்பது சதத்திற்கு 1 கலன் ( 5 போத்தல்) பெற்றொல் விற்கப்பட்டது. இவ்வாறு மிகக்

குறைந்த விலை வாசி இருந்த காலத்தில் எழுநூறு , எண்ணூறு ரூபா பூங்காவனத் திருவிழா நடத்தப் போதுமாயிருந்தது. வாழைக்குலைகள் , அபிஷேகப் பொருட்களை மக்கள் அன் பளிப்பாகக் கொடுப்பதும் , உடல் உழைப்பை வழங்குவதும் இத னைச் சாத்தியமாக்கியது.

ஆவரங்கால் சிவன்கோயில் பூங்காவனத் திருவிழா வரும் நாட்களில் ஊர்களில் உள்ள லொறிகள் எல்லாம் தாளங்காய், இளநீர், கொக்கட்டி குழைகளை ஏற்றி இறக்கும் வேலைகளில் ஈடுபடும்.

தோட்டங்கள் வைத்திருக்கும் ஊரவர்கள் வாழைக்குலை களை வாழை மரத்துடன் சேர்த்துக் கொடுப்பார்கள். 300,400 காட்டுத்தடிகளை கொண்டு பந்தல் அமைப்பார்கள் .

ஒரு நாள் இரவு திருவிழாவுக்காகப் பல நாட்கள் ஊர் கூடி மிக ஒற்றுமையாக உழைப்பார்கள். 200 வாழைக்குலைகள் வரையில் பருத்தித்துறை வீதி யெங்கும் , கோயில் வளாகம் , முன் வீதிகளென கட்டுவார்கள். தோப்பு கிராமத்தைச் சேர்ந்த துரைசிங்கம் என்பவர் ஆள் உயரத்திற்கு சோடி வாழைக் குலை களை வருடா வருடம் கொடுத்து வந்தார். அந்த வாழைக் குலை கள் கோயில் முன்புற வாயிலில் கட்டப்படும் .

அவ்வளவு உயரமான வாழைக்குலைகளை காண்பது அரிதிலும் அரிது. தோப்பு துரைசிங்கத்தின் தனித்துவமான வாழைச் செய்கையின் மூலம் அது சாத்தியமானது. ஆனாலும் , இவ் வாழைக்குலைகள் இடையில் பொருத்தி நீளமாக உருவாக்கப்பட்டதா என ரகசியமாக ரோச் லைற் அடித்துப்

பார்ப்போரும் இருந்தார்கள். பூங்காவனத் திருவிழா முடிய வாழைக் குலைகளைக் கொழும்புக்கு செல்லும் லொறிகளில் அனுப்பி விற்றுக் காசாக்கி விடுவார்கள். அப்பணம் அடுத்த வருடப் பூங்காவனத் திருவிழாவிற்கு முற் பணமாக இருக்கும். மல்லாகத்திலிருந்து சிகரம் வரவழைப்பார்கள், ஒரு செற் சிகரம் கட்டப்படும். கோயிலுக்கு வடக்காக ஒரு சிகரம் , தெற்காக ஒரு சிகரம் கோயில் வாசலில் ஒரு சிகரமென கட்டப்படும்.

சிகரங்கள் 3 அடுக்காக இருக்கும் 3 அடுக்கும் 3 மாடிகள் போல இருக்கும். ஆவரங்கால் சிவன் கோயில் சிகரங்களின் அழகும் புத்தூர் சிவன் கோயில் சிகரங்களின் அழகும் யாழ்ப் பாணத்தவர்களால் காலா காலம் பேசப்படும் ஒன்றாக இருக் கின்றது. சிகரங்களின் சோடனைகள், மின்சார பல்புகளின் அழகு ஆராதனைகள் இன்றளவும் பேசுபடு பொருள்களாகவே உள்ளன. 1955 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டு வரை கோலாகலமாக நடை பெற்ற பூங்காவனத் திருவிழாவில் வனம் வைப்பது தான் சிறப்பானதாக உள்ளது.

கோயிலுக்கு வடக்குத் திசையாகத்தான் வனம் வைப்பார் கள். வனம் வைக்கும் போது மரம், செடிகளை இணைந்து வைப்பார்கள் சோடனைகள் வைத்து வனத்தை அழகுபடுத்து வார்கள். சகலவகையான மரக்கறி வகைகளும் , வனத்தில் வைப்பார்கள் . பயிற்றங்காய் மாலைகள் , புடலங்காய் நீளமாகக் கட்டி அழகுபடுத்துவார்கள். சிங்கம், புலி தவிர்ந்த சகல வகையான மிருகங்களையும் உயிரோடு வைத்திருப்பார்கள். யானைக்குட்டி , மான் போன்ற விலங்குகள் அசலாக உள்ள காட்சி வனத்தின் உயிரோட்டமாக இருக்கும்.பூங்காவனத் திரு

விழாவையொட்டிக் கலை நிகழ்வுகள் களை கட்டும். தவில் கச்சேரியும் சதுர் (சின்ன மேளம்) திருவிழா கலகலப்பாக இருக் கும். தவில் கச்சேரிகளில் தங்கவேலு, என்.கே.பத்மநாதன், கானமூர்த்தி, பஞ்சமூர்த்தி ஆகியோர் பெயர் குறிப்பிடக் கூடிய வர்களாக இருந்தார்கள். அந்த நாளைய தவில் வித்துவான்கள் பணத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது மிகக் குறைவு. தெய்வ சந்நிதானத்தில் தாம் இசை வெள்ளத்தை வழங்குவது அதிலும் யாழ் குடாநாடே பிரமிப்புடன் பார்க்கும் பூங்காவனத்தில் இசை வழங்குவதைப் பேறாகவே கருதினார்கள்.

இள வட்டங்களைச் கலகலப்பூட்டும் சின்ன மேளங்களில் ( சதுர் கச்சேரி) புத்தூர் மார்க்கண்டு செற், ஆவரங்கால் செல்லத் துரை செற், புத்தூர் ஈழத்து சதாசிவம் கனகாம்பாள் செற் என்பவை குறிப்பிடத்தக்கவை. இந்தியாவின் காசியிலிருந்து ராம உடையார் பரம்பரையினர் கொடுத்த சிவிலங்கம் தான் மூலஸ் தானத்தில் உள்ளது. காசி சிவன் கோயிலுக்கு முன்பாக தெரி யக் கூடிய தூரத்தில் சுடலை இருப்பது போல ஆவரங்கால் சிவன் கோயில் இருந்து பார்த்தால் தூரத்தில் கருதடி இந்து மயான முள்ளதும் குறிப்பிடத்தக்கது.

1974 ஆம் ஆண்டு தை மாதம் நான்காவது உலகத் தமிழா ராய்ச்சி மகாநாடு நடைபெற்ற போது ஆவரங்கால் சிவன் கோயில் அருகாமை மைதானத்தில் நடைபெற்றதும் குறிப்பிடத் தக்கது.

திருமணப் பேச்சுகளில் ஈடுபடும் போது புறோக்கர் மாருக்கு மாப்பிள்ளை , பொம்பிளை காட்டுவதற்கு ராசியான கோயிலாக இச்சிவன் கோயில் திகழ்கின்றது. இங்கு நடக்கும் இந்த

முயற்சிகள் நிறையவே வெற்றிகளைத் தந்திருக்கின்றன. இதனால் புறோக்கர்களின் பார்வை அதிகம் விழும் கோயிலாக ஆவரங்கால் சிவன் கோயில்தான் உள்ளது. ஆடிப்பூரத்தில் சிவன் அம்மன் திருக்கல்யாணம் இரவில் முடிவடைந்த பின்தான் தவில் சதுர்கச்சேரிகள் நடக்கும்.

ஆவரங்கால் புத்தூர் சிவன் கோயில்கள் பூங்காவனத் திருவிழா 1955 முதல் 1966ஆம் ஆண்டு வரையில் போட்டிக்கு நடத்திய காலங்களை யாழ்ப்பாணத்தின் மூத்தோர்கள் பசுமை நினைவுகளாக கூறுகின்றனர். 1967 இல் ஒரு கோயில் ஒரு முறை புதுமையான ரசனைமிக்க திருவிழா நடத்தினால் அடுத்த முறை அடுத்த கோயில் அதனை வெல்லக்கூடியதாக நடத்தும். இந்த அழகு ஆலாசனைகளை வருடா வருடம் காத்திருந்து பார்த்திருந்து ரசித்தார்கள்.

ஆவரங்கால் புத்தூர் என்பன அருகாமை ஊர்கள் என்றாலும் பகைமை எதுவுமின்றி ஆரோக்கியமாக நடத்திய பூங்காவனத் திருவிழா கால வெள்ளத்தில் மறக்க முடியாத பதிவுக்குரியவை. 1967 இல் ஆவரங்கால் சிவன் கோயில் பாலஸ்தாபனம் செய்தபோது இந்தப் பூங்காவனத் திருவிழா போட்டிகள் நின்று போனது. 1982 இல் ஆவரங்கால் சிவன்கோயில் மகாகும்பாபிஷேகம் கண்டது. அக் காலத்தில் யுத்தத்தின் சத்தங்கள் யாழ்ப்பாணத்தில் கேட்கத் தொடங்கியது.

1983 ஆம் ஆண்டில் இயல்பு வாழ்க்கை பெருமளவில் சீர்குலைந்து போனது. இதனால் பூங்காவனத் திருவிழா போட்டியும் அதனால் கிடைத்த அழகு ஒளியும் நின்று போனது. இயல்பு வாழ்க்கை தற்போது மீளத்திரும்பிவிட்டது. ஆனாலும் முன்

னைய காலங்களைப் போல இல்லாமல் கோயிலுடன் அளவாகச் செய்யப்படும் ஓர் நிகழ்வாக பூங்காவனத் திருவிழா மாறி விட்டது. யாழ்ப்பாணத்தில் முன்னாளில் இந்து, கிறிஸ்தவ கோயில்களின் திரு விழாக்கள் இது போல நிறையவே நடந்துள்ளன. அவை யாவும் ஆவணப்படுத்த வேண்டியவை.

**நன்றி - தினக்குரல் வார வெளியீடு 2013 டிசெம்பர் 22, 29**




# யாழ்ப்பாணத்தில் கொம்யூனிக்கேசன் யுகத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்

யாழ்ப்பாணத்தில் எழுச்சியுற்று வீழ்ச்சியடைந்த கைத் தொழில் ஒன்றின் பதிவாக இன்றைய பத்தி மலர்கின்றது. யாழ்ப்பாணத்தில் 1983 யூலை மாதத்தின் பின்னர் உள்நாட்டு யுத்தம் தீவிரமடைய முன்பாக தொலைபேசிச் சேவைகள் பல பிரதேசங்களிலும் இருந்தது. தற்போதையதைப் போல எனக் கூற முடியா விட்டாலும் ஓரளவு இருந்தது.

தொலைபேசி சேவைகளை வழங்குவதற்கு இலங்கை தொலைத்தொடர்புத் திணைக்களமே அக்காலத்தில் இருந்த அரச நிறுவனமாகும். இந்த நிறுவனம் தனது இயலளவுக்கு ஏற்ப சேவைகளை வழங்கியது. இப்போது போல அக்காலத்தில் தொலைபேசிச் சேவைகளை இலகுவாக யாரும் பெறமுடியாது.

உயர் அரச அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,

அரசியல் உயர் பிரமுகர்கள், பெரும் வணிகர்கள், அரச திணைக் களங்கள், பெரிய தபாலகங்கள், பொலிஸ் நிலையங்கள், புகை யிரத நிலையங்கள் ஆகியவற்றில்தான் தொலைபேசிகளைக் காணமுடியும்.

அதுவும் தொலைத் தொடர்பு திணைக்களத்தில் இரண்டு நிமிடம், மூன்று நிமிடம் என பதிவு செய்த பின்புதான் அழைப் புக்களைப் பெறமுடியும். அதனால் அழைப்புகளுக்காக மணிக் கணக்கில் காத்திருக்க வேண்டியும் இருந்தது.

தொலைபேசியில் கதைப்பது என்பது அக்காலத்தில் பணக் காரத்தனமான ஒன்றாகவே இருந்தது. யாழ்ப்பாணத்தில் மட்டு மல்ல இலங்கை முழுவதும் இவ்வாறான நிலைதான் இருந்தது.

இப்போதையதுபோல கைத்தொலைபேசி யுகம், அன்ரொய்ட் யுகம் அப்போது இல்லை.

தொலைபேசி இணைப்புக்களும் செம்புக் கம்பிகளால் தொலைபேசித் தூண்கள் மூலமாகவே வழங்கப்பட்டது.

முதன்மை வாய்ந்த நகரப் பிரதேசங்களில் மட்டுமே தொலை பேசி பெறும் வசதி இருந்தது.

கிராமப்புறங்களில் இருந்தோர் நகரப் புற சூழலுக்கு வர வேண்டி இருந்தது.

இலக்கங்களை கைகளால் சுழற்றி பாவிக்கும் கிரகம்பெல் காலத்துக்கு சற்று பிந்திய தலைமுறை தொலைபேசிதான்

நாடெங்கும் இருந்தது.

1994 ஆம் ஆண்டில் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற சந்திரிகா தலைமையிலான அன்றைய பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தொலைத் தொடர்பு துறையில் செய்ய ஆரம்பித்த புரட்சிகளின் தொடர்ச்சி தான் இன்றைய நவீன யுகம்.

ஏழை வீட்டிலும் கைத்தொலைபேசி இருக்கக்கூடியதாக அது அத்தியாவசியப் பொருளாகி விட்டது.

எமது யாழ்ப்பாண கொம் யூனிக்கேசன் யுகம் நோக்கிப் பயணிப்போம். 1983 இன் பின்பாக உள்நாட்டு யுத்தநிலை தொலைத்தொடர்பு சேவைகளில் அவ்வப்போது தேக்க நிலையை ஏற்படுத்தியது. ஆனாலும் தொலைத்தொடர்பு நிலையங்களில் பொதுமக்கள் சேவையைப் பெறும் நிலையும் படிப்படியாக வளர ஆரம்பித்தது.

1977 இன் பின் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி எம்மவர் தொழில் தேடிச் செல்லத் தொடங்கினார்கள்.

1980 முதல் சிறிதளவாகவும், 1983, 85, 87, 90, 95, 2000 ஆண்டுக் காலங்களில் எம்மவர் பெருந்தொகையாக ஆண்டுகளின் பின்பு பெரிய தொகையிலும் எம்மவர்கள் மேற்கு ஐரோப்பிய, வடஅமெரிக்கா, ஓசானிக் நாடுகளை நோக்கி புலம்பெயர ஆரம்பித்தார்கள்.

இதனால் யாழ்ப்பாணத்தில் தொலைத்தொடர்பு நிலையங்கள் சில இயங்கினாலும் அவற்றில் காத்திருப்போர் எண்

ணிக்கை பெருகியது. ஏஜென்சி போஸ்ற் ஒவ்வீஸ் Agency post office என பொதுமக்கள் அழைத்த முகவர் தபாலகங்களிலும் தொலைபேசி வசதியைப் பெற்றார்கள்.

யுத்தம் தீவிரமாக சில பிரதேசங்களில் நடந்தபோதெல்லாம் அங்கு தொலைபேசி சேவைகள் சீர்குலைந்தன.

அக்காலத்தில் ரெலக்ஸ (Telex) எனும் வகையான தகவல் தொழில்நுட்பமும் நாடெங்கும் இருந்தது. 1985 ஆம் ஆண்டளவில் தொலைநகரி என நாம் அழைக்கும் பக்ஸ் வந்தபோது fax மெல்ல மெல்ல காணாமற்போய் முற்றாகவே செயலிழந்தன.

1990 யூன் 15 ஆம் நாளன்று மூன்றாம் ஈழப்போர் ஆரம்பமாகிய சில நாட்களில் யாழ்ப்பாணத்தில் தொலைத்தொடர்பு சேவைகள் முற்றாகவே செயலிழந்து போனது.

பொதுமக்கள் 1990 யூன் முதல் 1991 ஒக்ரோபர் வரையில் கேரதீவு - சங்குப்பிட்டி ஊடாகவும், 1991 நவம்பர் முதல் 1993 மே வரையில் இயக்கச்சி கொம்படி - ஊரியான் ஊடாகவும், 1993 மே முதல் 1996 மே வரையில் பச்சிலைப்பள்ளியின் கிளாலி ஊடாக பூநகரியின் ஆலங்கேணி, நல்லூர் சென்று தமது வெளியிடப் பயணங்களை மேற்கொண்டனர். அப்போது தமது உறவுகளுடன் தொலைபேசி மூலம் கதைப்பதற்கு வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களுக்குச் சென்றார்கள்.

தனியார் தொலைத்தொடர்பு நிலையங்களில் மணிக்கணக்கில் காத்திருந்தார்கள். தொலைபேசியில் கதைத்தார்கள். வெளிச்செல்லுக்கு அழைப்புக்கு உச்ச கட்டணம், உள்வரும்

அழைப்புக்கு நிமிடத்துக்கு 5 ரூபா எனக் கட்டணம். நாள்முழுக்க இரவு, பகல், சாமம் பாராது காத்திருந்தார்கள். இன்பங்களை, துன்பங்களை எல்லாம் ஒலி வடிவில் பரிமாறினார்கள். தமது உறவுகளை நேரில் கண்டதுபோல தொலைபேசியில் கதைத்த போது ஆனந்தப்பட்டார்கள். ஆனால் வெளிநாடுகளில் வாழந்த எம்மவர்கள் தொலைபேசியில் கதைத்து ஆறுதல் பட்டாலும் தமது உழைப்பின் பெரும்பகுதி தொலைபேசிக்காக கரைகிற தென அவதிப்பட்டார்கள். நாலு பணம் உழைக்க முன்பே கடன் பட்டு கடன்பட்டு கடன்காரர்களாகவே பலர் வாழ்க்கையை கொண்டு செல்கின்றார்கள்.

காலச்சக்கரம் மெல்ல மெல்ல உருண்டோடியது. 1996 மே மாதத்தில் யாழ்ப்பாண குடாநாட்டின் நிலப்பரப்பு மீதான ஆளுகை அரசாங்கத்தின் வசம் முற்றாக வந்தது.

ஆறு வருடங்கள் செயலற்றுப்போன தொலைத்தொடர்பு திணைக்களம் அரசகொள்கையால் ஸ்ரீலங்கா ரெலிகொம் என புத்துயிர் பெற்றது. தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்று. யாழ். பண்ணையில் மேலெழும்பியது.

கறுத்த பிளாஸ்ரிக் கேபிள் வழியாக தொலைபேசி இணைப் புக்கள் வழங்கும் பணி மெல்ல மெல்ல ஆரம்பித்தது.

வடமராட்சியிலும் தொலைத்தொடர்பு கோபுரம் ஒன்று எழுந் தது. அங்கும் சேவைகள் மெல்ல மெல்ல ஆரம்பித்தது.

1990 - 1996 காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கானோர் புலம் பெயர்ந்து வெளிநாடுகளுக்குச் சென்றமையால் தொலைபேசி

உரையாடலுக்கான தேவை அதிகமாக எழுந்தது.

பண வசதி படைத்தோர், சில வணிகர்கள் தொலைபேசி இணைப்புக்களைப் பெற்றனர்.

தொலைத்தொடர்பு நிலையங்கள் பல இயங்க ஆரம்பித்தன. வீடுகளில் தொலைபேசி இணைப்புக்களை வழங்கும் தொலைத்தொடர்பு நிலையங்கள் இயங்க ஆரம்பித்தன. இந்த நிலையங்களில் பல மணிக் கூடுகள் சுவரில் மாட்டப்பட்டன. இலங்கை நேரம், லண்டன் நேரம், கனடா நேரம், சுவிஸ், இத்தாலி, பிரான்ஸ் நேரம், அவுஸ்ரேலிய நேரம் எனப் பல நேரம் காட்டும் மணிக் கூடுகளாக இருந்தன.

கேபிள் வழியாக தொலைபேசி இணைப்பை வழங்கமுடியாத உள் கிராமங்களுக்கு என பிரத்தியேகமாக மோட்டோறோலா இணைப்பு வழங்கப்பட்டது.

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்துடன் ஒத்திசைவான வகையில் மோட்டோறோலா கம்பனியும் குடாநாட்டில் இயங்கி யது. மோட்டோறோலா இணைப்புள்ள தனியார் தொலைத் தொடர்பு நிலையங்களில், வீடுகளில் ரி.வி அன்ரனா போன்ற தொரு அன்ரனா உயர இருக்கும். அதிலிருந்து வரும் வயர் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை உபகரணம் போன்றதொரு பெட்டியுடன் இணைக்கப்பட்டு சேவை பெறப்படும்.

குறைந்த எண்ணிக்கையான இயலளவு உள்ள மோட்டோ றோலா, ரெலிகொம் பரிவர்த்தன நிலையம் ஊடாக சேவையைப் பெறுவதில் மணிக் கணக்காகக் காத்திருக்கும் நிலை உரு

வாகியது.

குறிப்பாக மோட்டோறோலா சேவையில் நெருக்கடி நில வியது. இதனால் வெளிச்செல்லும் அழைப்பை உடனுக்குடன் பெறமுடியாத நிலை இருந்தது.

பொது மக்களால் வெளிநாடுகளுக்கு மிகக் கூடுதலாகவும் நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு அடுத்ததாகவும் வெளிச் செல்லும் அழைப்புக்கள் எடுக்கப்பட்டன.

உள் வரும் அழைப்புக்களுக்கும் பணம் வாங்கும் முறைமை எல்லா இடமும் இருந்தது.நிமிடத்துக்கு மூன்று ரூபா, ஐந்து ரூபா எனக் கட்டணங்கள் இருந்தன. இதனைக் கணிப்பிட தனியான மணிக்கூடு இருந்தது. (Stop watch)

இக்காலத்தில் தரைவழிப் போக்குவரத்து முற்றாக தடைப் பட்டதால் கப்பல், விமானம் மூலமே வெளியிடப் பயணங்கள் இருந்தன.

தொலைபேசி வசதிகள் இங்கேயே கிடைத்ததால் அதற்காக வென பயணப்பட்ட நிலைமை ஒழிந்தது.

தொலைபேசி உள்ள வீடுகளில் இரவிரவாக விழித்திருந்து தமது வெளிநாட்டு உறவுகளுடன் கதைத்து தமது மனச் சுமை களை இறக்கினார்கள். தொலைத்தொடர்பு நிலையம் வைத் திருந்தோர் புதிய வகைப் பணக்காரர் வரிசையில் சேர்ந்தனர். இன்னும் நிலையங்களை அமைப்பதில் போட்டி யுகம் ஒன்று உருவாகியது. ஒரு இணைப்பை வைத்திருந்தோர் பல இணைப்

பைப் பெற்று வியாபாரத்தை விரிவாக்கினார்கள்.

தொலைத்தொடர்பு நிலையங்கள் பெருகப் பெருக வியாபாரம் மந்தமடைந்தது.

நவீன உலகத்தைப் புரிந்து கொண்ட புத்திசாலிகள் கணனியுகம் மெல்ல மெல்லத் தலையெடுத்தபோது அதனுள் தம் காலடிகளைப் பதித்தார்கள். கணனி, போட்டோக்கொப்பி, பக்ஸ் எனச் சேவைகளை விரிவாக்கினார்கள். இணைய, மின்னஞ்சல் சேவைகளை வழங்கவும் தம்மைப் பழக்கப்படுத்தினார்கள்.

கேபிள் தொலைபேசி, CDMA இணைப்புக்கள் பரவலாகக் கிடைக்க ஆரம்பித்தபோதும், கைத்தொலைபேசிகள் பரவலாக யாவரினதும் கைகளிலும் வர ஆரம்பித்தபோதும் யாழ். மண்ணின் கொம்யூனிக்கேசன் யுகம் ஒரேயடியாக படுத்துவிட்டது.

இணைய, மின்னஞ்சல் யுகம் வெற்றிநடை போட ஆரம்பித்தது.

வீட்டுக்கு வீடு கணனிகளும், ஸ்மார்ட் போன்களும் ரவுட்டர்களும், லப்டொப்களும், டொங்குள்களும், மொபைல் புரோட்பான்டுகளும் வர அத்தொழிலும் சரிந்து விட்டது.

கால மாற்றத்தை உள்வாங்கி கூரியர் சேவை, டிஜிற்றல் பனர் எனத் தொழிலை மாற்றியோர் தப்பிப் பிழைக்கின்றனர். ஏனையோர் காணாமற் போய்விட்டனர்.

நவீன இலத்திரனியல் தகவல் தொழில்நுட்ப யுகத்தைப்

புரிந்து கொள்பவர்கள் தான் நீடித்து நிலைப்பார்கள் என்பதே நியதியாகிவிட்டது. இலத்திரனியல் யுகத்தில் பெரும் பண முதலீடு செய்வதும் சவாலான ஒன்றாகி விட்டது.

யாழ்ப்பாண நினைவுகளில் தகவல் தொழில்நுட்பங்களின் வரவுகளும் காலமாற்றங்களும் அதனால் ஏற்பட்ட வாழ்வியல் மாற்றங்களும் விரிவாக ஆராயப்பட வேண்டியவை ஆழமாக பதிவு செய்யப்பட வேண்டியவை.

இது போல நாட்டின் ஏனைய பிரதேச மக்களும் தமது வாழ் வியலுடன் இணைந்த தகவல் தொழில்நுட்ப மாற்றங்களை ஆவணப்படுத்த வேண்டும் என்பது என் வேண்டுகோளாகும்.

**நன்றி - தினகரன் வார மஞ்சரி**




# வடபகுதி புகையிரதச் சேவைகள்

புகையிரதம் இலங்கையில் ஓடத்தொடங்கி நூறு ஆண்டுக ளுக்கு மேலாகிறது. அவ்வாறு ஓடத் தொடங்கிய புகையிரதம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக சேவையில் இருக்க வில்லை. ரெயின் என்று ஆங்கிலத்தில் எல்லோரும் அழைக்கும் இந்தப் புகையிரதம் காணாத தலைமுறையொன்றே இப் பிரதேசங் களில் இருக்கிறது.

யாழ்ப்பாண மண்ணின் வாழ்வு, வளம் ஆகியவற்றுடன் பின்னிப்பிணைந்து பண்பாட்டுடன் வேரூன்றிய ஒன்றாக இந் தப் புகையிரதமும் இருந்தது. காங்கேசன்துறை முதல் கொழும்பு வரையாக இந்தப் புகையிரதங்கள் நாளாந்தம் ஓடியது. யாழ்ப் பாணத்தின் பொற்காலங்களில் ஒன்றாக இன்றும் சிறப்பாகக் கூறப்படுகிறது. இலங்கையில் மிகத் தொன்மை வாய்ந்த

திணைக்களங்களில் ஒன்றாகிய புகையிரத திணைக் களத்தின் சேவை யாழ்.மண்ணின் வியாபித்திருந்த காலத்தின் நினைவுகளின் மீது நடந்து பின்நோக்கி போவோம்.

பிரித்தானியர் காலத்திலேயே கொழும்பில் இருந்தும் பிற தென்பகுதி மாவட்டங்களில் இருந்தும் வடபகுதிக்குப் புகையிரதச் சேவை ஆரம்பிக்கப்பட்டு விட்டது. யாழ்.குருநகர் கடற்கரையிலிருந்து யாழ்ப்பாணம் பிரதான புகையிரத நிலையம் நோக்கி கடல் உணவுப் பொருட்கள் எடுத்துவர இருந்த புகையிரதப் பாதை இன்று முற்றாகவே அழிவடைந்த நிலையில் உள்ளது.

காங்கேசந்துறையில் இருந்து கொழும்புக்கு இரு மார்க்கங்களாக நாளாந்தம் பல புகையிரதச் சேவைகள் நடைபெற்றன. அதிகாலை 5 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் 38 ஆம் இலக்க புகையிரதம் உத்தரதேவி எனப்பட்டது. அதேநேரம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வரும் 7 ஆம் இலக்க புகையிரதம் யாழ்தேவி என அழைக்கப்பட்டது.

வடபகுதித் தமிழர்களை பனையாலும் நல்லூராலும் அடையாளப்படுத்தியது போல யாழ்தேவி புகையிரதமும் அடையாளப்படுத்தியது. இதுவே மிக பிரபலமான புகையிரதமாக இன்றும் ஓமந்தை வரையில் யாழ்தேவி ஓடிக்கொண்டு தான் இருக்கிறாள். காலை 7 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி 18 ஆம் இலக்க புகையிரதம் பணப்பரிமாற்றம் செய்யவென ஓடியது. இது புகையிரத நிலையங்களில் சேரும் ரிக்கெட் வருமானத்தைப் பெற்றுக்கொண்டது.

கே.கே.எஸ். எனச் சுருக்கமாக அழைக்கப்பட்ட காங்கேசன் துறையிலிருந்து கிளிநொச்சி நோக்கி ஒரு புகையிரதம் குறுந் தூர சேவையாகப் புறப்படும்.

புகையிரதம் முன்னாளில் கோச்சி என்றே பொதுவாக அழைக்கப்பட்டது. அப்போது யாழ்.மண்ணின் விகடகவி ஒருவர் வீதியால் சென்றுகொண்டிருந்தபோது பெரிய வட்ட வடிவத் தட்டில் கோச்சி வரும் கவனம் என்ற சொல்லைக் கண்டார். அந்நாளைய யாழ்ப்பாணத்தில் கோச்சி என்ற சொல் தாய் என்ற கருத்தையும் தந்தது. அதனை மனதில் வைத்த புலவர் கோச்சி என்ற சொல்லின் கீழ் கொப்பரும் வருவார் கவனம் என எழுதிவிட்டு வந்தாராம்.

புகையிரதம் யாழ். மண்ணில் ஓடத்தொடங்கிய காலத்தில் கோண்டாவில் பிரதேச மக்கள் தமது கோழிகள் அடை கிடக்காதனவும் முட்டை இடாதெனவும் அரசியல் பிரமுகர் ஒருவரால் தூண்டப்பட்டு புகையிரத வரவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்ததாக மூத்தோர் ஒருவர் கூறினார்.

மீண்டும் எங்கள் புகையிரதத்துக்கு வருவோம். காங்கேசன் துறையிலிருந்து சுன்னாகம் நோக்கிப் புறப்பட்டு புகையிரம் ஒன்று அங்கு நல்ல தண்ணீரை தேவையைப் பொறுத்து எடுத்து வர பயணிக்கும். மதியவேளை 8 ஆம் இலக்க பொருள்களை ஏற்றும் புகையிரதம் (Goodstrain) ஒன்று பயணத்தை ஆரம்பிக்கும். 1980 களின் ஆரம்பித்தில் கொழும்பில் இருந்து காங்கேசன் துறைக்கு இரு மார்க்கங்களிலும் நகர்சேர் கடுகதிப் புகையிரதம் (Intercity Express) பயணத்தை ஆரம்பித்தது.

வரையறுக்கப்பட்ட புகையிரத நிலையங்களில் மட்டும் பயணத்தை ஆரம்பித்து 6 மணித்தியாலங்களில் உரிய இடத்தை அடைந்தது. கட்டணம் உயர்வாயினும் விரைவு அதிக வசதிகள் உள்ள இச் சேவையை நடுத்தர, வசதி படைத்த குடும்பத்தவர்கள் விரும்பினார்கள். மதியத்தை அண்மித்த 11.45 மணிக்கு கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி 37 ஆம் இலக்கப் புகையிரதம் பயணத்தை ஆரம்பிக்கும்.

அதேநேரம் Eight down என இலக்கமிடப்பட்ட புகையிரதம் காங்கேசன்துறையில் இருந்து கொழும்பை நோக்கி பயணத்தை ஆரம்பிக்கும். புகையிரதத் திணைக்களத்தின் வகைப்படுத்தலில் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கி வரும் புகையிரதங்களை Down train என்பார்கள்.

காங்கேசன்துறையிலிருந்து பளை நோக்கி பிற்பகல் வேளைகளில் 2 புகையிரதங்கள் பயணம் செய்யும். இந் நாளில் பாடசாலைகள் காலை 8.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரையும் நடைபெறுவது வழக்கம். அதனால் ஒரு புகையிரதம் பாடசாலைப் பிள்ளைகளை ஏற்றிவரும் நோக்குடன் பளை சென்றுவரும். இன்னுமொரு புகையிரதம் இரவு செல்லும் தபால் புகையிரதத்துக்கான பார்சல்களை பளை வரையில் ஒப்படைத்தும் செல்லப் புறப்படும்.

இவையிரண்டிலும் பயணிகள் செல்லமுடியும். ஆனால் ரெயின் சிலோவாகத்தான் செல்லும்.

கொழும்பு கொலன்னாவ, உறுகொடவத்த எண்ணெய்க் குதங்களிலிருந்து சுன்னாகம் எரிபொருள் களஞ்சியத்துக்கு

வரும் ரெயின் ஒயில் ரெயின் (Oil train) எனப்படும். இது கையி ருப்பை பொறுத்து வடக்கு வடக்கு நோக்கிய தனது பயணத்தைச் செய்யும். இதிலும் ஓரிரு பயணிகள் பெட்டிகள் இணைக்கப்பட்டி ருக்கும்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் இருந்து மன்னார், முருங்கனில் கிளே (Clay) எனும் ஒரு வகை கறுப்பு நிற மண் ஏற்றி வரவெனவும் ஒரு ரெயின் பயணம் செய்யும். இதிலும் பயணிகள் பெட்டி இரண்டொன்று இருக்கும். ஒயில் ரெயின். கிளே ரெயின் ஆகியவையும் சிலோவாகத் தான் பய ணிக்கும்.

மாலை 6 மணி 05 நிமிடத்திற்கு காங்கேசன்துறையிலிருந்து கொழும்பை நோக்கியும் அங்கிருந்து அதேநேரம் கொழும்பிலி ருந்து காங்கேசன்துறை நோக்கியும் பயணிக்கும் ரெயின்கள் மெயில் ரெயின் (Mail Train) எனப்படும். மெயில் (Mail) என்றவுடன் இக் காலத்தைய மின்னஞ்சலை (e mail) நினைத்துவிடாதீர்கள். இது கடிதங்களை பார்சல்களை காவிச் செல்ல நிறையப் பய ணிக்கள் பெட்டிகளுடன் சேவையிலீடுபடும் பிரபலமான ரெயில் ஆகும். உழைக்கும் மக்களால் நேரச் சிக்கனத்தை விரும் பும் மக்களால் பெரிதும் இந்த தபால் புகையிரதம் விரும்பப்படும். ஏனெனில் அரைகுறைத் தூக்கமாயினும் இரவோடிவாக தமக் குரிய இடங்களைச் சென்றடைந்து விடலாம் அல்லவா. இந்த மெயில் ரெயின் காரணமாக வடக்குக்கும் தெற்குக்குமான கடிதம் பார்சல் போக்குவரத்து மிகத் துரிதமாக நடைபெற்றது.

இரவு 8 மணி 45 நிமினடத்துக்கு பொருட்களையும், ஓரிரு பெட்டிகளில் ஆட்களையும் ஏற்றிச் செல்லும் குட்ஸ் ரெயில்

(Goods train) தனது பயணத்தை காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி ஆரம்பிக்கும். இதனைப் புகையிரதத் திணைக்களத்தினர் shunting train என்பார்கள். அக்காலத்தில் புகையிரத நிலையம் கப்பல்துறைமுகம், சீமெந்து தொழிற் சாலை காரணமாக காங்கேசன்துறை வளம் பொருந்திய பெரும் பட்டினமாயிருந்தது. கடந்த 30 வருட உள்நாட்டு யுத்தம் இப் பட்டனத்தைச் சீரழித்து விட்டது. புகையிரதம் செல்லும் பாதைகளில் புகையிரத நிலையங்கள் இருந்த பிரதேசங்கள் சிறுநகரமாக எழுச்சி கண்டன. புகையிரத நிலைய உத்தியோகத் தர்கள், தொழிலாளர் விடுதிகள் நிறைந்த பிரதேசங்கள் பொலிவு பெற்று விளங்கின.

கொழும்பில் வெளியாகும் மும்மொழித் தினசரிப் பத்திரி கைகள் விடி காலையில் வடக்கின் அனைத்துப் பிரதேச மக்க ளின் கைகளிலும் தவழ்ந்து வாசிப்பு பழக்கத்தை விருட்சமாக் கியது. மக்கள் அறப்பண்பு மிக்கவர்களாயினர். கொழும்பி லிருந்து வெளியாகும் பத்திரிகைகளின் நிருபர்கள் வடக்கி லுள்ள புகையிரத நிலையங்களுடாக கடித, பார்சல் (Letter Parcel) என்னும் முறையின் மூலம் செய்திகளை அனுப்பினார்கள்.

செய்திகளை எழுதி கடித உறையினுள் இட்டு பத்திரிகை நிறுவனப் பெயரை எழுதி மே\பா புகையிரத நிலைய அதிபர், கொழும்பு கோட்டை என எழுதி கடித உறையின் மேற்புறத்தில் கடித பார்சல் (Letter Parcel) என எழுதுவார்கள். முத்திரைக் கட்ட ணம் செலுத்தி பற்றுச்சீட்டு பெறுவார்கள். கடித உறையின் கீழ் புறத்தில் தயவுசெய்து அழைக்கவும் (Please dial) என எழுதி பத்தி ரிகை நிறுவனத்தின் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிடு

வார்கள். மெயில் ரெயில் மூலமே இச் சேவை நடைபெறும். அடுத்த நாள் காலை கொழும்பிலுள்ள பத்திரிகை நிறுவன ஊழியர் இவற்றைச் சேகரித்துச் செல்வார்கள். தவறினால் புகையிரதநிலைய அதிபர் தொலைபேசி மூலம் அறிவிப்பார்கள். அரச உத்தியோகத்தர்கள் கடமைக்குச் செல்வதாயின் புகை யிரத ஆணைச்சீட்டு (Railway warrent) எடுத்து தமது சம்பளப்படி நிலைக்கேற்ப 1 ஆம் , 2 ஆம் , 3 ஆம் வகுப்புகளில் பயணத்தை செய்வார்கள். விடுமுறைக் காலப் பயணச் சீட்டை எடுத்து குடும் பத்துடன் குதூகலமாக சம்பள அளவிற்கேற்ற வகுப்பகளில் பயணிப்பார்கள்.

1950, 60, 70 களில் விடுமுறைக்கால புகையிரத ஆணைச் சீட்டின் 3 செற்றையும் கொடுத்து பலாலி - கொழும்பு, சீனக்குடா விமானப் பயணங்களும் நடந்தது. யுத்தத்தின் சத்தம் புகையிரத் தையும் விட்டு வைக்கவில்லை. 1984 இல் தெற்கு நோக்கிச் சென்ற ரெயின் கிளிநொச்சி முறிகண்டியில் குண்டு வைத்து தாக்கப்பட்டது. 1990 ஜூன் 15 இல் வடக்கில் தீவிரம் பெற்ற யுத்தம் ரெயின் வரவை மதவாச்சி வரை மட்டுப்படுத்தியது. பின்னாளில் வவுனியா, தாண்டிக்குளம் ஓமந்தை என வரவு நீண்டது. வடக்கின் ரெயின் தண்டவாளங்களும் சிலிப்பர் கட்டைகளும் யுத்தத்தின் காப்பரண்களாயின. புகையிரத நிலையங்கள் அழிக்கப்பட்டன. முடிவுற்ற யுத்தம் ரெயினை யாழ்ப்பாணம் நோக்கி வரவழைக்கும் வேலைகளை செய்ய வழிவகுத்து உள்ளது. அந்தப் பொற்காலத்தை மீண்டும் காண்போம்.

**நன்றி - தினகரன் வாரமஞ்சரி 2012 மார்ச் 25**



# எம்மவர் வாழ்விலும் நடைபெற்ற மணமகன் இல்லாத திருமணங்கள்

போர் தந்த புலம்பெயர்வு யாழ்ப்பாண பண்பாட்டிலும் திருமணமுறையிலும் புதுமைகளை புகுத்தியது. யாழ்ப்பாணத்தில் மணமகளை மட்டும் வைத்து திருமணக் கொண்டாட்டங்களை நடத்திய நினைவுகைள இன்று மீட்டுப் பார்ப்போம்.

திருமண வைபவமொன்று நடைபெறுவதற்கு மணமகன், மணமகள் இருவரும் தேவை. இந்து மதத் திருமணமாயின் மணமகனின் சகோதரி தோழியாகவும் மணமகளின் சகோதரன் தோழனாகவும் இருந்து மதச் சடங்கு சம்பிரதாயங்கள் செய்வது வழமையானதாக இருக்கும்.

மணமகன் இல்லாது மணமகனின் சகோதரி தோழியாக இருந்து மணமகளை வைத்து மண நிகழ்வுபோல் பாவனை செய்யும் சடங்கு முறையான நிகழ்வுகள் ஒரு காலத்தில் யாழ்.

மண்ணில் நிகழ்ந்தன.

இவையும் காலத்தின் தேவைகள் தான். இதையொத்த நிகழ்வுகள் தற்போது நடைபெறுவது மிக அரிதாக இருக்கலாம். ஆனால் எமக்குள் புகுந்து அருகிவிட்ட இந்தப் புதிய பண்பாட்டின் வரவை ஆவணப்படுத்த வேண்டுமல்லவா.

1980 களிலும் 1990 களிலும் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் போர் வெம்மையிலிருந்து தம்மைக் காக்கவும், சிலர் பொருளாதார மேம்பாடு கருதியும் மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, ஓசானிக் நாடுகளுக்கு புலம்பெயர்ந்தார்கள்.

அங்கு சென்று அரசியல் அகதி அந்தஸ்து கோரிய இவர்களுக்கு தாயகம் வந்து திருமணம் செய்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. ஆனாலும் இவர்களுக்கு மணப்பெண் தேட வேண்டும். மணமகளைப் பார்த்து புலம்பெயர்ந்த நாட்டில் உள்ள இளைஞனுக்கு பிடிக்கவேண்டும். பெண் பார்க்கும் படலத்தை படப்பிடிப்பாளர்கள் கனகச்சிதமாக நிறைவேற்றிக் கொடுத்தார்கள்.

ஊரில் நடைபெறும் மங்கல நிகழ்வுகளில், திருமணமாகாத இளம்பெண்களை பலகோணங்களிலும் படம் பிடிப்பார்கள். மங்கல நிகழ்வுகள் வீடியோ கசற்றாக பார்சலில் வெளி நாடுகளுக்கு பறக்கும். இப்போதுள்ளது போல சி.டி, டி.வி.டி தொழில் நுட்பங்களும், Face book, email, Viber, Twiter, போன்றவை அப்போது இல்லை.

அதனால் பார்சலில் பறந்த வீடியா கசற் புலம்பெயர் நாடுக

ளில் உள்ள எமது இளைஞர்களால் பார்க்கப்படும். அப்போது அதில் பல கோணங்களிலும் படம் பிடிக்கப்பட்ட இளம்பெண்க ளின் மீது கவனம் திரும்பும். தமக்கு இந்தப் படத்தில் இன்ன கலர் உடுப்புடன் இருக்கும் பெண்ணை திருமணம் பேசி அனுப் புங்கோ என கடிதத்தில் எழுதுவார்கள். தொலைபேசி வசதி கிடைக்கும்போது கதைப்பார்கள். அதை வைத்துக்கொண்டு ஊரில் பெண்பார்க்கும் படலம் தொடங்கும். ஏற்கனவே உள்ளூர் இளைஞனை இரகசியமாகக் காதலித்த பெண்கள் சிலர் வெளிநாடு போகும் ஆசையில் அவனைக் காய்வெட்டி விட்ட சம்பவங்களும் இதனால் நடந்துள்ளன.

ஐந்து பெண் பிள்ளைகளைப் பெற்றால் அரசனும் ஆண்டி யாவான் என்பார்கள் எம் முன்னோர்கள். ஆனால் ஐந்து அழ கான பெண்பிள்ளைகளைப் பெற்று ஆண்டியாகப் போக விருந்த தகப்பன் படப்பிடிப்பாளர்களின் புண்ணியத்தால் லண டன், சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், கனடா என பிள்ளைகளை சீத னம் கொடுக்காது அனுப்பினார்கள். இங்கு ராஜபோக வாழ்க்கை கிடைத்தது.

சீதனம் பெண்ணின் திருமணத்துக்கு தடைக்கல் என்ற எம்மவரின் கோட்பாடும் இங்கே வெளிநாட்டுக் கல்யாணங் களால் கனிசமான அளவு உடைந்துபோனது.

பெண்ணைப் பெற்றவர்கள் வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு அவளின் திறமையால் பல சகோதரரை வெளிநாட்டுகளுக்கு எடுப்பித்து “வெளிநாட்டுக்காரர் குடும்பம் “என்று பெயர் எடுத் தார்கள்.

வெளிநாட்டுக்கு பெண்ணை எடுப்பதை பார்சல் ஒன்று எனக்கு வருகிறது என நகைச்சுவையாக கதைக்கும் வழக்கமும் வெளிநாட்டு இளைஞர்கள் மத்தியில் இருந்துள்ளது.

நேரில் பொருளைப் பார்க்காது புகைப்படத்தில் பார்த்து பார் சலில் பொருளை வாங்கும் முறை என்பது போல இது இருப் பதால் அங்குள்ள எமது இளைஞர்கள் எனக்கொரு பார்சல் வருகிறது என்றார்கள். இது வேடிக்கையாகக் கூறப்பட்ட ஒரு சங்கேத குறியீடுதான்.

வெளிநாட்டுக்குப் பெண்ணை அனுப்பும் எம்மவர்களின் சடங்கு முறைக்குச் செல்வோம். பெண்பார்க்கும் படலம் தொடங் கும். சம்பந்தம் முற்றுக்கட்டியவுடன் விருந்துக்கு ஆயத்தம் செய் வார்கள். இதனைச் சம்பந்தக் கலப்பு என்பார்கள். நிச்சயிக்கப் பட்ட மணப்பெண்ணை ஒரு சுபநாள் தீர்மானிக் கபட்டு மண மகனாகிய மாப்பிள்ளையின் சகோதரி, இல்லா விட்டால் ஒன்று விட்ட சகோதரி தலைமையில் அழைத்துவர மணமகள் இல்லம் செல்வார்கள்.

இந்த நிகழ்வு மணமகன் வீட்டாரின் உறவினர்கள் குறைந்த எண்ணிக்கையிலோ அல்லது அதிக எண்ணிக்கையிலோ கலந்துகொள்ளும் நிகழ்வாக இருக்கும். மணமகன் வீட்டார் வசதிகளுக்கேற்ப சிறிய ரக, பெரிய ரக வாகனங்களில் மண மகள் வீட்டிற்குச் செல்வார்கள். இது இரு வீட்டார்களுக்கு இடை யேயான தூரத்தைப் பொறுத்தது.

தமக்குரிய வாழ்க்கைத்துணையை இவ்விதம் வரவழைப்பதனை அவர்கள் வேதனையுடன் தான் இவ்வாறு அழைத்தார்கள்.

கிட்டத்தட்ட மாப்பிளை, மணப்பெண் கலந்து கொள்ளும் திரு மணச் சடங்கிற்கு ஒத்ததாகவே எல்லாம் நிகழும்.

மணமகள் அழைத்து வரப்படும்போது அவர்களின் இல்லத் தில் வைத்து மணப்பெண் தோழியை அருகில் இருத்தி போட்டோ, வீடியோ எடுக்கப்படும். அப்போதும் திருமணமாகாத இளம்பெண்களை நன்றாகப் பதியும் வண்ணம் படம் பிடிப் பார்கள். ஏனெனில் இது இன்னும் பல வெளிநாட்டுத் திரு மணங்களுக்கு வழிவகுக்கும் என்பதால் ஆகும். பெண்ணைப் பெற்றவர்கள் தமது மகளின் அழகு குறித்து கரிசனை எடுத்து அலங்காரம் செய்வார்கள். வழக்கமான திருமண நிகழ்வு போல் மணமகளின் உறவினர்களும் மணமகனின் உற வினர்களுமாக போட்டோ, வீடியோ எடுப்பார்கள்.

மணமகளுக்கு ஆரத்தி எடுக்கும் நிகழ்வும் நடைபெறும். இவை முடிந்த பின் மணமகள் வசதிக்கேற்ப காரிலோ அல்லது வானிலோ மணமகன் இல்லம் நோக்கி அழைத்தச் செல்லப்படு வாள். அங்கு மணமகன் இல்லத்தில் வாசலில் வைத்து சுமங்க லிப் பெண்களால் ஆரத்தி எடுத்து வரவேற்கப்படுவார். மணமக ளினதும் தோழியினதும் சாறிகள் திருமணக் கூறையை ஒத்ததாக ஒரு கலரில் இருக்கும். அவரவர் தமது வசதிக்கேற்ற வாறு அவற்றை வாங்குவார்கள். மணமகன் வீட்டில் வைத்தும் நிகழ்வுகளுக்கு வந்திருந்தவர்களுக்கு சிற்றுண்டிகள், மதிய உணவு என்பவை வழங்கப்படும்.

வெளிநாட்டுக்குச் செல்லவுள்ள தமது மருமகளை தமது குடும்ப உறுப்பினர்களுக்கு, இன பந்துக்களுக்கு அறிமுகப்படுத் துவதில் மிகுந்த ஆர்வம் காட்டுவார்கள். மாப்பிள்ளைவீட்டார்

(மணமகன் வீட்டார்) மணமகள் வீட்டில் அழைத்துவரும்போதே நல்லதொரு பெறுமதியான சாறியை அன்பளிப்பாகக் கொடுத்தே அழைத்து வருவார்கள். அந்தச் சாறி மணமகளின் வீட்டில் வைத்து அணிவிக்கப்படும். இரு வீட்டாரும் கலகலப் பாகப் பேசியபடி விருந்தோம்பல் நடைபெறும். வெளிநாட்டுக்கு மணமகளாகப் போக ஆவல்படும் பெண்கள் இந்த மாப்பிள்ளை இல்லாக் கலியாணத்தை ஆவல் பொங்கப் பார்ப்பார்கள். தாமும் ஒரு நாள் அவ்விதம் போவொமென மனதிற்குள் ஆசைப் பட்டார்கள். மணப் பெண்ணின் உற்றார் தமது இடங்களுக்குத் திரும்புவார்கள். மணப்பெண் அவ்வீட்டில் சில நாட்களோ அல் லது கொழும்பு செல்லும் வரையிலோ தங்கியிருப்பார். அங்கு அவருக்கு ராஜ உபசாரம் நடக்கும்.

மணப்பெண்ணை மனங்குளிரக் கவனித்தால்தான் வெளி நாடு சென்றால் தமக்கும் ஏதும் கிடைக்குமென்ற சுயநலத்துடன் கவனிப்போரும் இருந்தனர். தமது குடும்பத்தில் விளக்கேற்ற வந்த குலமகள், திருமகளெனப் போற்றி ஆதரிப்பவர்களும் இருந்தனர். மணப்பெண் மணமகனின் நெருங்கிய உறவினர், இனபந்துக்களின் வீட்டிற்கு விருந்து சாப்பிட அழைக்கப்படுவார். அதுபோல மணப்பெண் தன் பெற்றோர் சார்ந்த உறவினர்களா லும் விருந்துண்ண அழைக்கப்படுவார். விருந்துண்ணல் என் பது இரு பகுதியாலும் தடல்புடலாக நடத்தப்படும். மணமகனின் வீட்டாரினால் மணமகளைக் கொண்டு தம் இஷ்ட தெய்வங் களுக்கு பொங்கல் செய்வதெல்லாம் நிகழும்.

வெளிநாட்டுப்பயணம்அண்மித்தால்மணப்பெண்ணுக்கான விருந்துபசாரம் சில நாட்களே நிகழும். பயணம் காலதாமதமா

கினால் மணப்பெண் இரு வீட்டிலும் மாறி மாறி நிற்பார். கொழும்புக்கு போவதற்கான ஏற்பாடுகளை மணமகன் வீட்டார் மேற்கொள்வார்கள். சாத்தியமான வழிகளில் அப்பயணம் நடை பெறும். சில இடங்களில் மணப் பெண்ணின் அல்லது அவளின் குடும்பத்தவர்களின் குண நடை பிடிக்காது பொருந்திய சம்பந் தங்கள் முறிந்த நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளது.

மணமகன் இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு வந்து போகக்கூடிய நிலைமை இருந்தால் இரு வீட்டாரும் இணைந்து மணமகளை அழைத்துச் செல்வார்கள். அவ்வாறு சென்றால் மணமகன் வெளிநாட்டில் பெரும் கடனாளியாகி காலாதிகாலம் விலாசமாகச் செய்த கலியாணத்திற்காக உழைத்து உழைத்து கடனை கட்டிக்கொண்டிருந்தார். அவ்வாறு இல்லா விட்டால் கொழும்பில் வைத்து ஏஜென்சி ஒருவரைப் பிடித்து சில இலட்சம் ரூபா பணம் கொடுத்து அனுப்ப ஏற்பாடுகள் நடக்கும்.

கெட்டிக்கார ஏஜென்சியானால் மணப்பெண் கொழும்பிலி ருந்து ஒரே பாய்ச்சலில் வெளிநாட்டிற்கு அனுப்பப்படுவார். பணத்தொகை அதிகமானால் இப்படியாகப் போகலாம். மலி வான ஏஜென்சியைப் பிடித்து இந்தியா, மொஸ்கோ, துருக்கி, ஆபிரிக்கா நாடுகள் என மாதக் கணக்கில் இழுபட்டுக் கஷ்டப் படுவோரும் உள்ளனர். ஏஜென்சியிடம் ஏமாந்து அல்லற்பட்ட மணப்பெண்களும் இருந்தார்கள்.

கொழும்பில் மணப்பெண் போய் இறங்கியதும் மணமகன் வெளிநாட்டில் உழைக்கும் பணத்தில் கணிசமான பகுதியை தொலைபேசிக்குச் செலவழிக்க ஆரம்பித்து விடுவார். கெட்டிக் காரப் பெண்கள் சிலர் தந்திரமாகக் கதைத்துப் பணம் வாங்கி

அங்கு வைத்தே தமது வீட்டுக்குப் பணம் அனுப்பத் தொடங்கி விடுவார்கள். தமது சகோதர சகோதரிகளை வெளிநாடுகளுக்கு எடுக்கவும் அத்திவாரம் போடுவார்கள். இதனை அறிந்த மண மகனின் வீட்டார் மணப் பெண்ணின் வீட்டாருடன் சண்டை சச்சரவுபட்டு திருமணத்திற்கு முன்பே பிரிந்த குடும்பங்களும் சில இருந்தன.

புலம்பெயர் நாடுகளுக்குச் சென்ற எம்மவர் குடியுரிமை, வதி விட விசா பெற்ற காலப் பகுதி வந்தபோது மணமகள் இத்தகைய சடங்கு சம்பிரதாயங்களுடன் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படு வது அரு கிப் போனது.

மணமகன் இல்லாத மணப்பெண்ணின் திருமணச் சடங்கை ஒத்த ஒரு முறை எமது தமிழர் வாழ்வியலிலும் நடைபெற்றமை ஆவணப்படுத்தப்பட வேண்டியதொன்றாகும். காலத்தின் தேவைகளை நிறைவு செய்ய இது போன்ற சடங்கு மீறல்கள் அல்லது புதுமுறை காணுதல் பல நிகழ்ந்திருக்கின்றன. நிகழ்ந் தும் வருகின்றன. இது போன்ற நிகழ்வுகள் பிரதேசத் துக்குப் பிரதேசம் மாறுபட்ட வகையில் இருக்கும். அவையும் அவையும் ஆவணப்படுத்தப்பட வேண்டும்..

**ர்நன்றி - யாழோசை**



# சமூக மாற்றத்தை ஏற்படுத்திய யாழ்ப்பாணப் பெண்களும் சைக்கிளும்

யாழ்ப்பாணத்தில் பெண்களை சைக்கிளில் ஆண்கள் ஏற்றிச் செல்லாத ஒரு காலமும், அதேபோல பெண்கள் சைக்கிள் ஓடாத ஒரு காலமும் இருந்துள்ளது. பெண்கள் ஆண்களின் சைக்கிளில ஏறி ஓடப்பழக முற்பட்ட காலத்தை இன்றைய தலைமுறைக்கு தெரிய வாய்ப்பில்லை. இது பற்றி சற்றுப் பின்னோக்கிப் பார்ப்போம்.

இன்று பெண்கள் சைக்கிள் மட்டுமல்ல மோட்டார் சைக்கிள், கார், வான் எனச் சகல வாகனங்களையும் ஓடுகின்றனர். சைக்கிள் ஓடாத காலம் எம்மைக் கடந்து சென்ற மண் வாசனையாக இன்று மலருகின்றது.

யாழ்ப்பாணத்தில் மிக இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் கூடிய வாழ்க்கை முறைக்கு பேர்போன காலம் இருந்தது. பெண்ணானவள் மங்கைப் பருவத்தை அடைந்துவிட்டால்

பாடசாலைக்கு கல்வி கற்க அனுப்பாத காலம் அது. மங்கைப் பருவத்தை அடைந்த பெண்கள் உயர அடைக்கப்பட்ட கிடுகு வேலிகளுக்குள் வீட்டினுள் இருப்பார்கள். மாட்டு வண்டில் பயணம், பஸ் பயணம், குடும்பத்தவருடன் கால் நடைப் பயணம், கரிக்கோச்சி (Train) பயணம், கார்ப் பயணம் என்று பெண்ணின் பயணங்கள் ஒரு கூட்டமாகவே இருந்து வந்துள்ளன. லண்டன் BSA மோட்டார் சைக்கிள் யாழ்பபாணத்தில் புழக்கத்தில் இருந்த போது பெண்களை ஏற்றிச் செல்லமாட்டார்கள். சைக்கிளில் தந்தையுடனோ, சகோதரனுடனோ, கணவனுடனோ ஏறிச் செல்வது என்பது கற்பனையில்தான் கைகூடும். நிஜத்தில் கிடையாது. 1960 களின் ஆரம்பத்தில் திருமணம் செய்த ஐயா ஒருவர் தனது மனைவியை சைக்கிளில் ஏற்றிச்சென்ற முதல் பயணம் பற்றிக் கூறுகையில்:-

வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த நான் யாழ். நகர சுண்டுக்குளிப் பிரதேசத்தில் திருமணம் செய்தேன். திருமணத் தின் பின்னர் எனது மனைவியை ஹம்பர் சைக்கிளின் பின் கரியலில் ஏற்றிக்கொண்டு வீதியால் சென்றேன்.

அப்போது வீதியால் சென்ற இளைஞர்கள் "பொம்பிளையை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போறான்டோய்....." எனக் கத்திக் கூக்குரலிட்டார்கள்.

நான் அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்தும் என் மனை வியை சைக்கிளில் ஏற்றிச் சென்றேன். காலப்போக்கில் கூவ டித்த இளைஞர்கள் கூச்சலிடுவதைக் கைவிட்டார்கள்.

எனது முன்மாதிரியைப் பார்த்து பலரும் தமது மனைவி,

சகோதரி, தாய், மகள் எனப் பெண்களை சைக்கிளில் ஏற்றிச் செல்லத் தொடங்கினார்கள். இது யாழ். நகரப் பிரதேசத்தில் பெண்கள் சைக்கிளில் ஏற்றப்பட்ட ஆரம்பக் கதை.

நகரத்திலேயே இந்த நிலைமை என்றால் இறுக்கமான பண்பாட்டிற்கு பேர்போன கிராமங்களின் நிலை சொல்லித் தெரிய வேண்டியதில்லை. யாழ்ப்பாணக் குடாநாடு சைக்கிள் ஓடுவதற்கு மிக வாய்ப்பான சமதரையைப் பெருமளவில் கொண்டுள்ளது.

பஸ்போக்குவரத்தால் இணைக்கப்படாத பிரதேசங்களை அக்காலத்தில் சைக்கிள்கள்தான் இணைத்தன. 1900 ஆம் ஆண்டுகளின் ஆரம்ப காலங்களில் 'றலி' சைக்கிள் வைத்தி ருந்தவர்கள் பெரும் பணக்காரராகக் கருதப்பட்டனர். லண்டனில் உற்பத்தியான சைக்கிள் ஓடுவதைப் பார்ப்பதற்கென மக்கள் காத்திருந்தனர்.

காலச் சக்கரம் மெல்ல மெல்ல உருண்டோட 1950 ஆம் ஆண்டு தொடக்கம் 1970 ஆம் ஆண்டு வரை சைக்கிள் நடுத்தர வர்க்க மக்களின் வாகனமாகியது.

இக்காலத்தில்தான் பெண்களை சைக்கிளில் ஏற்றும் மௌ னப் புரட்சி மெல்ல மெல்ல உருக்கொண்டு வளர்ந்தது.

1970 ஆம் ஆண்டிலிருந்து 1977 ஆம் ஆண்டு வரை வெளி நாட்டிலிருந்து பொருட்களை பெருமளவில் இறக்குமதி செய்யாத இறுக்கமாக மூடப்பட்ட பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. கம்யூனியஸ நாடுகளுடன் பெருமளவில் வணிகக் கொடுக்கல்வாங்கல்கள் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன.

அதனால் சீன அரசாங்கத்தின் அன்பளிப்பாக 1975 இல் கொழும்பு 07 இல், பண்டாரநாயக்க நினைவு சர்வதேச மாநாட்டு மண்டபம் (BMICH) கட்டிக்கொடுக்கப்பட்டது. ஸ்ரீமாவோ அரசாங்கத்தின் கம்யூனியஸ நாடுகளுடனான வணிக உறவின் வரவாக சீனத் தயாரிப்பான பிளையிங் பிஜென் (Flying Pigeon) என்ற பெண்கள் சைக்கிள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டது. அப்போது யாழ்ப்பாண நகரக் கடைகளிலும் இச் சைக்கிள் விற்பனைக்கு வந்தது.

நகரப் பிரதேசம், புறநகர் பிரதேசங்களைச் சேர்ந்தோர் பிளையிங் பிஜெனை வாங்கித் தமது பெண்பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்தார்கள். அதற்கு முன்னோடியாக வீடுகளில் நின்ற ஆண்களின் சைக்கிளை ஓடப் பழகினார்கள்.

அவ்வாறு ஓடிப் பழகியே பெண்கள் சைக்கிளை ஓடத் தொடங்கினார்கள். ஆரம்ப காலங்களில் இளம் வாலிபர்கள் சைக்கிள் ஓடிய பெண்களைப் பார்த்து கூச்சலிட்டார்கள்.

அதனால் ஆண்கள், பெண் பிள்ளைகளுக்கு காவலாகச் செல்வதும் வழக்கமாகியது.

பெண்களும் விடாப்பிடியாக தமது போக்குவரத்துத் தேவை களை தாமே சைக்கிளில் ஓடி நிறைவேற்றத் தொடங்கினார்கள். காலப்போக்கில் இளைஞர்கள் கூவடிப்பதை நிறுத்தி விட்டனர். பெண்களின் சைக்கிளோடும் படலம் நகரம், கிராமம் என குடா நாடெங்கும் வியாபித்து வளர்ந்தது.

1977 இல் திறந்த பொருளாதார யுகத்தின் வருகையால் ஜப்பானிய ஏசியா, இந்திய ஹீரோ ஈஸ்ரேர்ண் என பல

சைக்கிள்கள் பெண்களுக்காக வந்தன.

பாடசாலைகள், பல்கலைக்கழகம் என எங்கும் பெண்களின் சைக்கிளால் நிறையத் தொடங்கியது.

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தின் பின்னர் உள்நாட்டுப் போர் தீவிரம் அடையத் தொடங்கியது.

1985, 1986 ஆம் ஆண்டுகளில் பெண்களும் விடுதலைப் போராட்டத்தில் இணைய ஆரம்பித்தனர். அப்போது சைக்கிள் போராளிப் பெண்களின் பிரதான வாகனங்களாகியது.

1990 ஆம் ஆண்டு போராட்ட காலத்தில் பெண்கள் மோட்டார் சைக்கிள் ஓடும் காட்சியை வடமாகாணமெங்கும் சர்வ சாதாரணமாகக் காணமுடிந்தது.

பிக்கப், வான், கார் போன்ற வாகனங்களை அவர்கள் அநாயசமாக ஓடத் தொடங்கிய காட்சியை ஏனைய பெண்கள் பார்த்தனர். தாமும் இவ் வாகனங்களை ஓடினால் என்ன என்ற சிந்தனை எழுந்தது. மெல்ல மெல்ல தாமும் வாகனங்களைத் ஓடத் தொடங்கினார்கள்.

முதலில் ஜப்பானிய தயாரிப்பான சார்ளி (Charly) எனும் சிறிய ரக மோட்டார் சைக்கிளை1980 களில் ஓடினார்கள். பின்னர் 1996 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் கப்பலில் வாகனங்கள் தாராளமாக வந்து இறங்கத் தொடங்கின. இப்போது பெண்கள் ஜப்பானிய சுப்பர் கப் 50, சுப்பர் கப் 90 , யமஹா மேற் போன்ற மோட்டார் சைக்கிள்களை வாங்கி ஓடும் படலம் பரவத் தொடங்கி விட்டது.

கார் ஓடுவதும் சர்வசாதாரணமாகிவிட்டது. இப்போது இந்தியத் தயாரிப்பு மோட்டார் சைக்கிள்கள் சந்தையை நிறைத்துவிட அதில் ஏறிப் பறக்கின்றார்கள். வீட்டுக்கு வீடு சைக்கிள் என்ற காலம்மலைஏறிவீட்டுக்குவீடுவளர்ந்தோர்ஒவ்வொருவருக்கும் ஒரு மோட்டார் சைக்கிளென காலம் மாறிவிட்டது.

1990 - 1996 காலப் பகுதியில் மிகவும் வறிய குடும்பப் பெண்கள் சிலர் சைக்கிளில் வவுனியா வரை சென்று வியாபாரப் பொருட்களை வாங்கி வந்தனர். காடு, கரம்பை எல்லாம் கடும் இருட்டிலும் இரண்டு நாள் மூன்று நாளாக பெண்கள் வியாபாரத்திற்கும் சென்று வரக் கூடியதாக அக்காலம் பாதுகாப்பானதாக இருந்தது.

சைக்கிள் வைத்திருந்தவர் பணக்காரரர் என்ற காலம் மாறி சைக்கிள் மட்டும் வைத்திருப்பவர்கள் ஏழை என்ற காலம் இப்போது வந்துவிட்டது. சைக்கிளில் ஏறிப் போக முடியாதிருந்த பெண்களின் யுகம் போய்விட்டது. இப்போது பெண்கள் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற நூற்றுக் கணக்கில் படை எடுக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் போர்க்காலங்களில் எல்லாம் பெண்களுக்கும் ஆண்களுக்கும் பெரிதும் கைகொடுத்தவை இந்தச் சைக்கிள்கள்தான்.

பெண்களின் சைக்கிள் புரட்சி தெரியாத சந்ததிக்கு இவ் எழுத்து ஆவணம் நிச்சயம் உதவும்.

**நன்றி - யாழோசை 2012 ஜுலை 25**



# கால வெள்ளத்தில் கரைந்துபோன மாலைநேரச் சந்தைகள்

ஏழைகளின் சந்தைகள் காலவெள்ளத்தில் அள்ளுண்டு காணாமல் போய்விட்டன என்றார் யாழ். வடமராட்சிப் பிரதேசத் தைச் சேர்ந்த மூத்த பிரசை ஒருவர்.

அந்த மூத்தவரின் அனுபவப் பகிர்வுகளை இவ்வாரம் யாழோசையில் எம்மைக் கடந்து சென்ற மண்வாசனையில் பதிவாக்குகிறேன். நெல்லியடிக்கும் மந்திகை அரச மருத்து வமனைக்குமிடையே பருத்தித்துறை வீதியில் இருக்கும் மாலு சந்தி என்ற பிரதேசத்தைப் பலரும் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

அப் பிரதேசத்தில் இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்பாக மாலை நேரச் சந்தை ஒன்று கூடியதாக அக்காலம் தெரிந்த பெரியோர்கள் கூறுகின்றனர். அவ்விடம் மாலைச் சந்தையென அழைக்கப்பட்டது. பின்னர் அது மருவி மாலுசந்தியென வந்ததா

கக் கூறுகின்றனர்.

மாலு என்றால் சிங்களத்தில் மீன் எனப் பொருள்படுகின்றது. இதனால் மீன் விற்ற சந்தியென வாதிடும் சிலரும் உள்ளனர். ஆனால் அது பொருந்தாது. ஏனெனில் மாலுவை மீனெனக் கொண்டால் சந்தி என்பதற்கு 'ஹந்திய' எனும் சிங்களச்சொல் தான் வழக்கத்தில் வரவேண்டும். ஆகவே மாலுஹந்திய என்று தான் வந்திருக்க வேண்டும்.

முற்றிலும் தமிழ் மக்கள் வாழும் இப் பிரதேசத்தில் மாலை நேரச் சந்தை இயங்கியது என்பதே மெய்யானதாகும். எனவே மாலைச் சந்தைதான் மருவி மாலுசந்தியாக வந்துள்ளது என லாம்.

புராதன காலத்தில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார முறைமைக்கு விவசாயத் தொழில் களில் ஈடுபட்டோருக்கு மாலை நேரச் சந்தைதான் பொருள்களை வாங்குவதற்கு உகந்ததாக இருந்திருக்கிறது.

அத்துடன் குடும்பப் பெண்கள் வீட்டுவேலைகள், சமையல் என்பவற்றுடன் கைவினைப் பொருள்களையும் செய்து மாலை நேரச் சந்தைகளில் விற்பதுதான் பொருத்தமானதாக இருந்தது. இந்த மாலைச் சந்தை முறைமை அவ்விடத்தில் வழக்கற்றுப் போகும் கட்டத்தில் மாநாண்டி சந்தை, கோயில் சந்தை ஆகிய இடங்களில் மாலை நேரச் சந்தைகள் தோற்றம் பெற்றன. இவை அக்காலத்து ஏழைக்கூலித் தொழிலாளர்களின் வாழ்க்கை முறைமைக்கு பெரிதும் கைகொடுத்தன. மாலைநேரம் சந்தை ஆரம்பமாகும் இரவு நேரத்தில் சனத்திரள் நிறைந்து களைகட்ட

ஆரம்பிக்கும். அக்காலத்தில் இப்போதையதைப் போல மின்சார வசதிகள் எங்கும் இருக்கவில்லை.

இதனால் இச்சந்தைகளில் இரவு நேரத்தில் பித்தளையிலான கைவிளக்கு வெளிச்சத்தில் வியாபாரிகள் தமது விற்பனைப் பொருள்களைப் பரவி வைத்திருப்பார்கள்.

விளக்குகளின் வெளிச்சங்கள் அடுத்தடுத்து வருவதைப் பார்க்கும்போது சற்றுத் தூரத்தில் நிற்கும் ஒருவருக்கு விளக்கீடு ஒன்று நாளாந்தம் நடப்பது போன்ற காட்சிதான் கண்ணுக்குப் புலப்படும். ஆண்கள் நாளாந்தக் கூலி வேலைக்குப் போய் களைத்துவரும்போது ஓட்டமும் நடையுமாக மாநாண்டி சந்தை, கோயில்சந்தை போன்ற இந்த மாலைநேரச் சந்தைகளுக்குச் செல்வார்கள்.

அங்கு தமது குடும்பத்தின் அன்றைய இரவுத் தேவைகளுக் கும் அடுத்தநாள் பகல் தேவைகளுக்குமாக மரக்கறி உட்பட ஏனைய உணவுப் பொருள்களை வாங்குவார்கள்.

அதிகாலையில் வேலைக்குச் செல்லும் இவ் ஏழைக் கூலித் தொழிலாளருக்கு இந்த மாலை நேரச் சந்தை பெரியதொரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது. இவர்களுக்கு காலையில் கூடும் சந்தைகளுக்குச் சென்று பொருள்களை வீட்டுத் தேவைக்கு வாங்கமுடியாது. அதற்கான நேரமும் இருக்காது. அக்காலத்தில் சைக்கிள் தான் வசதி படைத்த மனிதர்களின் வாகனமாக இருந்து வந்தது. அதனால் சைக்கிளில் அதிகாலை சந்தைக்குப் போய் பொருள்களை வாங்கிக் கொடுத்துவிட்டு கூலி வேலைக்குப் போவதென்ற பேச்சுக்கே இடமில்லை.

ஓட்டமும் நடையுமாகத்தான் இவ் ஏழைக்கூலித் தொழிலாளர்களின் வெளியிடப் பயணம் அமைந்தது.

மழைக்காலமென்றால் குடை வாங்க வசதியற்ற இவர்கள் பொலித்தீன் பைகளைத் தலைக்குக் கட்டியவாறு அல்லது காவோலையைப் பிடித்தவாறு பயணித்ததை இக்கால பழுத்த மூத்தோர்கள் நினைவு கூருகின்றனர்.

காலில் செருப்புமின்றி பகல், இரவு, பனி, மழை, வெய்யில், கல், மண் எல்லாம் நடந்தே திரிந்தார்கள். அவர்களது கால் பாதங்கள் காய்த்துப் போயிருக்கும். காலில் முள்ளுப்பட்டால் குத்தாது. அது முறிந்து போவதற்கான சந்தர்ப்பங்களே அதிகம்.

இன்றைய காலத்துடன் அவர்களை ஒப்பிட்டுப் பாருங்கள். கூலி வேலை செய்வோர்களில் கணிசமானோர் இன்று சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்துள்ளார்கள். தலையில் ஹெல்மட்டுடன் மழை வந்தால் மழைக்கவசத்துடன் பயணிக்கின்றார்கள். மிகுதி கூலித் தொழிலாளர் யாவரும் சைக்கிள் வைத்துத்தான் இருக்கின்றார்கள்.

மீண்டும் அக்கால மாலைநேரச் சந்தைக்குப் போவோம். அக்கால வீட்டுப் பெண்கள் பகலில் வீட்டு வேலைகளுடன் பனை ஓலைச் சார்வுகளைக் கொண்டு பன்னவேலைகள் செய்தார்கள். நீத்துப் பெட்டி, கடகம், பாய், பனை ஓலைத்தொப்பி, பெட்டி, பந்திப்பாய், மூடல்பெட்டி போன்றவற்றை இழைப்பதில் ஈடுபடுவார்கள்.

இந்த பன்ன வேலைப் பொருள்களை இச் சந்தைகளில்

மாலை நேரத்தில் சந்தைப்படுத்த முடியும். சாதாரணமாக ஒரு குடும்பப் பெண் நாளாந்தம் குறைந்தது ஒரு ரூபாய் என்றாலும் விற்றுத்தான் வருவாள். விற்ற பணத்தில் வீட்டுக்குத் தேவை யான பொருள் ஒன்றை வாங்குவார்கள் அல்லது வியாபாரி களிடம் விற்ற பொருளின் பணம் சேர விட்டு அவற்றைச் சீட்டுப் பணம் கொடுப்பதற்கு வாங்குவார்கள்.

வடமராட்சிப் பிரதேசக் குடும்பப் பெண்கள் அக்காலத்தில் சேமிப்பு முறைமைகளில் மிகுந்த திறமைசாலிகளாக இருந்தார் கள். கணவன் கொண்டுவரும் பணத்துடன் தமது பிரயாசை யினால் உழைத்த பணத்தையும் கொண்டு சிக்கனமாக வாழ்வ திலும் சேமிப்பு முறைமைகளின் மூலமாக வாழ்க்கைத் தரத்தை மெல்ல மெல்ல அதிகரிப்பதிலும் நாடறிந்த திறமைசாலிகளாக இருந்தார்கள். இக்காலத்திலும் அதன் சுவடுகளைக் காண முடிகின்றது.

மாலைநேரச் சந்தை நிலவிய காலத்தில் ஏழைக் கூலித் தொழிலாளரின் குடும்பங்கள் பல இரவு நேரம் தான் வயிறார உண்ணும் வழக்கமிருந்தது. மூன்று நேரம் வயிறார உண்ணும் வழக்கம் அக்காலத்தில் பெருமளவு இருக்கவில்லை. ஏழ்மை காரணமாக இரு நேரம்தான் வயிறார உண்டனர். இரவு நேரம் மண்பானையில் அரிசியிட்டு சோறாக்கி கறியுடன் சேர்த்து அவற்றை உண்டு, எஞ்சிய சோற்றைக் காலையில் வைத்து பழங்கறிகளுடன் கலந்து பழஞ்சோறாக உண்ணும் வழக்க மிருந்தது.

இரவு நேரம் தண்ணீர் விட்டு வைத்து அதிகாலை எழுந்து பழஞ்சோற்று நீரை மூக்குப்பேணியில் வடித்துக் குடித்தார்கள்.

இதனால் மலச்சிக்கல் ஏதுமின்றி ஆரோக்கியமான வாழ முடிந்ததாக அக்கால மூத்தோர்கள் கூறுகின்றனர்.

காலச்சக்கரம் சுழலத் தொடங்கியது. உள்நாட்டு யுத்தம், பணவசதிகளின் பெருக்கம், தொழில்நுட்ப வசதிகள், இயந்திர சாதனங்களின் வருகை ஆகியவவை வாழ்வியல் கோலங்க ளைப் புரட்டிப் போடத் தொடங்கியது.

இரவு நேரப் புழக்கம் பாதுகாப்பு அச்சம் காரணமாகத் தடைப் பட்டுப்போனது. மாலைநேரச் சந்தை இரவு வரை நீடிப்பதனைத் தடைசெய்யது. சைக்கிள்கள் குடும்பத்தில் வளர்ந்தோர் ஒவ் வொருவருக்கும் ஒன்றென வந்தபோது போக்குவரத்து இலகு வாகியது. இதனால் மாலைநேரச் சந்தையின் தேவை அவசி யமற்றதாகியது.

அதிகாலையில் சந்தைக்குச் சென்று வீட்டுக் குத் தேவை யானவற்றை வாங்கிக் கொடுத்துவிட்டுச் செல்லும் முறைமை வந்தபோது மாலை நேரச் சந்தையின் அவசியம் குறைந்து போனது. நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித் துறை சந் தைகளில் பிரமாண்டமாய் வியாபாரம் நடைபெற்ற போது மாலைநேரச் சந்தைகளின் மவுசைக் குறைத்துப்போகச் செய்து விட்டது.

மாநாண்டிச் சந்தை காலை முதல் மதியம் வரை மீன் வியாபாரம் பெருமளவுக்கு நடைபெறும் தன்மையுடன் இயங்கி வருகிறது. மாலைநேரம் சந்தை வெறிச்சோடிப் போகின்றது. கோயில் சந்தை மாலைநேர மீன் சந்தை என்ற அடையாளத்தைப் பெருமளவுக்குப் பெற்று இயங்கிவருகின்றது.

முன்னைய காலத்துடன் ஒப்பிடும்போது மிக வறியோரின் எண்ணிக்கை பெருமளவுக்கு குறைந்துவிட்டது. யாழ். குடாநாடு விவசாயத்துடன் பின்னிப் பிணைந்த வகையில்தான் பெரு மளவுக்கு அன்று இருந்தது. இதன் பண்பாட்டு அம்சத்தின் அடை யாள ஆவணமான மாலைநேரச் சந்தைகள் இரண்டும் நினைவு கூரப்பட வேண்டியவை.

பிளாஸ்ரிக், பொலித்தீன்களின் வருகையும் பணவசதிகளின் உயர்வும் இன்று வடமராட்சிப் பிரதேசத்தில் பெட்டி, பாய், கடகம், நீத்துப்பெட்டி செய்யும் பன்னவேலை யுகத்தைப் பெருமளவில் காணாமல் போகச் செய்துவிட்டது. இயந்திரத்தனமான வாழ்க்கை முறை ஒன்றினுள் நுழைந்துவிட்ட இவர்களில் பெரும் பாலானோர் ஓய்வு நேரங்களில் இலத்திரனியல் யுகத் தால் ஆளப்படுகின்றார்கள்.

கேபிள் ரி.வியில் படம், தொடர்நாடகம் பார்ப்பது தான் பிர தான பொழுது போக்காக உள்ளது.

பன்னவேலை செய்வது பனாட்டு போடுவது அவர்களது பிள்ளைகளால் நாகரிகம் குறைவாகப் பார்க்கப்படும் மனநிலை யும் உருவாகி இருப்பது விநோதமான ஒன்றுதான்.

காலமாற்றம் பண்பாட்டிலும் மட்டுமல்ல மனதிலும் மாற் றங்களை விதைத்துவிட்டது. எம்மைக் கடந்து சென்ற இன் னொரு மண்வாசனை நிகழ்வை அடுத்தவாரமும் அசைபோட்டுப் பார்ப்போம்.

**நன்றி - யாழோசை 2012 ஏப்பிரல் 20**



## தலைமுறைகள் கடந்து வாழக் கூடிய நூல்

வேதநாயகம் தபேந்திரன் என்ற பெயரைக் கூறியதும் யாழ்ப்பாண நினைவுகள் நூலின் ஆசிரியர் தானே எனச் சாதாரண குடிமகனும் சொல்லுமளவுக்கு இலங்கையின் சகல பாகங்களிலும் எழுத்தாளுமையால் தனது பெயரைப் பதித்துவிட்டார். இவர் எனது கல்லூரி காலத்து நண்பன். யாழ். இந்துக் கல்லூரியில் என்னை விடவும் ஒரு வகுப்பு இளையவர்

கல்லூரி காலத்திலேயே இவரிடம் மிகையான எழுத்தாற்றல் இருந்ததை நான் அறிவேன். எதிர்காலத்தில் ஒரு பெரிய எழுத்தாளனாக வருவார் என நான் நினைத்தது இன்று நிறைவேறிவிட்டது. யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 1 , 2 , 3 என தொடராக நூல்கள் வெளியிட்டு யாழ்ப்பாண வாழ்வியலின் சகல பாகங்களையும் சுவைபடக் கூறுகின்றார். தொழில்நுட்பம், போர், காலமாற்றம் என்பவை யாழ்ப்பாணப் பண்பாட்டை எவ்விதம் பாதித்தது என்பதை இலகு தமிழில் யாவரும் விளங்கக் கூடிய வகையில் கூறுவதே இவரது எழுத்தின் வெற்றியாகும்

தட்டிவான், சவாரிப் போட்டிகள் போன்ற யாழ்ப்பாணத்திற்கே உரித்தான பாரம்பரிய செயற்பாடுகள் இன்றைய நவீன தொழில்நுட்பங்க ளின் வளர்ச்சி காரணமாக அருகிவிட்டன. சில அற்றுப்போய் விட்டன

யாழ்ப்பாண நினைவுகள் முதலில் ஞாயிறு தினக்குரலில் வெளிவந்த போது அதனை எமது தினகரன் வாசகர்களுக்காக எமக்கும் சில காலம் எழுதினார். அவை வாசகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றன. எழுத் துத்துறையில் மட்டுமல்ல பொதுச் சேவையிலும் அவர் பிரகாசிக்க அவரது இல்லத் துணைவியார் உதவுவது அவருக்கு கிடைத்த வரப்பிரசாதம் ஆகும்

யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 4 ஐ எமது மக்கள் புலம்பெயர்ந்து வாழும் ஐரோப்பிய நாடுகளில் வெளியிட்டு அங்கும் தொடராக அறிமுக விழாக்களை நடத்தி அதன் மூலம் எமது எதிர் காலச் சந்ததியினர் இவற்றை விளங்கச் செய்ய வேண்டும் என்பது எனது விருப்பமாகும்

**தேவதாசன் செந்தில்வேலவர்**
முதன்மை ஆசிரியர், தினகரன் வார மஞ்சரி
லேக்ஹவுஸ், கொழும்பு - 01

ISBN 978-955-41-3924-4
9 789554 139244

தேவி Printers, Jaffna